[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont*.

MR. SPEAKER : Hon. Members are now requested to move their respective amendments to the Motion on the Governor's Address. The amendments need not be read out in full, but hon. Members may stand up in their places and move the amendments they have given notice of.

SRI A. RATNAM : Sir, I move the following amendment :—

" *Add* at the end the following :—

' but regret to note that the Governor has not been properly advised by his Council of Ministers in regard to taking effective steps on the following :—

(*a*) the failure to mention the grievances of N.G.Os., the relief to be given to them and the action taken to redress their grievances:

(*b*) to grant facilities to the labouring classes and to eradicate beggary in the State :

(*c*) the failure to inform about the feelings of the Scheduled Castes and other minorities in the State who are agitating for their ten demands given notice in August 1955; and

[Sri A. Ratnam] [10th August 1956

the Minister's commitments in writing towards their uplift: and the action of the Government in spending the amounts provided in the Budget and Five-Year Plan for the Criminal Tribes in the name and allotment of funds on "Scheduled Castes and Scheduled Tribes uplift";

(*d*) steps to relieve growing unemployment in the State;

(*e*) failure of the Government to implement the "Slum Improvement (Land Acquisition) Act";

(*f*) failure of the Government to distribute waste and poramboke lands to Harijans and landless poor;

(*g*) failure of the Government to establish more hospitals and medical colleges to remove the growing difficulties of the patients and trainees;

(*h*) the need for starting more industries and engineering colleges in view of the difficulties caused to students in getting admission to technical institutions and engineering colleges;

(*i*) failure to mention about the anti-religious activities in Tamil Nad and the action taken by the Government;

(*j*) the failure to express the acute difficulties in the Government General Hospital and the Government Stanley Hospital in the City of Madras causing greater inconveniences and difficulties to get proper medical treatment and admissions to the poor public and steps to be taken to maintain fair administration; and

(*k*) failure to mention the deterioration of general public health in Madras City (North) and the prevalence of epidemic diseases like cholera, smallpox, etc.' "

SRI S. DAIVASIGAMONEY : I second the amendment.

SRI K. P. GOPALAN : I move the following amendment :—

" *Add* at the end the following :—

" but regret to note that no mention was made in the Address on the following problems :—

(1) the flood havoc in Malabar and South Kanara in the last week of June and first week of July 1956 which caused great hardship, misery and distress and even loss of life to the people of South Kanara and Malabar;

(2) the destruction of 1,000 houses in Neelaswaram firka alone in South Kanara district, Kasaragod taluk and destruction of about 500 houses in Malabar owing to flood and the miserable position of thousands of people becoming homeless and also loss of properties worth lakhs of rupees;

(3) the inadequate relief measures and compensation given to the victims of flood by the Government;

(4) no proper assessment was made in the Address regarding the serious food situation existing in the State especially in Malabar owing to the rise in price of rice and other essential

10th August 1956] [Sri K. P. Gopalan]

commodities by about 50 per cent and above and the failure of the Government to bring down the price level of the essential commodities including rice and to open adequate number of fair price shops in Malabar on the basis of village, ward and factory;

(5) the failure of the Government to open fair price shops in the plantation estates of Malabar and other estates in the State for the benefit of thousands of estate workers whose conditions are peculiar and are not in a position to get rice at fair price within their reach; and

(6) no mention was made in the Address regarding the measures which the Government failed to take on the following points regarding the workers and labourers in the State:—

(*a*) increase in the wages of the workers in the State by 25 per cent,

(*b*) fixation of minimum wages in many industries,

(*c*) bonus question of the workers in the State,

(*d*) non-recognition of trade unions and trade union rights by the employers,

(*e*) stopping of victimization, dismissals, retrenchments, closure of factories, non-implementation of awards, reduction of wages, etc., that are going on in the State,

(*f*) delay in publishing the enquiry report on beedi industry submitted to the Government by the Special Officer appointed by the Government and delay in bringing legislation on beedi industry,

(*g*) failure of the Government to exempt all applications, appeals and vakalats sent by workers in the industrial courts, etc., from affixing court-fee stamps for Rs. 2 as per the existing labour laws of the State, and

(*h*) non-fixation and revision of minimum wages to the workers under local bodies and municipalities, Highways, etc., and the failure of the Government to constitute committees or other machinery to enquire into their conditions and submit reports to Government as early as possible;

(7) the failure of the Government to introduce electricity in the Community Block area of Payyanur, North Malabar, and other National Extension Scheme Blocks in Malabar even though money was allotted for introducing electricity in these development areas by Government;

(8) the failure of the Government to allot due share from the Handloom Cess Fund to Malabar for the benefit of handloom industry and handloom workers of Malabar;

(9) no mention was made in the Address regarding the miserable conditions of the N.G.Os. in the State and no proposal to take steps to ameliorate their conditions on the question of increase in salary, dearness allowance, service conditions, etc., on a par with the conditions of the Central Government employees and in accordance with the recommendations of the Pay Commission;

[Sri K. P. Gopalan] [10th August 1956

(10) no mention was made in the Address regarding the failure of the Government to increase the salary, dearness allowance, service conditions, etc., of the village officers in the State;

(11) the failure of the Government to constitute an enquiry committee consisting of members of the Legislature from Tamilnad and Malabar to enquire into the allegations made by responsible persons in Malabar regarding the removal of machinery and other movable properties from Malabar on the eve of the States Reorganization so as to remove apprehensions in the minds of the people and maintain good and cordial relationship between Tamil and Malayalee people; and

(12) release of political prisoners lodged in various jails and in the Central Jail, Cannanore, on the inauguration of the reorganization and formation of linguistic States.' "

SRI K. T. RAJU : I second the amendment.

SRI M. NARAYANA KURUP : I move the following amendment :—

" *Add* at the end the following :—

'but regret to note that adequate emphasis has not been laid on the steady and abnormal increase in the price of food-grains, its implications and measures to combat it.' "

SRI K. T. SREEDHARAN : I send the amendment.

SRI P. K. GOPALAKRISHNAN : Sir, I move the following amendment :—

" *Add* at the end, the following :—

'but regret that no mention was made in the Address on the following :—

(1) failure of the Government to open fair-price shops in all villages in Malabar which is a highly deficit district;

(2) apprehension caused in the minds of the people on account of the transfer of machinery and other movables from Malabar on the eve of the Reorganization of the States;

(3) failure of the Government to comply with the reasonable demands made by the N.G.Os. of the State;

(4) failure of the Government to meet the grievances of the village officers in the State; and

(5) formation of a Kerala State Legislature consisting of Members of the Madras Legislature from Malabar district and Kasaragod taluk and Members of the dissolved Travancore-Cochin State Legislature from those areas which are to be part of the future Kerala State, after reorganization of the States.' "

SRI T. C. NARAYANAN NAMBIAR : I second the amendment.

10th August 1956]

SRI M. NARAYANAN NAMBIAR: Sir, I move the following amendment:—

"*Add* at the end, the following:—

'but regret to note that no mention has been made to the damages caused by recent floods in Kasaragod taluk and to the difficult food situation in Kasaragod taluk, South Kanara.'"

The amendment was duly seconded.

DR. K. B. MENON: Sir, I move the following amendment:—

"*Add* at the end, the following:—

'but regret to note that adequate attention has not been given in the Address to the consequences resulting from the Reorganization of States in relation to Malabar and South Kanara.'"

The amendment was duly seconded.

SRI K. T. RAJU: Sir, I move the following amendment:—

"*Add* at the end, the following:—

'but regret to note that no mention has been made in the Address on the following:—

(1) the measures the Government propose to take to relieve the hardship caused by way of collecting water-cess forcibly with the aid of the police, to many of the ryots in Modakurichi firka in Erode taluk of Coimbatore district and other places in the Lower Bhavani Project ayacut who have not been given the facility to use the water for lack of sluice facilities or other causes;

(2) the need to cancel the crop control now in force in Lower Bhavani Project ayacut of about 2,07,000 acres which is very seriously affecting the ryots economically;

(3) the need to remove the penalty levied on the ryots who cultivated paddy utilizing the seepage water in the Lower Bhavani Project ayacut area;

(4) the need to fix a fair price for commercial crops such as tobacco, groundnut, cotton, turmeric, etc.;

(5) the relief measures to be taken to wipe out rural indebtedness;

(6) the need to exempt from sales tax food articles and to levy sales tax at single point for all other commodities.'"

SRI T. C. NARAYANAN NAMBIAR: I second the amendment.

SRI K. KUNHI MOHAMED SHAFEE: Sir, I move the following amendment:—

"*Add* at the end, the following:—

'but regret—

(*a*) that no mention is made of the future of the Members of Malabar district and of Kasaragod taluk of South Kanara district of this House immediately after the Reorganization of the States;

[Sri K. Kunhi Mohamed Shafee] [10th August 1956

(*b*) that no suggestions have been offered in order to avoid extension of President's Rule from the Travancore-Cochin State to Malabar district and to Kasaragod taluk;

(*c*) that no suggestion has been made to associate the people of Malabar through their elected representatives in the division of assets and liabilities and other vital matters connected with the separation of Malabar from Madras State;

(*d*) that no mention has been made about the adequate and effective representation of the Muslims and other minority communities in the Legislatures, local bodies and Administrative Services; and

(*e*) that no protection has been suggested to afford relief to the Muslim community from the handicaps resulting from the enforcement of the provisions of the Madras Building Rules regarding the construction, extension and repairs of mosques, madrassas and similar religious institutions.' "

The amendment was duly seconded.

MR. SPEAKER : The hon. Member Sri C. Kandasamy who has given notice of amendment No. 9 is not in his seat.

The hon. Member Sri S. Ramalingam who has given notice of amendment No. 10 is not also in his seat.

SRI K. MADHAVAN NAMBIAR : Sir, I move the following amendment :—

" *Add* at the end, the following :—

' but regret to note that—

(1) the Address has failed to mention anything about complaints raised by certain responsible persons in Malabar regarding transfer of movables such as machines, elephants, etc., from Malabar in view of the impending reorganization of the States;

(2) the Address has failed to recommend the formation of a popular Government and State Legislature for Kerala after the reorganization of the States, consisting of elected members from Malabar district and Kasaragod taluk in the present Madras Legislature and Members of the dissolved Travancore-Cochin Legislature from those areas which are to be the part of Kerala State;

(3) the Address has failed to mention anything about the recent flood and cyclone that worked havoc in the West Coast;

(4) the Address has failed to mention anything about the rise in prices of daily necessaries of life other than rice and has also failed to point out the failure of the Government to open fair price shops in all localities so as to bring down the price of rice;

(5) the Address has failed to mention anything about the fall in the price of pepper, jaggery, etc.;

10th August 1956] [Sri K. Madhavan Nambiar]

(6) the Address has failed to recommend single point sales tax for all food articles;

(7) the Address has failed to mention anything about the grievances of the non-gazetted officers in the State and the remedial measures;

(8) the Address has failed to mention anything about the grievances of village officers and the remedial measures;

(9) the Address has failed to mention anything about fixing minimum wages for agricultural labourers;

(10) the Address has failed to mention anything about the crisis that may arise in the employment situation on account of introduction of power-looms in the handloom sector;

(11) the Address has failed to mention anything about the condition of workers engaged in the beedi industry;

(12) the Address has failed to mention anything about implementing the recommendations of the Land Reform Panel of the Planning Commission; and

(13) the Address has failed to state anything about nationalization of private forests in Malabar.' "

The amendment was duly seconded.

SRI T. C. NARAYANAN NAMBIAR: Sir, I move—

" *Add* at the end, the following :—

' but regret to note—

(1) that the Governor was ill-advised by the Council of Ministers when it is stated in paragraph 2 of the Address that ' some of the predominantly Tamil-speaking areas of Travancore-Cochin State will merge with this State ', which will embitter the feelings of the people of the predominantly Malayalam-speaking areas of this State to be included in the proposed Kerala State;

(2) that the Address is unrealistic when it did not take into consideration the agitation of the village officers and failed to assure them that suitable measures will be taken to grant them at least the educational and medical concessions given to non-gazetted officers and teachers pending final decisions as regards improving their conditions of service, etc.;

(3) that the Address has not mentioned about the step taken for granting an *Ad hoc* increase of at least 25 per cent in the emoluments of all non-gazetted staff under the State Government and also to appoint a Pay Commission to enquire and report on the need to revise their scales of pay, etc.;

(4) that the Address has not mentioned the measures the Government propose to take to remove the apprehension and anxiety among the Malayalees caused by the alleged cutting of trees, removal of livestock including five elephants and valuable properties from Malabar;

[Sri T. C. Narayanan Nambiar] [10th August 1956

(5) that the Address has not assured the minority sections of the people in the future Madras State, especially Malayalees that justice will be done to the minorities in matters of appointment, service, etc.;

(6) that the Address has not mentioned anything about the stand of this Government about the position of the M.L.As. from Malayalam-speaking areas to be merged in Kerala till the next elections and as long as the present Madras Legislature continues;

(7) that the Address under-estimated the situation when it stated that only the urban areas are vulnerable to the increase in the price of food articles and not the villages especially in Malabar where fair price shops should be opened in all villages;

(8) that the Address has ignored the sufferings of the large sections of people including Harijans especially on account of the recent heavy floods in Malabar district and Kasaragod taluk of South Kanara district and did not mention what relief measures Government contemplate to adopt for them;

(9) that the Address has not mentioned about the fact that "Malabar district split-up plans" for the Second Five-Year Plan are not completed yet and not distributed among the M.L.As. from that area;

(10) that the Address has not mentioned about—

(*a*) the regional disparity in the matter of selection of development schemes;

(*b*) the necessity to include Irikkoor firka in the National Extension Scheme;

(*c*) the justness of the need to sanction more development schemes in Ernad taluk and Attappady area of the Walluvanad taluk;

(*d*) the sanction and allocation of rural health centres to Changalazi and Narath villages of Taliparamba Block Development area;

(*e*) the construction of a causeway to Ayappoza river in Irikkoor and the construction of bridges over Kattampalli and Pavannoor ferries of the Baliapatam river;

(*f*) the establishment of a high school in Eravasi village;

(*g*) organization of a dispensary at Payyanoor;

(*h*) extension of electricity to all the villages in the Taliparamba Block Development area from Pappinisseri; and

(*i*) the grant of 15 cents of land for all Harijans in Malabar with an interest-free loan of Rs. 300 for construction to be returned in 30 annual instalments;

10th August 1956] [Sri T. C. Narayanan Nambiar]

(11) that the Address has not mentioned the necessity of taking up certain legislative measures regarding Malabar tenancy, Malabar Marumakkattayam, Malabar education, viz., the private management system, etc.;

(12) that the Address has not mentioned anything about the measures to be adopted by the Government to wipe off the arrears of debt of the peasantry which stands in the way of their active participation in national reconstruction;

(13) that the Address has not mentioned about the alleged eviction of Adivasis in large numbers in Attappady area of Walluvanad taluk with the connivance of landlords and Police;

(14) that the Address has not mentioned anything about the labour discontent, especially in Feroke and Pappinisseri areas of Malabar where certain managements of factories like the Malabar Tile Works and Western India Cottons, respectively, violate the rules and regulations governing the factories resulting in misery among the workers; and

(15) that the Address has not mentioned that all political prisoners will be ordered to be released in view of the reorganization of the States'."

Sir, I also move the following amendment to the motion standing against my name. The name of the village 'Payyanoor' noted against item 10 (*g*) of my amendment should be 'Payyavoor'.

SRI K. T. RAJU: I second the amendment.

SRI C. H. KANARAN: Sir, I move the following amendment:—

"*Add* at the end, the following:—

'but regret to note that—

(1) the Address has failed to point out the failure of the Government to grant at least educational concession to the children of village officers pending decision on the other grievances and demands made by them;

(2) the Address has not mentioned anything about the grievances of N.G.Os. of the State and the remedial measures proposed by the Government;

(3) the Address has not mentioned the necessity of constituting an enquiry committee consisting of the members of the Legislature both from Malabar and Tamil areas of the State to enquire into the serious allegations made by responsible persons from Malabar regarding the felling and removal of trees from the forests of Malabar and transfer of valuable machinery and other movables from Malabar on the eve of the reorganization of States;

(4) the Address has not considered the gravity of the situation arising from the abnormal rise in price of rice and other daily necessaries of life affecting the life of the people without any

[Sri C. H. Kanaran] [10th August 1956

distinction as to whether they live in the villages or in towns and the failure of the Government to open at least one fair price shop in each village despite the representations from the people of Malabar and also from the Food Conference held at Kozhikode recently;

(5) the Address has not mentioned the failure of the Government to take adequate steps for rendering relief to the people affected by the recent flood in Malabar and Kasaragod taluk; and

(6) the Address has not mentioned anything about the necessity of immediately amending the Malabar Tenancy Act so that—

(i) the provision for payment of rent be suitably amended in order to safeguard the interests of the tenants;

(ii) rule 3-A of the Fixation of Fair Rent Rules held to be void by a recent decision of the High Court be amended suitably;

(iii) the procedure adopted by several Rent Courts in Malabar consequent upon a decision of the Ottapalam Sub-Court not to deduct the harvest expenses from the gross produce but to add 10 per cent more on the plea that 20 per cent of the produce had been deducted from the produce in classifying lands, be rectified by suitable amendments and other necessary amendments also be made.' "

The amendment was duly seconded.

Mr. SPEAKER: Sri S. P. Thangavelu who has given notice of amendment No. 14 is not in his seat.

Sri P. Rangaswami Reddiar who has given notice of amendment No. 15 is not in his place.

Sri K. C. Gopalan Unni who has given notice of amendment No. 16 is not in his seat.

9-58 a.m. Sri K. T. RAJU: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை பிரேரேபித்துப் பேசுகையில் எனது நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள், கீழ்ப் பவானிப் பிரதேசத்தில் 10 கோடி ரூபாய் செலவுசெய்து ஆயக்கட்டு கால்வாய் வெட்டி அதன் மூலமாக இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் நன்மை அடைந்திருந்தும், அவர்கள் இப்பொழுது கொடுக்கும் வரியைவிட மேலும் அபிவிருத்தி வரி கொடுக்காமல் இருப்பதற்கான கிளர்ச்சியை எதிர்க் கட்சிக்காரர்கள் செய்துகொண்டிருப்பதாகக் கூறினார்கள். இந்த விஷயத்தைப் பற்றி கவர்னர் அவர்களின் பிரசங்க விவாதத்தின்போது பேசவேண்டாம் என்று நான் நினைத்தேன். ஆனால் நேற்றைய தினம் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் இதுபற்றிப் பேசியதால் நானும் சில விஷயங்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக எதிர்க் கட்சிக்காரர்கள் மட்டும் ஏதோ இதுபற்றி கிளர்ச்சி செய்து விவசாயிகளை வரி கொடுக்காமல் இருக்கும்படி தூண்டுகிறார்கள் என்பது அல்ல. இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் சென்ற ஜூன் மாதம் 7-ம் தேதி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ பி. எஸ். ரெங்கசுவாமி,

10th August 1956] [Sri K. T. Raju]

எம்.எல்.ஏ. அவர்கள் இதுவிஷயமாக ஈரோடில் தினமணி நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறியதுதான். கீழ்பவானி ஆயக்கட்டுதாரர்கள் ஏன் இன்னும் அதிக வரி கொடுக்க மறுக்கிறார்கள் என்பதை ஸ்ரீ கருத்திருமன் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து அதோடு இந்த விஷயத்தை நான் முடித்துக்கொள்ளுகிறேன். தினமணி 9-6-1956 வெளியூர் பதிப்பில் ஸ்ரீ ரெங்கசுவாமி அவர்கள் தினமணி நிருபரிடம் பின்வருமாறு கூறியிருக்கிறார்: " கீழ்பவானி விவசாயிகளின் குறைகள் நியாயமானவை. ஆயக்கட்டுப் பிரதேசத்தில் இப்பொழுது தண்ணீர் தீர்வையே அதிகமாயிருப்பதால் அதனுடன் அபிவிருத்தி வரி வேறு விதித்தால் கஷ்டம் ஏற்படும்." அது மட்டுமல்லாமல் அவர் சென்னைக்கு வந்து இது சம்பந்தமாக முதல் மந்திரி, நிதி மந்திரி, ரெவின்யூ மந்திரி ஆகியோர்களை சந்தித்து விவாதித்திருக்கிறார். அவர்களிடம் இந்தப் பிரதேசத்தில் தண்டத் தீர்வை வசூலை உடனடியாக நிறுத்திவைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஏற்கனவே தண்ணீர்த் தீர்வை இந்தப் பிரதேசத்தில் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கிறது. கனம் கருத்திருமன் அவர்கள் இந்த விஷயத்தை எப்படி கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது என்று நினைக்கிறாரோ அந்தமாதிரிதான் நானும் கருதுகிறேன். உண்மையிலேயே இந்தப் பிரதேசத்தில் மற்ற இடங்களில் ஏற்பட்டுள்ள நீர்ப்பாசன வசதியைவிட அதிகமான வசதி ஏற்படவில்லை. இங்கு புன்செய் நிலத்துக்குள்ள நீர்ப்பாசன வசதிதான் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பருத்திக்கு ஒரு ஏகருக்கு ரூ. 20 அல்லது ரூ. 30 தீர்வை செலுத்த வேண்டியிருக்கிறது. காரணம் செஸ் ரூ. 6-4-0. அதுபோக புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் ஸர்சார்ஜ் ரூபாய்க்கு 2 அணா. இது தவிர ஏற்கனவே உள்ள நில வரி வேறு இருக்கிறது. ஆகவே இங்குள்ள விவசாயிகள் பருத்திக்கு ஒரு ஏகருக்கு ரூ. 30 வரி கொடுக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். 6 மாதங்களுக்குத்தான் தண்ணீர் விடப்படுகிறது. 18 முறைகள் தான் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். அதுவும் கூட கடைக்கோடி நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற உத்திரவாதமும் கிடையாது. மேற்கொண்டு இந்தப் பகுதியிலே பயிர் கட்டுப்பாடு என்ற முறையிலே விவசாயிகள் அனுபவித்துவந்த உரிமைகளும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. புதிதாக கிணறு வெட்டப்படுவதற்கும் அனுமதி கொடுப்பதில்லை. ஆகவே இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் குறைகள் தீர்க்கப்படவேண்டுமென்று நான் சொல்லுகிறேனே தவிர, கட்சிக் கண்ணோட்டத்தோடு நான் இதை எடுத்துக்கூறவில்லை. கட்சிப்பற்றில்லாமல் இந்தக் குறைகளைத் தீர்ப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். உண்மையாகவே குறைகள் இல்லாவிட்டால் ஸ்ரீ ரெங்கசுவாமி அவர்கள் தினமணி நிருபருக்கு அளித்த பேட்டியில் மேலே சொன்னபடி கூறியிருக்கவேண்டிய அவசியமில்லை. செப்டம்பர் 2-ம் தேதி ஈரோடில் கட்சிப்பற்றற்ற விவசாயிகள் மகாநாடு ஒன்று நடக்கப்போகிறது. அதில் 20,000 விவசாயிகள் கூடுவார்கள். இந்த விஷயத்தை கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லையென்றால், ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் இந்த மகாநாட்டுக்கு வந்து விவசாயிகளிடம் இந்த அபிவிருத்தி வரியைக் கொடுக்கும்படி சொல்லட்டும். கனம் ரெவின்யூ மந்திரி அவர்களையும் இந்த மகாநாட்டுக்கு வரும்படி கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் இந்த அபிவிருத்தி வரி விதிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்பதை விவசாயிகளிடையே எடுத்துச் சொல்லட்டும்.

மற்றொரு விஷயத்தைப் பற்றியும் நான் இங்கு குறிப்பிடுகிறேன். 1952-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி அபிவிருத்தி வரி மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போன நேரத்திலே அங்கு அது ஒரு வோட்டு வித்தியாசத்தில் நிறைவேறவில்லை. அதனால் அதை சபை முன்பு கொண்டுவரவில்லை. அடுத்தமாதம் பவானி ரிசர்வாயர் சம்பந்தமான தண்ணீர் தீர்வை மசோதா வந்தபொழுது அது உண்மையாகவே அபிவிருத்தி வரியாக இருந்தபோதிலும், அபிவிருத்தி வரி இல்லை. அது தண்ணீர் தீர்வைதான் என்றும், செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டிய தேவையில்லை என்றும் சொல்லப்பட்டது.

கீழ்பவானி அயக்கட்டு விவசாயிகளின் உண்மையான குறைகளைத் தீர்ப்பதில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும். அதை விட்டுக்கட்சிக்

[Sri K. T. Raju] [10th August 1956

கண்ணோட்டத்தோடு எதிர்க்கட்சிக்காரர்கள் அவர்களை அபிவிருத்தி வரி கொடுக்கவேண்டாமென்று தூண்டுகிறார்கள் என்று சொல்லுவதில் பிரயோஜனமில்லை. அந்த அளவுக்கு என் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். இதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் சர்க்கார் அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு முன் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே 8 பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்படுமென்று சொன்னார். ஆனால் எல்லாப்பொருள்களின் மீதும் ஒரு முனை வரி விதிக்கவேண்டுமென்று ராஜ்யத்திலுள்ள வியாபாரிகள் செய்து வரும் கிளர்ச்சிக்கு அது ஒரு பரிகாரம் ஆகாது. காரணம் ஒரு முனை வரி விதிக்கப்படும் பொருள்கள் மோட்டார்கார்கள், ரசாயன உரங்கள், காபி, டீ, சிமெண்ட் முதலியவைதான். இன்னும் ஒரு முனை வரி விதிக்கப்படவேண்டிய நூற்றுக்கணக்கான பொருள்கள் இருக்கின்றன. உதாரணமாக பருத்திக்கொட்டை, சாக்கு, இரும்புப்பொருள்கள், புண்ணாக்கு இவைகளுக்கு ஒரு முனை வரி விதிக்கலாம். இந்த எட்டு பொருள்களின் மீது ஒரு முனை வரி விதிப்பதால் மட்டும் வியாபாரிகளின் கஷ்டம் தீர்ந்துவிடாது. இதனால் ஒரு சாதகமும் ஏற்பட்டுவிடாது.

10–06 a.m. மேலும், உணவுப் பொருள்களுக்கு அம்மாதிரி விற்பனை வரி விதிக்கக் கூடாது என்று பொது மக்களாலும் மற்றவர்களாலும் பலத்த கிளர்ச்சி செய்யப்பட்டது. அதைப்பற்றி கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிடவில்லை. இந்த எட்டு பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரி போட்டிருப்பது சரியானது தான். ஆனால், எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்றும், அப்படி விதிப்பதால் சர்க்காருக்கு இப்போது கிடைக்கும் வருமானம் எந்த வகையிலும் குறையாது என்றும் வியாபாரிகள் தங்களுடைய ஸ்தாபனங்கள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கும்போது, இந்த எட்டு சாமான்களுக்கு மட்டும் ஒரு முனை விற்பனை வரி போட்டுவிட்டதால் ஒரு பெரிய காரியத்தைச் செய்துவிட்டதாகச் சொல்லமுடியாது.

அடுத்தபடியாக, நமது ராஜ்யத்தில் விவசாயிகள் மிகவும் கடன்பட்டிருக்கிறார்கள். கவர்னர் அவர்கள் தமது உரையில், பரீட்சார்த்தமாக சில பிளாக்குகளைத் தேர்ந்தெடுத்து அவைகளிலுள்ள விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் அளிக்கப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே பல ஆண்டுகளாக கடன் பட்டிருப்பவர்களுக்கு அவைகளிலிருந்து நிவாரணம் கிடையாது. அவற்றிற்கான வட்டிகளையும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல திட்டங்களின் மூலமாக சர்க்கார் விவசாயிகளுக்கு ரசாயன உர உதவியும், நீர்ப்பாசன வசதியும் அளிக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் பல ஆண்டுகளாகப்பட்டிருக்கும் கடன்களிலிருந்து நிவாரணமடைவதற்கு வழி செய்தால் தான் இந்தத் திட்டங்களினால் அவர்கள் உண்மையாகவே நன்மையடைய முடியும். கவர்னர் அவர்களுடைய உரையில், இந்தக் கடன் வசதிகள் செய்யப்பட்டாலும் அந்த விவசாயிகளுக்கு 25 சத விகிதம் தான் உதவிசெய்ய முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. பாக்கி 75 சத விகிதத்திற்கு நிவாரணம் இல்லை. ஏற்கெனவே உள்ள பழைய கடன்களிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் கிடைத்தால்தான் அவர்கள் உண்மையில் பயனடைவார்கள். இல்லாவிட்டால் சர்க்காரால் இந்தத் திட்டங்களின் மூலம் செலவழிக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய்கள் இடையில் இருக்கும் லேவாதேவிக்காரர்களுக்கோ மற்றவர்களுக்கோதான் போய்ச்சேரும். ஆகவே நமது சர்க்கார் உண்மையிலேயே விவசாயிகளின் நலத்தில் அக்கறைகொண்டிருக்குமானால் அவர்களுடைய பழைய கடன்களிலிருந்தும் அவர்களுக்கு நிவாரணமளிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கனம அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ராஜ்ய என்.ஜி.ஓ.க்கள் சம்பந்தமாக பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். சர்க்கார் அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்யமுடியுமோ அந்த அளவுக்காவது உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு என்.ஜி.ஓ வுக்கும் ரூ. 1 வீதம் சம்பளத்தை

10th August 1956] [Sri K. T. Raju]

அதிகரித்தாலும் ரூ. 24 லட்சம் தேவைப்படும் என்று நேற்று கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குக் கட்டாயம் உதவவேண்டும். மேலும், புதிய வரிகளைப்போட்டு அவைகளின் மூலம் கிடைக்கும் பணத்தை அவர்களுக்கு அதிகச் சம்பளமாகக் கொடுக்கலாம் என்றும், எந்த புதிய வரிகள் போடலாம் என்று அங்கத்தினர்கள் யோசனை சொன்னால் உதவிகரமாக இருக்குமென்றும் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாய மக்களுக்குச் சர்க்கார் உதவவேண்டுமென்றும், என்.ஜீ,ஓ-க்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கவேண்டும் என்றும் நாங்கள் சொல்லும்போது, சர்க்கார் எப்படியாவது போகட்டும், பணம் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் நாங்கள் சொல்லவில்லை. நேற்றைய தினம் கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள், தோட்ட வரியின் மூலம் ரூ. 1 கோடியே 12 லட்சம் கிடைத்திருப்பதாகச் சொன்னார்கள். சர்க்கார் தங்கள் கையிலிருந்து செலவழிக்க முடியாது என்பது உண்மை. ஆனால் இம்மாதிரி வரி கொடுக்கக்கூடிய சக்தியுடையவர்களிடமிருந்து வசூலிப்பதற்குத் தகுந்த வரியைப் போட்டு பணத்தை அடையலாம். அப்படிப்பட்ட ஏதாவது சில வரிகளைப் பற்றி குறிப்பிட்டு, அவைகளை விதிக்கலாம் என்று நாங்கள் இந்தச் சபையில் சொன்னால், அப்போது அந்த யோசனைகளை பாராளுமன்றத்தில் கொடுக்க வேண்டுமேயல்லாது இந்தச் சட்டசபையில் கொடுக்கவேண்டியது இல்லை என்று சொல்லப்படுகிறது. முடிந்த வரைக்கும் என்.ஜி.ஓ.க்களுக்கு சம்பள உயர்வு கொடுத்து அவர்களைத் திருப்தி செய்யவேண்டும். என்.ஜி.ஓ.க்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவி செய்யவேண்டும் என்று எதிர்க் கட்சிக்காரர்களாகிய நாங்கள் சொல்லும்போது, ஒரு நியாயமான நோக்கத்தோடு தான் அப்படிச் சொல்கிறோமே தவிர விரோத-குரோத பாவத்தோடு அப்படிச் சொல்லவில்லை. ஆகவே என்.ஜி.ஓ.க்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் பிரசங்கத்தை முடிக்கும் முன்பு, ஸ்ரீ கருத்திருமன் அவர்களை கீழ் பவானிப் பிரதேசத்தில் செப்டம்பர் 2-ம் தேதி நடக்கும் விவசாயிகள் மகாநாட்டிற்கு வந்து பங்கெடுத்துக்கொண்டு, நாங்கள் சொல்வதில் தவறுகள் இருந்தால் அவற்றை எடுத்துக்காட்டவேண்டும் என்று மறுபடியும் கேட்டுக்கொள்கிறேன். அந்த மகாநாட்டிற்கு வந்து எதிர் கட்சிக்காரர்களாகிய நாங்கள் சொல்வது தவறு என்று எடுத்துக்காட்டி, அதை அந்த விவசாயிகள் உண்மையில் ஒப்புக்கொள்வார்களானால், எங்களுடைய தவறைத் திருத்திக்கொள்ளத் தயார் என்பதையும் ஸ்ரீ கருத்திருமன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்யாமல், கவர்னர் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும்போது, போகிற போக்கில் எதிர்க் கட்சிக்காரர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவது சரியல்ல என்று ஸ்ரீ கருத்திருமன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

*Sri V. C. PALANISWAMI GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, 10-13 a.m.
கவர்னர் அவர்கள் உரையைப் பாராட்டி ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். அந்த உரையில் இந்த சர்க்காருடைய முன்னேற்றத் திட்டங்களும், இந்த நாட்டின் முன்னேற்றத் திட்டங்களும் செவ்வையாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களையெல்லாம் பார்க்கும்போது இந்த நாட்டில் எவ்வளவு அபிவிருத்தித் திட்டங்கள் அமைந்திருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

நம்முடைய சர்க்காருடைய இந்த முன்னேற்றத்திட்டங்களில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தில், முக்கியமாகத் தஞ்சாவூர், ராமநாதபுரம் ஆகிய இரண்டு ஜில்லாக்களிலும் புயலின் கஷ்டம் இந்த ஆண்டில் இந்த தலைக்கட்டில் என்று சொன்னால் கூட மிகையாகாது. இரண்டு தரம் வந்துவிட்டது. அதன் காரணமாக அங்குள்ள மக்கள் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்தக் கஷ்டத்திலிருந்து அவர்களுக்கு நிவாரணமளிப்பதற்காக ஏராளமான பணம் அங்கு செலவழிக்கப்பட்டது. ரூ. 3 கோடி விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டதென்றால் அது எவ்வளவு பெரிய செலவு என்று சொல்லவேண்டியதில்லை. ஆனால் இவ்வளவு

ரூபாய் கடனைக் கொடுக்கும்போது நிர்வாக இயந்திரம் சீர்திருத்தப்பட வேண்டும், சீர்திருத்தப்பட்டிருக்கவேண்டும். அதில் எவ்வளவோ ஊழல்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டு நான் வருத்தப்படுகிறேன். நமது நாட்டிற்கு சுதந்திரம் வந்த பிறகு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தாலும் நாட்டு மக்களிடத்தில் ஒரு எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. தங்களுடைய அபிவிருத்திக்காக சர்க்காரோடு சம்பந்தம் வைத்துக்கொண்டு மக்கள் பாடுபடுகிறார்கள். இந்த அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக சர்க்கார் அதிகாரிகளுக்கு வேலை அதிகமாகியிருக்கிறது. ஜில்லா அதிகாரிகள் எல்லோருக்கும் வேலை அதிகரித்திருக்கிறது. அப்படியிருக்கும்போது நிர்வாக இயந்திரம் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும். அதற்காக நிர்வாக அதிகாரிகளை அதிகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஏதோ ஒரு விதமாக இயந்திரம் சுற்றிக்கொண்டிருக்குமே தவிர நல்ல முறையில் இயங்காது என்பது என் அபிப்பிராயம். ஆகையால் நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகமான வேலை இருப்பதால் ஏராளமான உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

கவர்னர் அவர்களுடைய உரையில் கலெக்டர்களுடைய Personal Assistant களுக்கு சட்ட பூர்வமாக சில அதிகாரங்கள் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அவர்கள் ஆர அமர்ந்து பைல்களை பார்த்து நியாய அநியாயங்களை கண்டு உத்திரவை கொடுக்க வேண்டும். எனக்குத் தெரிந்த I.C.S. உத்தியோகஸ்தரோடு சென்ற காலத்தில் நான் பேசிக்கொண்டிருக்கும்போது அவர் சொன்னார் "உங்களுக்கு தெரியாதா, அரசாங்கமெல்லாம் குமாஸ்தாக்களால்தான் நிர்வகிக்கப்பட்டு வருகிறது" என்று. இந்த வார்த்தையை கேட்டபோது எனக்கு தூக்கிவாரிப்போட்டது. குமாஸ்தாக்கள் தான் நிர்வாகம் செய்கிறார்கள் என்றால், பொறுப்புள்ள அதிகாரிகள் எவ்வளவு தூரம் நடவடிக்கைகளை ஆழ்ந்து பார்க்கிறார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, கவர்னர் உரையில் கலெக்டர்கள் Personal Assistant களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருப்பதை மீண்டும் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது விவசாயத்துறையில் மக்களுடைய கவனத்தை கவர்ந்து இருக்கும் முக்கியமான விஷயம், நியாயவார மசோதா. இந்த நியாயவார விஷயத்தில் என்ன விகிதாசாரம் பூமிக்காரனுக்கும் உழுகிற குடியானவனுக்கும் கொடுப்பது என்பது முக்கியமாய் ஆலோசிக்கப்பட்டு பொறுக்குக் கமிட்டியில் ஒரு முடிவு காணப்பட்டிருக்கிறது. அந்த முடிவில் 40, 35, 33-1/3, 25 என்று விகிதாசாரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பிரச்னை சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் தோட்டக்கால், புஞ்சைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் படியான விகிதாசாரம் போதாது. நஞ்சை சர்க்காருடைய தண்ணீர் வசதிகளைக்கொண்டு சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் தோட்டக்கால் நிலமோ அப்படியில்லை. அந்த பூமிதார் 5,000, 10,000 ரூபாய் செலவு செய்து, கிணறுவெட்டி, பம்பு செட்டுகள் வைத்து சாகுபடி செய்கிறார். அவர்கள் investment-க்கு (முதலீட்டிற்கு) தகுந்த ஊதியம் இல்லை. ஆகவே தோட்டக்காலுக்கு 33-1/3 விகிதாச்சாரம் கொடுப்பது நியாயமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதை மறுபடியும் சர்க்காருடைய கவனத்திற்கு வைக்கிறேன். தவிர, புஞ்செய்க்கு 25 சத விகிதம் என்று சொல்லுகிறார்கள். புஞ்சை நிலம் திருத்தப்படும் விஷயங்களை எல்லாம் பார்க்கும்போது 25 சத விகிதம் போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இரண்டாவதாக, கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்தில், முதல் ஐந்தாண்டு திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் சரியாகக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலைகளும், கனரக தொழிற்சாலைகளும் நாட்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதை வரவேற்கிறேன். ஆனால் நமது நாட்டில் கிராமங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்க்கவேண்டுமென்றால், சிறு கைத்தொழில்களும், குடிசை தொழில்களும் மிகவும் அவசியம். கிராமாந்திரங்களில் பெரிய ஆலைகளை வைக்கும்போது, எல்லோரும் அந்த ஆலை வேலைக்குப் போகிறார்களே ஒழிய

10th August 1956] [Sri V. C. Palaniswami Gounder]

விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. ஆலை வேலையில் நல்ல ஊதியம், போனஸ் கிடைக்கிறது. ஆகவே, வாலிபர்கள் எல்லாம் அந்த வேலைக்குச் சென்று விடுகின்றனர். விவசாயத்தில் ஈடுபடக்கூடியவர்கள் 50, 60 வயதிற்கு மேற்பட்ட உழைப்பாளிகளாக இருக்கிறார்கள். இந்த நாட்டின் உணவுப் பிரச்னை தீரவேண்டுமானால், விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டும். விவசாயம் அபிவிருத்தி அடைய விவசாயிகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து தரவேண்டியது சர்க்காரின் கடமை. அவர்களுக்கு விவசாயத்தில் ஊக்கம் கொடுக்கும் முறையில், நல்ல ஊதியம் கொடுத்து, ஆலைத் தொழிலாளர்களுக்குச் சமமான நிலையில் வைக்கவேண்டும், அவர்களுடைய உற்பத்திப்பொருள்கள் சரியான விலையில் விற்க சௌகரியம் செய்து தரவேண்டும். இன்றைய தினம் **cultivating tenant** என்றால் நேரிட நிலத்தை உழுபவர்கள் தான் என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் அவர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்கவேண்டியது அவசியம். இன்றைய தினம் அனேகம் பேர் நடுவிலிருந்து கொண்டு, விவசாய கூலிகளை வைத்துக்கொண்டு, முக்கியமாக ஹரிஜனங்களை வேலைக்கு வைத்துகொண்டு, விவசாயம் செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஹரிஜனக் கூலிகளுக்குக் கொடுக்கிற கூலி குறைவு. இந்த முறையில் நடுவில் வருகிறவர்கள், யாதொரு உழைப்புமில்லாமல், லாபமடைகிறார்கள். இன்றைய தினம் விவசாயம் ஓங்கவேண்டுமானால், விவசாய கூலிகள் விவசாயத்தில் ஈடுபடவேண்டுமானால், அவர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்கப்படவேண்டும். அந்த முறையில் சட்டத்தில் ஷரத்துகள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இன்றைய தினம் சோஷியலிஸ்டிக் பாணி சமுதாயத்தை அமைப்பது நமது நோக்கமாக இருக்கும்போது, எல்லோருக்கும் சம அந்தஸ்து, வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். மக்கள் சுகவாழ்வு எய்த வேண்டுமென்று நாம் சொல்லும்போது, விவசாய கூலிகளின் நிலைமையை பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. சட்டப்படி **tenant** களுக்கு பாதுகாப்பு என்று இருக்கிறது. ஆனால் **tenant** என்ற தலைப்பின் கீழ் உண்மையாகப் பாடுபடாத ஆட்களும் வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இதை நான் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

விவசாயத்துறையில் பல திட்டங்களை சர்க்கார் போட்டிருக்கிறார்கள். இரண்டாது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாயம் ஓங்கவேண்டுமென்கிற நோக்கத்தில் விவசாயிகளுக்கு விவசாயம் செய்யப் போதுமான கடன் வசதி கிடைக்கவேண்டுமென்பதற்காக கூட்டுறவு முறையில் சில பாங்குகளை அமைத்து, போதுமான கடன் கொடுக்க திட்டம் போட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் பொது ஜன அபிவிருத்திக்காக கூட்டுறவு சங்கங்கள் இருக்கவேண்டுமென்றால், அதன் சட்ட திட்டங்களை திருத்தி அமைக்கவேண்டும். சர்க்கார் இதில் போதிய அக்கறை செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

கவர்னர் உரையில், சென்னை ராஜ்யத்தில் புதிதாக 400 அரசாங்க விதைப் பண்ணைகள் (**State seed farm**) வைக்க சர்க்கார் உத்தேசித்து இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவற்றை எவ்விதம் நல்ல முறையில் இயக்கப்போகிறார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏற்கனவே பல இடங்களில் சர்க்கார் வினியோகிக்கும் வித்துக்கள் சம்பந்தமாகப் புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அனேக இடங்களில் சர்க்கார் விதைகளை விதைப்பதில்லை. ஏனென்றால் சர்க்காரால் வினியோகிக்கப்படும் வித்துக்கள் தரமாக இருப்பதில்லை. என்னுடைய சொந்த அனுபவமும் அதுதான். விதையானது நல்ல முறையில் பொறுக்கப்பட்டு உலர்ந்த முதிர்ந்த விதையாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல், பச்சையானதும், முதிர்ச்சியில்லாததுமான வித்துக்களை வாங்கி சேகரித்துவைக்கும் பட்சத்தில், அது குடியானவர்களுக்கு வழங்கப்பட்டால், அவர்களுக்கு மிகுந்த நஷ்டத்தைத் தான் உண்டாக்கும்.

அடுத்தபடியாக, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் சர்க்கார் செய்து முடித்தாகிவிட்டது என்று சொல்லப்படுகிறது. உண்மைதான். நமது நாட்டில் பெரிய அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் எல்லாம் ஏற்படுத்தியாகி

விட்டது. இனி நமது நோக்கம் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களாகத் (Minor Irrigation schemes) தான் இருக்கமுடியும். அதுவும் முடிந்து விட்டால் பூமிக்கு அடியில் இருக்கும்படியான நீரை மேலேகொண்டு வரும் திட்டங்கள், அதாவது **bore wells** (குழாய் கிணறுகள்) **filter points** (வடி முனை குழாய்கள்) ஏற்படுத்தும் திட்டங்கள் ஆரம்பிக்கிறார்கள். இந்த வடிமுனை குழாய் திட்டங்கள் **delta area,** சமுத்திரக் கரை, நதி முகத்துவாரங்கள், இப்படிப்பட்ட இடங்களில் தான் வெற்றிகரமாக நடக்கின்றன. ஆனால் மேட்டுப்பாங்கான கோயம்புத்தூர், சேலம் ஜில்லா போன்ற பிரதேசங்களில் வடிமுனைக் குழாய்த் திட்டங்கள் அவ்வளவு வெற்றிகரமாக இருக்கமுடியாது. 5,000 ரூபாய் 10 ஆயிரம் ரூபாய் செலவு செய்து **bore-hole wells** (குழாய் கிணறுகள்) போட்டால் வெற்றிகரமாக ஆனாலும் ஆகும். இல்லா விட்டால் இல்லை என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, பூமிக்கு அடியில் ஜலம் இருக்கும் இடங்களைக் கண்டு பிடிக்க சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி செய்தால் நன்றாக இருக்கும். அன்னிய நாடுகளிலிருந்து நிபுணர்கள் வந்து, மண்ணெண்ணெ பெட்ரோல் இருக்கும் இடங்களை கண்டுபிடித்தார்கள். அதே போல் கனிவர்க்கங்கம் இருக்குமிடங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த முறையில் ஜலம் இருக்குமிடங்களைக் கண்டு பிடித்து விவசாயிகளுக்குச் சர்க்கார் உதவி செய்யலாம் என்று கருதுகிறேன். வடநாட்டில் **Gangetic plain**-ல் **bore-hole wells** (குழாய் கிணறுகள்) வெற்றிகரமாக இருக்கின்றன. அமெரிக்கர்களுக்கும் இது அன்னியநாட்டு கண்டிராக்டர்களுக்கும் **bore-hole wells** அமைத்து நஞ்செய், புஞ்செய் நிலங்களுக்கு சாகுபடி வசதி செய்யத் திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நெய்வேலி யில் ஆர்டிஷியன் (**artesian**) கிணறுகள் வெற்றிகரமாக இருக்கின்றன. வரட்சிமிக்க இடமான எங்கள் கோயம்புத்தூர் ஜில்லாவிற்குத் தான் கதி மோட்சமில்லை. எங்கள் ஜில்லாவின் நிலைமை மந்திரிகளுக்கு தெரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எங்கள் ஜில்லா விவசாயிகள் விவசாயத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்த போதிலும், அவர்கள் முயற்சியும், பொருட் செலவும், தகுந்த நீர்ப்பாசன வசதி யில்லாததால், சில சமயம் வெற்றியும், பெரும்பாலும் தோல்வியும் அடைகிறது. ஆகவே சர்க்கார் பூமியின் அடியிலிருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவர தக்க திட்டங்கள் வகுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

10–26 a.m. அடுத்தாற் போல், இப்போது கடைசியாக எனக்கு முன்னால் பேசிய மெம்பர்கள், கீழ்பவானித் திட்டத்தைப்பற்றி விவாதம் நடத்தினார்கள் அதிலே எனக்கு ஒரு செண்ட் நிலம் கூட கிடையாது. அது பற்றி நான் பாரபட்சமில்லாமல் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஆனால் என்னுடைய அனுபவம் சற்றுக் கம்மியாய இருக்கலாம். நேரடியான கஷ்டநஷ்டம் தெரியாமல் இருக்கலாம். பொதுவாகப் பார்க்கும்போது இந்தக்கீழ்ப் பவானித் திட்டத்தைப் பார்க்கும் போது, அந்தப் பிராந்தியத்தில் இத்திட்டம் வேகமாக அமுலாக்கப்பட்டது. அந்த அளவுக்கு மேல் பவானித் திட்டம் வந்ததா ? கீழ் பவானி திட்டம் படிப்படியாக வந்துவிட்டது. மேல் பவானித் திட்டத்துக்காக, நாங்கள் அந்தக் காலத்தில் ரொம்பக் கிளர்ச்சி செய்தோம். ஆனால், கீழ்ப் பவானித் திட்டம், அது ரொம்ப சுலபமானது, அதிக நீர்த்தேக்கம் உடையது என்று என்ஜினியர்கள், மந்திரிகள் சொன்னதாலும், அங்கிருந்தவர்களுடைய அந்த அபிப்பிரயத்தை ஏப்புக் கொள்ள வேண்டிய தன்மை ஏற்பட்டுவிட்டது. பூமி நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது. அந்த கீழ் பவானித் திட்டபூமியானது எத்தகைய வசதியுள்ள நிலைமையிலும், கம்மியான நிலம், அது அவ்வளவு உயர்ந்த நிலம் அல்ல என்று என்ஜினியர்கள் சொன்னது எனக்கு தெரியும். மேல் பவானித் திட்டம் வந்திருந்தால், இவ்வளவு போராட்டம் இருக்கவே இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். அது வந்தது எனக்குப் பொறாமை இல்லை. ஏன், அதற்கு இவ்வளவு எதிர்ப்பு சர்க்காருக்குக் காட்டுகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. இன்றைய தினம் கோயம்புத்தூரில், ஒரு எக்கரில், கிணற்றிலிருந்து' தண்ணீர் பாயவேண்டுமென்றால் 100 ரூபாய் ஆகிறது **pumping**-க்கு. ஆனால், ரூ. 20, ரூ. 15, ரூ. 7½ என்று செலவாகக்கூடிய இடங்களில், ஏன் அத்தனை போராட்டம் செய்கிறார்கள் என்பது தான் புரியவில்லை. நிர்வாக யந்திரத்தில்,

10th August 1956] [Sri V. C. Palaniswami Gounder]

ஊழல்கள் இருந்தால் அதை நிவர்த்தி செய்வது அவசியம் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய தினம் கேட்கிறேன். கீழ் பவானித் திட்ட குடியானவர்கள், மேல் பவானித் திட்டத்துக்கு வந்து, மேல் பவானித் திட்டக் குடியானவர்கள், கீழ் பவானித் திட்டத்துக்கு போவார்களேயானால் பாகிஸ்தான் ஹிந்துஸ்தான் மாதிரி, எந்தப் புரட்சி நிலைமையும் ஏற்படாமல் இருந்தால், நான் மனமுவந்து, கீழ் பவானித் திட்ட ஊருக்குப் போவதில் சந்தோஷமாகத் தயார் என்று சொல்லிக்கொள்கிறேன். மின்சாரத்தினால், ஜலம் கிடைக்கும்படியான கஷ்டம் எது என்பது எனக்குத் தெரியும். இன்றைய தினம், மேல் பவானித் திட்டத்தில், குந்தாதிட்டத்தில் ஏதாவது, ஜலம் வரும் பட்சத்தில் , ஏக்கருக்கு ரூ . 20 அல்ல, நான் சொல்கிறேன், இன்றையதினம், ஏக்கருக்கு ரூ. 50 கொடுக்கவும், அங்குள்ள விவசாயிகள் முன் வருவார்கள் என்று நான் சவால் விடுகிறேன். இப்போது, பல ஆறுகள் மூலமாக, ஜலத்தைத் தேக்கி, மின்சார உற்பத்தியைச் செய்கிறார்கள். அதை வரவேற்கிறேன். நாட்டின் அபிவிருத்திக்கு நல்லது. நாங்கள் இந்தக் கீழ்ப்பவானித் திட்டத்தின் பேரில், அந்த ஊருக்குப் போய் விவசாயம் செய்தால், நாங்கள் சண்டை போட்டுக் கொள்ள மாட்டோம். சர்க்கார் கேட்கும்படியான, வரி என்னவோ அதை நாங்கள் கொடுக்கிறோம் பூமி அபிவிருத்தித் திட்டம், அதாவது **Betterment Fee** கொடுக்கவும், தயாராய் இருக்கிறோம் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். **Betterment Fee** கேட்பதில் என்ன தவறு என்று கேட்கிறேன். 10 கோடி ரூபாயில் கட்டப்பட்ட, கீழ்பவானித் திட்டத்தில், யார் பணம் ? கோயம்புத்தூர், சேலம் விவசாயிகள் பணமும் அல்லவா ? புயலால் பாதிக்கப்பட்ட, ராமநாதபுரம், தஞ்சை ஜில்லா விவசாயிகள் பணமும் அல்லவா ? நீங்கள் ஏன் கிளர்ச்சி செய்கிறீர்கள் என்று கேட்கிறேன். வரி வேண்டாம் என்று சொல்லாதீர்கள். இதன் பயனை, இந்தத் தலைமுறையோடு அல்ல, அடுத்த தலை முறையிலும் காணலாம். இந்த சர்க்காரும், எங்க சர்க்காரும், இதை அபிவிருத்தி செய்ய திட்டம் போட்டிருக்கிறார்கள். அடுத்த தலைமுறையினர், இத்திட்டம் கொண்டு வந்தவர்களைக் கும்பிடுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நான் சொல்வது முகஸ்துதிக்கு அல்ல, நானும் வாழ வேண்டும், நீயும் வாழ வேண்டும் என்கிற அந்த முறையில் நான் சொல்ல வேண்டியதே தவிர, பொருமைப்படுவதால் அல்ல. அதாவது, சர்க்கார் மனமுவந்து, விரிவாக, கோயம்புத்தூரில், அவிநாசி, பல்லடம் இப்பேற்பட்ட இடங்களுக்கு, ஒரு நீர்ப்பாசனம் கொண்டு வரமாட்டார்களா ? என்பது தான் என்னுடைய ஆவல். இப்போது இதற்கு முன்னால், இந்த பரம்பிகுளத் திட்டத்தைப் பற்றி மிகப் பரவலாகப் பேசினார்கள். மந்திரியும் பேசினார். என்ஜினியர்களும் போய் ஆராய்ச்சி செய்தார்கள். இப்போது எல்லாம் **silent** ஆக இருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : வேலை நடக்கிறது, காரியமெல்லாம் நடக்கிறது,

*** SRI V. C. PALANISWAMI GOUNDER :** ரொம்ப சரி, காரியம் நடக்கிறது என்றால் மேற்கு தொடர்ச்சியிலிருந்து வீணாகிப் போகும் ஜலம், நமக்கு உபயோகமாவது பற்றிய விஷயத்தில், திருவாங்கூர்-கொச்சியோடு, இங்கு சம்மந்தப்பட்ட இலாக்கா, என்ன முடிவுக்கு வந்தார்கள் என்று தெரியவில்லை. அதாவது நம் நாட்டில் அணைக் கட்டிக்கொண்டு வந்தால், ஒரு லட்சம் ஏக்கருக்குத் தான் பாய முடியும். அது போதாது. இன்னும் 2, 3 லட்சம் ஏக்கராக்களுக்குப் பாயவேண்டும் முக்கியமாகப் பல்லடத்தைப் பற்றிப் பேசவிரும்புகிறேன். பல்லடம், பஞ்சப் பிரதேசம் என்பது தெரியும். அதிலும், இந்தப் பரம்பிகுளத் திட்டத்தில் தண்ணிர் கொண்டு வந்து லெவல் இல்லாவிட்டால், **pumping** செய்து, வறண்ட இடத்துக்கு பயன்படுத்துவது நல்லது. இதற்கு மசோதா கொண்டு வரும்படி, மந்திரி கனம் மாணிக்கவேலு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அமெரிக்காவில், வரட்சியான இடங்களில், 400 மைல் தூரத்துக்கு, **Pumping line** கொண்டு வந்து, விவசாயிகளுக்கு தண்ணிர் கிட்டும்படியாகச் செய்கிறார்கள். அது எவ்வளவு முன்னேற்றகரமான காரியம் என்று கேட்கிறேன், பிரம்பிகுளத்திட்டத்தில் முதல் ஆரம்பித்த மாதிரி, இனிமேலும் ஈடுபட்டால் இந்த பல்லடம், தாராபுரம்

[Sri V.C. Palaniswamy Gounder] [10th August 1956

தாலுக்காக்கள் வரட்சி, பஞ்சப் பிரதேசங்கள், உற்பத்தியைப் பெருக்க முடியும். நீங்கள் பணத்தைப் பார்க்க வேண்டாம், உற்பத்தியைப் பாருங் கள். அந்த முறையில் செய்தால் வெற்றிபெறும். அதற்கு சர்க் காருடைய பணம், நூற்றுக்கு 40, 60, வட்டி ஆனாலும் கொடுப்பர்கள் என்று நான் இங்கே சொல்லத் துணிகிறேன். ஆகையினாலே, இப்படிப் பட்ட விஷயங்களைச் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் என்று கேட்டுக் கொண்டு, கவர்னர் பிரசங்கத்தை, நான் மனமுவந்து ஆதரிக் கிறேன்.

10–36 a.m. **Sri M. PALANIYANDI**: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் உரையில் பேசும் காலத்தில் , நமது சென்னை மாகாணமானது தமிழ் மாகாணம் என்று அழைக்கப்படாமல் இருந்தாலுங்கூட தமிழ் மொழி ஆட்சிமொழி ஆவதற்கு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்த விஷயமாகும்.

எல்லைப் பிரச்னையைப் பற்றி ஆந்திர கவர்னர் செய்துள்ள பிரசங்க மானது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்கிறது என்று தான் சொல்லமுடியும். எல்லைப் பிரச்னையைத் தீர்ப்பது பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு உறுதிமொழி கொடுத்திருக்கிறார். ராஜ்யச் சீரமைப்புக் கமிஷன் ரிபோர்ட்டில் 395, 396-வது பாராவில் நேரிடைப் பேச்சு வார்த் தையின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டதன் பேரிலும் நேருஜியின் வாக்குறுதியின் பேரிலும் கிளர்ச்சியை விட்டு விடலாம் என்று சொல்லப்பட்டது. இருந்தும் கூட ஆந்திர மாகாணத்தைச் சுற்றிய எல்லைப் பிரச்னை பெரிய அளவு இருக்கிற காரணத்தை வைத்துக்கொண்டு இந்தப் பிரச்னையை ஆந்திரா அரசாங்கம் தட்டிக் கழிக்கப் பார்ப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். உண்மையாக நிதி மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்துடன் வாதாடி, எல்லைப் பிரச்னையைத் தீர்க்க, உடனடியாக எல்லைக் கமிஷன் நியமிக்கப்படுவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவருக்கு இந்தக் காரியத்தில் இச் சட்டசபை பூராவும் ஆதரவு கொடுக்க தயாராக இருக்கிறது. இதுபோல் பல விஷயங்களில் இந்தச் சபை ஆதரவு கொடுத்து வந்திருக்கிறது. ஆகை யால், அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, எல்லை கமிஷனை உடனடியாக நிறுவுவதற்கு வேண்டிய வழிவகுக்க வேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன். ஏனென்றால் எல்லைப் பிரச்னை இன்னும் தீராமல் இருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எல்லைப் பிரச்னையைத் தீர்த்தாக வேண்டும் என்று கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங் கமும் " செய்வோம் செய்வோம் " என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆந்திர அரசாங்கம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, இல்லாத விஷயங்களைப் பேசி பிரச்னையைத் தட்டிக் கழித்து வருகிறது என்று நான் கருதுகிறேன். ஆகையால் மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி நிச்சயமாக எல்லைக் கமிஷனை சீக்கிரமாக அமைப்பதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை சர்க்காருக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். புள்ளம்பாடி, கட்டளை வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் இந்த ஆண்டிலேயே எடுத்துக்கொண்டு விட்டார்கள். நான் முக்கியமாக சர்க்காருக்கு ஒரு விஷயத்தைத் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன். பல ஆண்டுகளாக அந்தப் பகுதி மக்கள், பிற்பட்ட மக்கள், விரும்பிக்கொண்டிருந்த ஒரு திட்டத்தை இப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதானது பிற்பட்ட மக்களின் மீது இந்த சர்க்காருக்கு இருக்கக்கூடிய அக்கறையைக் காட்டுகிறது. ஆனால், இதை 6 ஆண்டுகளுக்குள் முடிக்கப்போவதாகச் சொல்லப்படுகிறதுதான் வருந்தத்தக்க விஷயம். ஏனென்றால் அங்குள்ள மக்கள் அதிகமாக ஒத்துழைக்க காத்துக்கொண்டிருக்கும்போது , வெகு காலமாக திட்டம் நிறைவேற எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது அதைச் சீக்கிரமாக முடிப்பதற்கு அரசாங்கம் வழி வகுக்க வேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

10th August 1956] [Sri M. Palaniyandi]

விவசாயிகளுக்கு வசதி செய்ய தேசீய விஸ்தரிப்புத் திட்டப்பகுதிகளில் கடன் கொடுக்கப்போவதாக கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டும் போதாது என்று நான் கருதுகிறேன். விவசாயிகளுக்குக் கூட்டுறவு பாங்குகள் கடன் கொடுக்கமுடியும். உதாரணமாக திருச்சி கூட்டுறவு மத்திய பாங்கிலே 70 லட்சம் அல்லது 80 லட்சம் ரூபாய் வரையில் பணம் இருக்கிறது. மக்கள் "டெபாசிட்" செய்யும் பணத்தைக் கூட "ஸ்க்ரூடினேஸ்" பண்ணி தான் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்தப் பணத்தை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கலாம். கூட்டுறவு இயக்கத்திலோ அல்லது வேறு எங்கேயோ தவறு இருக்கிறது. மத்திய கூட்டுறவு பாங்கில் பணம் இருக்கிறது. கிராம மக்களுக்குக் கடன் வேண்டும். ஆனால் கடன் கிடைக்கவில்லை யென்றால் நிர்வாக இயந்திரத்திலோ கூட்டுறவு இலாகாவிலோ, அரசாங்கத்திலோ தவறு இருக்கிறது என்று தான் சொல்லவேண்டும். தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளில் மட்டும் தான் கடன் வசதி தேவை என்பது அல்ல. மாகாணத்தில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகளுக்கும் கடன் வசதி அத்யாவசியம். விவசாயிகள் அதிக வட்டிக் கொடுத்து பணம் கடன் வாங்குவதோடு மட்டுமல்லாமல் தங்கள் முதலையே இழந்து விடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை முன்னேற்றுவதற்கு நீண்டகாலக் கடன், குறுகிய காலக் கடன், முதலிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழில் வளம் பெருகவேண்டுமென்று நமது அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கன ரக இயந்திரத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தகுந்த விஷயம். நமது மாகாணத்தைப் பொறுத்தமட்டில் ஜனத்தொகை அடிப்படையில் எடுத்துக்கொண்டாலும் சரி, பிற்பட்ட நிலையை எடுத்துக்கொண்டாலும் சரி எந்த விதத்தில் பார்த்தாலும் இங்கு தொழில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று கேட்க உரிமை இருக்கிறது. தேசிய அபிவிருத்திக் கவுன்சிலிலே நிதி மந்திரி அவர்கள் வாதாடினால் இந்த சபை ஆதரவாக இருக்கும். நாட்டுமக்கள் எல்லோரும் ஆதரவு கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். இருநூற்று முப்பது கோடி ரூபாய் நமக்கு வேண்டுமென்றால் 170 கோடி ரூபாய் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது போதாது, அதிகமாக வற்புறுத்தி வாங்குவதற்கு வழி வகை செய்யவேண்டும்.

நெய்வேலித் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு சீக்கிரமாக நிறைவேற்றப்படும் என்று கவர்னர் உரையிலே இருக்கிறது. பூமிக்கு கீழ் இருக்கும் தண்ணீரை மேலே இறைத்து, அதற்குமேல் இருக்கக்கூடிய பழுப்பு நிலக்கரியை எடுத்தால் தமிழ்நாட்டில் தொழில் வளம் நிச்சயமாக வளரும். சேர்வராயன் மலையில் கிடைக்கும் பாக்ஸைட்டைக் கொண்டு சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையை பத்து கோடி ரூபாய்ச் செலவில் ஆரம்பிப்பதோடுகூட, அங்கு இருக்கக் கூடிய இரும்புக் கனியையும் பயன்படுத்த முன்வரவேண்டும். மூலப்பொருள்கள் நம் நாட்டில் கிடைக்கிறது. குந்தா மின்சாரத் திட்டம் போன்றவைகளிலிருந்து மின்சாரமும் கிடைக்கும். நெய்வேலித் திட்டத்திலும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படபோகிறது. நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியையும், சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியையும் கொண்டு இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அடிப்படை கனரகத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு நிதி மந்திரி அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும். தமிழ்நாடு தொழில் வளத்தில் பிற்பட்ட பகுதியாக இருப்பதால், தொழில் வளம் பெருக வேண்டியதவசியம். பல ஆண்டுகளாக தமிழ் நாட்டு மக்கள் இந்த முறையில் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்களுடைய எண்ணத்தைக் கருத்திற்கொண்டு நிச்சயமாக பெரும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு மத்திய சர்க்காரை நமது சர்க்கார் தூண்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு தொழில்களுக்குத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலும் அந்தத் திட்டங்களெல்லாம் சரியாக அமல் நடத்தப்படவில்லை. தமிழ் நாட்டில் தொழில்வளம் பெருவதற்கு சிறு தொழில்கள் ஏராளமாக ஆரம்பிக்கப்பட

[Sri M. Palaniyandi] [10th August 1956

வேண்டும். சிறு சிறு தொழில்களை மக்கள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் செய்துகொடுக்கவேண்டும். கடனும் தாராளமாகக் கொடுத்துதவவேண்டும். பாராளுமன்றத்திலும் காங்கிரஸ் எம்.பி.க்கள் வற்புறுத்தி வருகிறார்கள். கடன் கொடுப்பதினாலே சிறிது நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. எப்படியாவது சென்னை ராஜ்யத்தில் தொழில் வளம் பெருகுவதற்கு வழிவகைகளை ஆராய்ந்து காரியங்களைச் செய்யவேண்டும். தக்காவிக் கடன் வாங்கி நிலத்தை உழுது வளப்படுத்துவது போலவே சிறு தொழிலுக்கும் கடன் உதவி அவசியம் கடன் கொடுப்பதிலே ஆங்காங்கே பலகஷ்ட நஷ்டங்கள் எற்படலாம். இருந்தாலும், ஆங்காங்கே ஏராளமான unskilled and semiskilled workers இருப்பதால் அவர்களைத்தேர்ந்தெடுத்து நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தவேண்டும், சட்டசபை உறுப்பினர்களையோ, பஞ்சாயத்து தலைவர்களையோ, இன்னும் மற்ற நல்லவர்களையோ நியமித்து, அவர்கள் மூலமாக சிறந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கச்செய்து அவர்களைப் பயன் படுத்தலாம்.

சமீபத்தில் நிதி மந்திரி அவர்கள் கோயமுத்தூரில் பேசியபோது நமது மாகாணத்தில் நல்ல தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று பெருமைப்பட்டுச் சொன்னார்கள். உண்மையிலேயே அது பெருமைப்படக் கூடிய விஷயந்தான். நம்நாட்டில் பெருமைபடத்தக்க முறையில் வேலை செய்யக்கூடிய நல்ல தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஜெர்மனியிலிருந்தும், டென்மார்க்கிலிருந்தும் வந்துள்ள இன்ஜினீர் இங்கு 100 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்யும் தொழிலாளியின் வேலையைப் பார்த்து வியந்திருக்கிறார்கள். ஒரு படித்த இன்ஜினீர் செய்யக்கூடிய வேலையைக்கூட தன்னுடைய பரந்த அனுபவத்தின்காரணமாக செய்யக் கூடிய, தொழிலில் ஆர்வம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகையால், நாம் சிறு சிறு தொழில்களை நடத்தக்கூடியவர்களுக்கு கடன் வசதி அதிகமாகக் கொடுத்தால் நாட்டிலே தொழில்கள் வளருவதற்கு முடியும். நமது நிதி மந்திரி அவர்கள் இது விஷயமாக ஆலோசனை செய்து சிறு தொழிலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தொழிலாளிகளுடைய நிலை இன்னும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. தொழிலாளருடைய விஷயமாக இயற்ற வேண்டிய சட்டங்களை மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கமும் இயற்றலாம் என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு இருக்கும்படியான பல சட்டங்களைப் பரிசீலனை செய்து முன்னேற்றமான முறையில் திருத்தியமைக்கவேண்டும். தொழில் கோர்ட்டு வசதி செய்திருக்கிறார்கள். அதைப்போன்று இன்னும் பல வசதிகள் செய்துகொடுத்து அவர்களுடைய நிலையை முன்னேற்றவேண்டும். ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அதைத் தொழில் கோர்ட்டுக்கும் மேல் கோர்ட்டுக்கும் எடுத்துக் கொண்டு போவதில் பலவித கஷ்டம் ஏற்படுகிறது. அவன் நீக்கப்பட்டது சரியா தப்பா என்பதை முடிவு செய்வதற்கு ட்ரிப்யூனல் தீர்ப்பு வரை காத்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக டன்லப் கம்பெனியார் போன்ற ஏகபோக கம்பெனிகள் கோடிக் கணக்கான ரூபாய் லாபம் அடைந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், தொழிலாளிகளின் நிலைமை முன்னேறவில்லை. சாதாரண தொழிலாளி தொழிற்சங்கம் அமைப்பதன் காரணமாக வேலையைவிட்டு நீக்கப்பட்டால், தொழில் கோர்ட்டுக்குப் போய் பரிகாரம் காணுவதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. நடுத்தர குமஸ்தாக்கள் முதலியவர்கள் சங்கம் அமைப்பதற்குக்கூட முடியவில்லை. ஆகவே, தொழிலாளிகள் விஷயமாக உள்ள சட்டங்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய முறையில் சட்டங்கள் திருத்தியமைக்கப்படுவதோடு கூட முன்னேற்றமான சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலாளர்களுக்கு வீடுகட்டும் திட்டம் (Industrial Housing Scheme) இன்னும் அதிகமாக உபயோகப்படவில்லை என்ற குறை இருந்துவருகிறது. இதை நான் சொல்லவில்லை. பார்லிமெண்டு உருப்பினர்களும் மற்றவர்

10th August 1956] [Sri M. Palaniyandi]

களும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கம் அளிக்கும் உதவித் தொகையை நமது அரசாங்கம் முழுதும் உபயோகப்படுத்துவதில்லை என்ற குறையும் சொல்லப்படுகிறது. தயவுசெய்து ஒதுக்கப்பட்ட பூராப் பணத்தையும் பயன்படுத்த நமது அரசாங்கம் முன்வர வேண்டும். மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கத்திற்கு இந்த இனத்திற்காக 50 சதவிகிதம் 'ஸப்ஸிடி' தருகிறார்கள். 50 சதவிகிதம் கடன் தருகிறார்கள். எல்லாவற்றையும் உபயோகப்படுத்தி தொழிலாளிகளுக்கு ஜில்லாக்களின் பல பாகங்களில் ஆயிரம் இரண்டாயிரம் என்று வீடுகளைக் கட்டிக்கொடுத்தால் தொழிலாளிகளுடைய வீட்டுப் பிரச்னை தீருவதோடுகூட, நகரத்திற்கு அப்பாலுள்ள கிராமப்பகுதிகளிலும் வீடு கட்டும் திட்டம் நிறைவேறும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மத்திய அரசாங்கம் ஒதுக்கிய பணத்தை என் தொழிலாளிகளின் நன்மைக்குப் பயன்படுத்தாமல் விட்டுவைக்க வேண்டுமென்று நான் கேட்கின்றேன். தொழிலாளி வீடு கட்டும் சங்கத்தைக் அணுகி கடன் கேட்டாலும் 600, 700 ரூபாய் வரையில் தொழிலாளி முதலில் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இப்படி முதலில் செலவு செய்யக்கூடிய தொழிலாளிகள் குறைவு. 100 ரூபாய் சம்பளமாவது வாங்கக்கூடிய நடுத்தர தொழிலாளிகள் தான் இந்தமுறையில் கடன்பெற்று வீடு கட்டிக்கொள்ளமுடியும். ஆனால், பெருவாரியாக இருக்கக்கூடிய சாதாரண ஏழைத் தொழிலாளிகளுக்கும் பயன்படக்கூடிய முறையில் வீடு கட்டுக்கொடுக்கும் திட்டம் செய்யப்படவேண்டும். அத்துடன் தொழிலாளர்கள் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் தொகை பூராவும் உபயோகப்படுத்த வழி வகை செய்யவேண்டுமென்று கனம் நிதி அமைச்சரவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற மாகாணங்களில் இந்தத் துறையில் லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், நமது மாகாணத்திலே அதிகமாக உபயோகப்படுத்தவில்லை என்பதையும் மந்திரி அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒவ்வொரு ஆண்டிலும் நான் சொல்லக்கூடிய பிரச்னை ஒன்று இருக்கிறது. நிதி மந்திரி அவர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும். ஹரிஜனங்களிலிருந்து கிருஸ்தவ சமூகத்திற்கு மதம் மாறியவர்களுடைய நிலைமை மோசமாக இருக்கிறது. கிருஸ்தவ சமூகத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. ஹரிஜனக் கிருஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே தான் இருக்கிறார்கள். ஐயர் கிருஸ்தவர்கள், உடையார் கிருஸ்தவர்கள், ரெட்டியார் கிருஸ்தவர்கள், பிள்ளை கிருஸ்தவர்கள் போன்ற முற்போக்கானவர்கள் ஹரிஜனக் கிருஸ்தவர்களை கோயிலில்கூட அனுமதிக்காத நிலைமை அங்கும் இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் விரட்டப்படுவதும் காணப்படுகிறது. கிருஸ்தவ சமூகத்தில் மட்டும் ஏற்றத்தாழ்வில்லாமல் சமதர்மம் இருக்கிறதென்று சொல்லிவிட முடியாது. ஹரிஜனக் கிருஸ்தவர்களுக்கு கல்விச் சலுகையளிக்க ஆந்திர அரசாங்கம் முந்திக்கொண்டுவிட்டார்கள். சென்னை அரசாங்கம் இந்தச் சலுகையை அளிப்பதில் முதன்மையாக இருக்கவேண்டியிருக்க அந்தக் காரியத்தை ஆந்திர அரசாங்கம் செய்துவிட்டார்கள். உத்தியோக விஷயங்களில் ஹரிஜனக் கிருஸ்தவர்களுக்கு சலுகை அளிக்காவிட்டாலும்கூட கல்விச் சலுகையாவது மற்ற பிற்பட்ட வகுப்பினர்களுக்கு அளிப்பதுபோல் கட்டாயம் கொடுக்கவேண்டும். இது விஷயத்தில் நமது அரசாங்கம் புனராலோசனை செய்யவேண்டும். மதச்சார்பற்ற அரசாங்கம் (secular state) என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும்போது உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள ஹரிஜனக் கிருஸ்தவர்களுக்குள், மதம் மாறியதன் காரணமாக அரசாங்க சலுகைகள் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சலுகை அளிக்கப்படவேண்டுமென்று பிற்பட்ட வகுப்பினர் கமிஷன் வந்திருந்த போதும் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் அதைப் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறார்கள். நமது அரசாங்கம் இவர்கள் விஷயத்தில் கருணையுடன் நடந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கெஜெட் பதவில்லாதவர்களின் கோரிக்கை சம்பந்தமான கேள்விகள் பலவற்றிற்கு நேற்றையதினம் கனம் நிதி மந்திரி அவர்கள் பதில்

சொன்னார்கள். சில கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, consider செய்வதாகச் சொன்னார்கள். இது நிச்சயமாக கவனிக்கப்படவேண்டிய விஷயம். நியாயமான விஷயமும்கூட. என்.ஜி.ஓ-க்களின் சம்பளமும் பஞ்சப்படியும் சற்று உயர்த்தப்படவேண்டுமென்று அதாவது ஐந்து அல்லது பத்து ரூபாயாவது உயர்த்தப்படவேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் மத்திய சர்க்கார் என்ன செய்கின்றார்களென்றால் மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் அடிப்படைச் சம்பளத்தை 55 ரூபாயிலிருந்து 60 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள். இது சென்னை சர்க்கார் கெஜெட் பதிவில்லாதவர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்காதா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு ரூபாய் உயர்த்தினால், வருஷத்திற்கு 25 லட்சம் ரூபாய் செலவாகும் என்று நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள். 5 ரூபாய் 10 ரூபாய் உயர்த்தவேண்டுமென்றால் ஏராளமாக செலவு ஆகுமே என்று சொல்லப்படுகிறது. என்.ஜி.ஓ. க்களுக்கு சம்பளம் பஞ்சப்படி உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்றால், யார்மீது வரிபோட்டு அவர்களுக்குக் கொடுப்பது என்பதைப்பற்றி உறுப்பினர்கள் சர்க்காருக்கு யோசனை சொல்லவேண்டுமென்றும் நிதி மந்திரி அவர்கள் கேட்கின்றார்கள். நான் சொல்வதென்னவென்றால், வரி கொடுக்கச் சக்தியுள்ளவர்கள் மீது வரி போடுங்கள், வரிகொடுக்கச் சக்தியில்லாத ஏழை மக்கள் மீது வரிபோடக்கூடாது. இந்த முறையில் வரி போட்டு கெஜெட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களுக்கு நிச்சயமாக ஏதாவது வழி செய்தாகவேண்டும். அவர்களுடைய பிரச்னையை நிச்சயமாகத் தீர்த்தாகவேண்டும். நம் நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து அவர்களுக்கு வேலைப்பளு நிச்சயமாக அதிகரித்து வந்திருக்கிறது. என்.ஜி.ஓ-க்களின் பிரச்னை சம்பந்தமாக நமது அமைச்சர் குழுவானது மத்திய அரசாங்கத்தினரோடு போராடி அவர்களிடமிருந்து உதவித்தொகை பெருவதற்கு வழி செய்யவேண்டும். ஆசிரியர்களுக்குப் பாதி பங்கு உதவித் தொகை மத்திய அரசாங்கம் தரப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதே மாதிரி என்.ஜி.ஓ.க்களுக்கு பாதிப் பங்கு உதவித் தொகை மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்கக்கூடாதா என்று நான் கேட்கிறேன். அரசியல் சட்டம் இடம் கொடுக்குமா கொடுக்காதா என்பது அல்ல பிரச்னை. இங்குள்ள கைத்தொழில் நிலைமை, மக்களின் சராசரி வருமான நிலைமை எல்லாவற்றையும் பார்த்து புள்ளிவிவரம் கொடுத்தார்கள். தென்னாட்டைவிட வட நாட்டில் சராசரி வருமானம் அதிகமாக இருக்கிறதென்றெல்லாம் சொல்லப்படுகிறது. வட நாட்டிலும் சில மாகாணங்களைப் பார்க்கும்போது அங்கு நல்ல வருமானம் வருகிறது. தென்னாட்டு மக்களுக்கு வருமானம் இல்லை என்று புள்ளி விவரம் தெரிவிக்கிறது. ஏன் அவர்களுக்கு இப்படி இருக்கவேண்டும். இந்த ஏற்றத்தாழ்வு தீரவேண்டுமென்றால் இங்கு உள்ளவர்களுக்கும் அதிகமாக சம்பளம் கொடுக்க நாம் முன்வர வேண்டும் என்றுதான் நான் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

10–46 a.m. ஹரிஜனங்களுக்காக நாம் ஏதோ செய்துகொண்டிருந்தாலும் அவர்களுடைய நிலமை உயரவேயில்லை. அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். நிலங்களை கொடுத்தால் மட்டும் போதாது. சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களை மாற்றி அமைக்கவேண்டும். மிராசுதார்கள் 'என்கிரோச்' செய்துகொண்டிருக்கிற நிலங்களைப் பிடுங்கி ஏழை மக்களுக்கு கொடுக்க வேண்டும். வேகமாக ஹரிஜனங்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டும் அப்பொழுதுதான் விவசாயப் பெருங்குடி மக்கள், ஆதிதிராவிட மக்கள் இவர்களின் வாழ்க்கைத் தரம் உயரமுடியும். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் ஒருவாறு உயர்ந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தப் போவதாக சர்க்கார் சொல்லிவருகிறார்கள். ஆகவே ஹரிஜனங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் அவர்களுக்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்துகொடுத்து, மற்ற வசதிகளையும் செய்துகொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். இந்த அடிப்படையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

10th August 1956]

MR. SPEAKER : I am prescribing a time limit of 15 minutes. 10-48 a.m.

* SRI J. L. P. ROCHE VICTORIA : During the discussion on the Governor's Address, the main thing which draws our attention is the implementation of the Second Five-Year Plan which is a major pre-occuation of the Government at present. Sir, the Second Five-Year Plan appears on the face of it a tremendous effort on all sides to improve the economy and the general well-being of the country. It requires the best efforts of not only the Government but also the people. With a view to get the co-operation of the people and also their active help in making the Second Five-Year Plan successful, one or two things are necessary. We have just now passed out of the First Five-Year Plan and the results though not fully successful, there are at least indications that we have been fairly successful in the First Five-Year Plan. It has also given us some lessons with regard to the working of the Second Five-Year Plan. Especially in the matter of Community Projects and the National Extension Services. I think the First Plan can claim credit for the very successful way in which they have been introduced and the work turned out so far. But still there is some room for improvement in these activities. Because as it is now, these activities are now confined only to the Community Project areas, i.e., only certain parts of the district whereas the other parts are still not able to get all the benefits out of the schemes. There have been complaints also in some places that in Community Project areas, all the amounts which are being allotted are not fully utilized, that there is still a lot of wastage and that funds are diverted to unproductive activities. I would therefore suggest that the Government should, as far as possible, try to keep a very close watch over the working of the Community Projects not only to make it work in a better way but also to see whether something could not be spared from the funds allotted to the Community Projects area with a view to help other parts of the district. Because, unless there is some sort of uniformity in the improvement of the different areas in the district, I think the Community Project work which only concentrates upon certain select areas, is not going to help us very much in the Second Five-Year Plan, which is after all a Plan for the whole country.

In the matter of Education, it is well known how illiteracy is rampant all over the country. The White Paper which is now before us is, of course, a promising effort with a view to improve the standard of education for the young people. But, what happens to the other thousands and thousands of illiterate people who are not able to follow these improvements and contribute their intelligent co-operation for the improvement of the country in different areas. I would suggest that in the educational sphere also, which is very fundamental for any improvement in the country, some more attention should be given to what is known as the "Adult Social Education", so that not only our youngsters who will always be looked after in a better way under the new scheme but also the grown up people might try to learn something and know

[Sri J. L. P. Roche Victoria] [10th August 1956

more about what is happening all around them. That can only be done through some sort of agencies like the Social Education and the Visual Education Organizations.

With regard to the industrialization of our State, it is true that Government have got certain plans. In the Second Five-Year Plan, we are talking in terms of lakhs and crores. With all the efforts which the Government might take in regard to the introduction of industries here and there, I should think that unless co-operation is forthcoming in the private sector also, the efforts of the Government with regard to the encouragement of industries in these areas is not going to help us very much. Because, in the First Plan, the efforts of the private sector have contributed much for the improvement of the country. During the Second Five-Year Plan period, on account of the uncertainty which has cropped up now, the private sector people are hesitating to come forward to invest any amount in the industrialization of the State. In the South especially, it is very well known that we are backward industrially, though, of course, there are some industries here and there. But still, it has not been properly encouraged by the Government. In this matter, I would request our Government to be always watchful with regard to safeguarding our own interests in the industrial field because we sometimes get directions from the Centre in such a way that they do not seem to understand the conditions prevailing in the South. It may be all right in regard to northern areas where there are people already who are industrial-minded and it is very easy to start an industry and make it a success there. But, in the South, there is still suspicion on the part of the public with regard to the new industrial undertakings. The Government should come forward to render all possible help in this matter by encouraging private sector. Whatever may be said with regard to industries, there is no denying the fact that discrimination does exist between the North and the South and between the private and the public sectors. The sooner that discrimination is removed the better it will be for the Madras State in the industrial field.

One of the important schemes which should be taken up under the Second Five-Year Plan is with regard to communications. It is true our aim is to raise the standard of living of the masses and to increase food production. It is also equally necessary that communications within the State and also between the States and other parts of the country are improved in such a way that there should not be any bottlenecks with regard to transportation.

In this connexion I beg to draw the attention of the Government with regard to the improvement of the Tuticorin Port which, as we know, has already received some attention from the hands of the Government of India. Now that Malabar is separating, the Cochin Port which has created a record with regard to harbour development, will not be with the Madras State. The Madras harbour also may not be able to handle large consignments of steel products, etc., if they come one after another. Even at present there is so much congestion in the Madras harbour that

10th August 1956] [Sri J. L. P. Roche Victoria]

steamers are being diverted to other ports and there is no other port offering such facilities as the Tuticorin port. I am sure the Government will keep an eye on the improvement of this important port during the Second Five-Year Plan. I understand the Government of India are taking a sympathetic view of this matter. I think a strong recommendation from the Government of Madras will go a long way to make it an accomplished fact.

One of the previous speakers mentioned about the grant of educational concessions to Harijan Christians. It is true that 11 a.m. recently the Andhra Government have removed all distinctions with regard to grant of educational concessions, and all Harijans, irrespective of the community to which they belong, have been made eligible for the concessions. The present rules in our State are to the detriment of Harijan Christians. I think the rules should be modified so as to treat all Backward Classes alike in the matter of educational concessions. Such a modification will be a great step forward in the direction of making the Five-Year Plan a success.

With regard to midday meals in schools, that matter also should receive the attention of Government. Hon. Members may be aware of the reports about private philanthropists here and there coming forward to supply midday meals to our poor children attending the schools. What is the use of increasing the number of schools, unless you are able to make the children attend the schools? On account of the poverty in the country, many children are not able to get anything to eat and they are not able to attend schools. Unless the poor children are given midday meals and made to attend schools, they will not be able to derive any benefit out of the hundreds of schools that are cropping up all over the country. In addition to the contribution by private individuals, the Government should make a substantial allotment for the supply of midday meals to the poor children attending the schools. When education is well-established, we are on very safe ground with regard to the future improvement of our country.

*SRI M. CHADAYAN : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, അസെംബ്ലിയുടേയും കൌൺസിലിൻെറയും സംയുക്തയോഗത്തിൽ മലബാർ, കർണ്ണാടക മെമ്പർമാരോടു യാത്രപറഞ്ഞുകൊണ്ടു ഗവർണ്ണർ ചെയ്ത പ്രസംഗത്തെ ഞാൻ സ്വാഗതം ചെയ്യുന്നു. അതേ സമയം ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ മലബാറിലേയും കാസർകോഡിലേയും മെമ്പർമാരുടെ ഭാവിയെ സംബന്ധിച്ച് യാതൊന്നും പറഞ്ഞു കാണാത്തതിൽ അത്യന്തം വ്യസനിക്കുകയും ചെയ്യുന്നു. അടുത്തുതന്നെ രൂപമെടുക്കാൻ പോകുന്ന പുതിയ കേരള സംസ്ഥാനത്തിൽ പ്രസിഡൻ്റു് ഭരണമാണ് വരാൻ പോകുന്നതു്. തിരുവിതാംകൂർ-കൊച്ചിയിൽ പ്രസിഡൻ്റു ഭരണമാണ് ഇപ്പോൾ നിലവിലുള്ളതെന്നതുകൊണ്ടു യാതൊരു കുററവും ചെയ്യാത്ത മലബാറിലേയും കാസർകോഡിലേയും മെമ്പർമാരേയും ശിക്ഷിക്കുന്നതു് ഭരണഘടനയ്ക്കു് വിരുദ്ധവും അന്യായവുമാണെന്നു ഞാൻ ഗവമ്മേണ്ടിൻെറ ശ്രദ്ധയിൽ പെടുത്തുന്നു. ലക്ഷക്കണക്കിനുള്ള ജനങ്ങൾ തിരഞ്ഞെടുത്തയച്ച പ്രതിനിധികളെ അവരുടെ കാലാവധി തീരുന്നതുവരെ നിയമസഭയിൽ തുടരാൻ അനുവദിക്കാതിരിക്കുന്ന നടപടിയിൽ ഞങ്ങൾക്കു വലിയ പ്രതിഷേധമുണ്ടു്. മലബാറിലേയും കാസർകോഡിലേയും മെമ്പർമാരെ ഉൾപ്പെടുത്തി ഒരു താൽക്കാലിക ഗവമ്മേണ്ടു് രൂപീകരിക്കുന്നതിനും ജനങ്ങളാൽ തിരഞ്ഞെടുക്കപ്പെട്ട പ്രതിനിധികളുടെ ഒരു ഭരണം ആ പ്രദേശങ്ങളിലെ ജനങ്ങൾക്കു നിഷേധിക്കപ്പെടുന്നതിനെ തടയുന്നതിനും വേണ്ട നടപടികളെടുക്കണമെന്നു് മദ്രാസ് ഗവമ്മേണ്ട് ഇൻഡ്യാ ഗവമ്മേണ്ടിനോടു് ശുപാർ ചെയ്യണമെന്നു് ഞാനാവശ്യപ്പെടുന്നു. മലബാറിനും കാസർകോഡിനും പ്രസിഡൻറു

[Sri M. Chadayan] [10th August 1956

രേണം ആവശ്യമില്ല. ഞങ്ങൾ യാതൊരു കുററവും ചെയ്തിട്ടില്ല. അതുകൊണ്ടു് മാത്രമാണു് ഒരു താല്ക്കാലിക ഗവൎമ്മേണ്ടു പുതിയ തിരഞ്ഞെടുപ്പുവരെ രൂപീകരിക്കണമെന്നു ഞങ്ങൾ ആവശ്യപ്പെടുന്നതു്.

വിഭജനം അടുത്തുവരികയാണു്. ഈ ഘട്ടത്തിൽ മലയാളികൾക്കു കിട്ടേണ്ടുന്ന കടത്തിൻേറയും സ്വത്തിൻേറയും വിഹിതം നിശ്ചയിക്കുന്നതിനെ സംബന്ധിച്ചുള്ള ചൎച്ചകൾ നടത്തുമ്പോഴും തീരുമാനങ്ങളെടുക്കുമ്പോഴും മലയാളികളുടെ പ്രതിനിധികളെക്കൂടി അതിൽ പങ്കെടുപ്പിക്കേണ്ടുന്നതു് ഗവൎമ്മേണ്ടിൻെറ ചുമതലയാണു്. ആ കാൎയ്യത്തിൽ ഗവൎമ്മേണ്ടു് ശ്രദ്ധിക്കുമെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു. വിഭജനം അടുത്തുവരുന്ന ഈ സന്ദൎഭത്തിൽ കഴിഞ്ഞ ഏതാനും മാസങ്ങൾക്കുള്ളിൽ മലബാറിൽനിന്നും വിലപിടിച്ച മരങ്ങളും ആനകളും മത്സ്യം പിടിക്കുന്നതിനുള്ള ഉപകരണങ്ങളും മററും തമിഴ് നാട്ടിലേയ്ക്കു് കടത്തിക്കൊണ്ടുപോന്നിട്ടുണ്ടെന്നുള്ള ആക്ഷേപങ്ങളും അതിനെ സംബന്ധിച്ചു ഗവൎമ്മേണ്ടു് പുറപ്പെടുവിച്ചിട്ടുള്ള പ്രസ്നോട്ടുകളും മാതൃഭൂമി മുതലായ പത്രങ്ങളിൽ വന്നിട്ടുള്ള റിപ്പോൎട്ടുകളും എം.പി.സി.സി. പ്രസിഡൻറു തുടങ്ങിയുള്ളവർ പുറപ്പെടുവിച്ചിട്ടുള്ള പ്രസ്താവനകളുമെല്ലാം പരിശോധിച്ചാൽ ഇതിനെ സംബന്ധിച്ചു ശരിയായ ഒരന്വേഷണം നടത്തേണ്ടതാവശ്യമാണെന്നു് വ്യക്തമാവും. ഈ ആക്ഷേപങ്ങൾ തെററാകാം ശരിയാകാം. ശരിയെന്നോ തെററെന്നോ ഞാൻ വാദിക്കുന്നില്ല. ഏതായാലും ഒരന്വേഷണം നടത്തേണ്ടതത്യാവശ്യമാണെന്നു മാത്രമാണു് ഞാൻ പറയുന്നതു്. മലയാളി മെമ്പർമാരും തമിഴ് മെമ്പർമാരും ഉൾപ്പെട്ട ഒരു കമ്മിററി രൂപീകരിച്ചു ഇതിനെ സംബന്ധിച്ചു ശരിയായ ഒരന്വേഷണം നടത്തി വാസ്തവസ്ഥിതി വെളിച്ചത്തുകൊണ്ടുവരുന്നതു് വിഭജനം അടുത്തിരിക്കുന്ന ഈ അവസരത്തിൽ ജനങ്ങളുടെ തെററിദ്ധാരണകളും ആശങ്കകളും സംശയങ്ങളും ദൂരീകരിക്കാനുപകരിക്കും. ഗവൎമ്മേണ്ടിൻെറ പ്രസ്നോട്ടു വായിച്ചാൽ മനസ്സിലാകുന്നതു മലബാറിൽനിന്നും സാധനങ്ങളൊന്നും തമിഴ്നാട്ടിലേയ്ക്കു കടത്തിക്കൊണ്ടുപോകരുതെന്നു് ഉത്തരവുകൊടുത്തിട്ടുണ്ടെന്നാണു്. അതേ സമയം പത്രറിപ്പോൎട്ടുകളും ഉത്തരവാദിത്വമുള്ള ചില ആളുകളുടെ പ്രസ്താവനകളും വായിച്ചാൽ ഇതിൽ കുറെ വാസ്തവമുണ്ടെന്നും തോന്നുന്നു. അങ്ങിനെയാണെങ്കിൽ ഗവൎമ്മേണ്ടുത്തരവിനെ വിഗണിച്ചുകൊണ്ടും ചില ഉദ്യോഗസ്ഥന്മാർ മലബാറിൽനിന്നും തമിഴ്നാട്ടിലേക്കു സാധനങ്ങൾ കടത്തിക്കൊണ്ടുപോകാൻ നടപടിയെടുത്തുവെന്നാണു വരുന്നതു്. ഏതു ഉദ്യോഗസ്ഥന്മാരാണു് ഇതിനുത്തരവാദികളെന്നു കണ്ടുപിടിക്കുന്നതിനും വാസ്തവസ്ഥിതി അറിഞ്ഞു ജനങ്ങളുടെ ഭയവും ശങ്കയും ദൂരീകരിക്കുന്നതിനും ഞാൻ അഭിപ്രായപ്പെട്ട തരത്തിലുള്ള ഒരു കമ്മിററിമുഖേന സാധിക്കുന്നതാണു്. ആ കാൎയ്യം ഗവൎമ്മേണ്ടിൻെറ അടിയന്തിരശ്രദ്ധയിൽപെട്ടുകാണാൻ ഞാനാഗ്രഹിക്കുന്നു. ഈ കാൎയ്യം മദിരാശി ഗവൎമ്മേണ്ടു് ചെയ്യില്ലെങ്കിൽ ഇന്ത്യാ ഗവൎമ്മേണ്ടിനെ ഞങ്ങൾക്കു പ്രേരിപ്പിക്കേണ്ടിവരുന്നതാകും.

ഹരിജനങ്ങളുടെ കാൎയ്യത്തെ സംബന്ധിച്ചാണു് അടുത്തതായി എനിക്കു പറയാനുള്ളതു്. മദ്രാസ് ഗവൎമ്മേണ്ടിൽ ഒരു പ്രത്യേക ഹരിജൻ വെൽഫെയർ ഡിപ്പാൎട്ടുമെൻറുണ്ടു്. മലബാറിലും കാസർകോഡ് താലൂക്കിലും ഇന്നു ആ ഡിപ്പാൎട്ടുമെണ്ടു പ്രവൎത്തിക്കുന്നുണ്ടു്. എന്നാൽ ഈ പ്രദേശങ്ങൾ വിഭജനത്തിനുശേഷം മദിരാശിയിൽനിന്നു വേർപെട്ടുപോകുന്നതുകൊണ്ടും തിരു-കൊച്ചിയിൽ അങ്ങനെ ഒരു പ്രത്യേക ഡിപ്പാൎട്ടുമെണ്ടു് ഇല്ലെന്നതുകൊണ്ടും പുതിയ കേരളസ്റ്റേററിൽ ഹരിജനങ്ങളുടെ നിലയെന്തായിരിക്കുമെന്നും ഹരിജൻ വകുപ്പിൻെറ പ്രവൎത്തനം ഏതു വിധത്തിലായിരിക്കുമെന്നും എനിക്കു അറിയാൻ ഉൽക്കണ്ഠയുണ്ടു്. ഗവൎണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ അതിനെപ്പററി ഒന്നും പറഞ്ഞു കാണുന്നില്ല. ഗവൎമ്മേണ്ടു അതിനെപ്പററി ഗാഢമായാലോചിക്കുമെന്നും ഇതര സ്റ്റേററുകളിലെപ്പോലെ പുതിയ കേരള സ്റ്റേററിലും ഹരിജനവകുപ്പു് തുടൎന്നുപോകണമെന്നു മദിരാശി ഗവൎമ്മേണ്ടു് ഇന്ത്യാ ഗവൎമ്മേണ്ടിനോടു് ശിപാൎശ്ശ ചെയ്യുമെന്നും ഞാൻ വിശ്വസിക്കുന്നു.

മുസ്ലീങ്ങൾക്കും മററു ന്യൂനപക്ഷസമുദായങ്ങൾക്കും ഗവൎമ്മേണ്ടിലും നിയമസഭയിലും തദ്ദേശസഭകളിലും ഉദ്യോഗങ്ങളിലും ന്യായമായ പ്രാതിനിധ്യം നൽകേണ്ടതു് ഗവൎമ്മേണ്ടിൻെറ കടമയാണു്. ഇക്കാൎയ്യം ഗവൎമ്മേണ്ടു് വേണ്ടവിധം ശ്രദ്ധിക്കുമെന്നു ഞാൻ വിശ്വസിക്കുകയും ചെയ്യുന്നു. മലബാറിൽ മുസ്ലീങ്ങൾക്കു് പഴയ പള്ളികൾ പുതുക്കിപ്പണിയുന്നതിനും പുതിയ പള്ളികൾക്കു സ്ഥലസൌകൎയ്യം നൽകുന്നതിനും ഗവൎമ്മേണ്ടിൻെറ കല്പന പ്രതീക്ഷിച്ചിരിക്കയാണെന്നു ജില്ലാ ഉദ്യോഗസ്ഥന്മാരിൽനിന്നും മനസ്സി

ലാക്കാൻ കഴിഞ്ഞിട്ടുണ്ട്. ഒട്ടും കാലതാമസം കൂടാതെതന്നെ ആ കല്പന ജില്ലാ ഉദ്യോഗസ്ഥന്മാർക്ക് അയച്ചു കൊടുക്കണമെന്നും അങ്ങിനെ മുസ്ലിംങ്ങൾക്കു മതാരാധനാ സൌകര്യങ്ങൾ ചെയ്തുകൊടുക്കണമെന്നും ഞാന് അപേക്ഷിക്കുന്നു.

അടുത്തതായി എനിക്കു പറയാനുള്ളത് അംശം ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ കാര്യത്തെപ്പററിയാണ്. അംശം ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ കാര്യം ഒരു ക്യാബിനററ് സബ്ബ്കമ്മിററി പരിശോധിച്ചുകൊണ്ടിരിക്കയാണെന്ന് മന്ത്രിമാർ പറഞ്ഞു തുടങ്ങിയിട്ടു കാലം കുറെയായി. അംശം ഉദ്യോഗസ്ഥന്മാരെ ഗവമ്മേണ്ടു സർവ്വീസിൽ പെടുത്തുകയും അവരുടെ കുട്ടികൾക്ക് വിദ്യാഭ്യാസ സൌകര്യം ചെയ്തുകൊടുക്കുകയും അവരുടെ അവശതകൾ പരിഹരിച്ചുകൊടുക്കയും മററും വിഭജനത്തിനു മുമ്പുതന്നെ ഗവമ്മേണ്ടു ചെയ്യേണ്ടതായിരുന്നുവെന്നും ഞാൻ ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽ പെടുത്തുന്നു. എൻ ജി ഒ. മാരുടെ പ്രതിനിധി സംഘത്തിന്റെ ഡൽഹി യാത്രയെപ്പററിയുള്ള പത്രറിപ്പോർട്ടുകൾ ഞാൻ കണ്ടു. എൻ.ജി ഒ. മാരുടെ ന്യായമായ അവകാശങ്ങൾ വകവച്ചുകൊടുക്കേണ്ടതും അവശതകൾ പരിഹരിച്ചു കൊടുക്കേണ്ടതും ഗവമ്മേണ്ടിന്റെ കടമയാണ്. ആ കാര്യം വിഭജനത്തിനുമുമ്പുതന്നെ ചെയ്യുമെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു.

ഭക്ഷണസാധനങ്ങളുടെ വില ദൈനംദിനം വർദ്ധിച്ചുകൊണ്ടിരിക്കുന്നതുകൊണ്ട് ജനങ്ങൾക്കുള്ള സാമ്പത്തിക വിഷമതകൾ ചില്ലറയൊന്നുമല്ല. മലബാറിലെങ്ങും, കാസർകോഡു താലൂക്കിലും, എല്ലാ ഗ്രാമങ്ങളിലും ന്യായവിലഷാപ്പുകൾ തുറന്നു ഭക്ഷ്യസാധനങ്ങളെ സംബന്ധിച്ചിടത്തോളം ജനങ്ങൾക്കുണ്ടായിട്ടുള്ള ബുദ്ധിമുട്ടു പരിഹരിച്ചുകൊടുക്കണമെന്ന് ഞാൻ ഗവമ്മേണ്ടിനോടഭ്യർത്ഥിക്കുന്നു. ഇപ്പോൾ കർക്കടകമാസമാണ്. കർക്കടമാസമെന്നു പറഞ്ഞാൽ പൊതുവെ തൊഴിലില്ലായ്മയും ദാരിദ്ര്യവും മൂർദ്ധന്യത്തിലെത്തുന്ന കാലമാണ്. ഭക്ഷ്യസാധനങ്ങളുടെ വില വർദ്ധനവിനു പുറമേ മലബാറിലുണ്ടാകുന്ന ഉല്പന്നങ്ങളുടെ വിലയിടിവു ജനങ്ങളുടെ കഷ്ടപ്പാടും ദുരിതവും ഒന്നുകൂടെ വർദ്ധിപ്പിച്ചിട്ടുണ്ട്. അതുകൊണ്ടു മലബാറിലെ എല്ലാ അംശങ്ങളിലും ന്യായവില ഷോപ്പുകൾ കൊയ്ത്തു തുടങ്ങുന്നതിനുമുമ്പു ഉടനെ തുറക്കണമെന്ന് ഞാൻ അപേക്ഷിക്കുന്നു.

രണ്ടാം പഞ്ചവത്സര പദ്ധതിയനുസരിച്ചു മലബാറിലും തെക്കൻകന്നാടകത്തിലുമായി അനുവദിച്ചിരുന്ന ഒരു കോടി ഉറുപ്പികയുടെ തോട്ടുകീറുന്ന പണികൾ നിറുത്തിവയ്ക്കുവാൻ മദിരാശി ഗവമ്മേണ്ടു തീരുമാനിച്ചിട്ടുള്ളതായി ഇന്നലത്തെ മാതൃഭൂമിയിൽ കാണുന്ന റിപ്പോർട്ട് ശരിയാണെങ്കിൽ പുതുതായി സംസ്ഥാനവിഭജനം നടക്കാൻ പോകുന്ന ഈ ഘട്ടത്തിൽ ഒരു പുതിയ കേരള സ്റ്റേററ് ഉടലെടുക്കാൻ പോകുന്ന അവസരത്തിൽ ഗവമ്മേണ്ട് ഇങ്ങനെ ഒരു നടപടി സ്വീകരിച്ചതു വളരെ നിർഭാഗ്യകരമാണെന്ന് പറയാതെ തരമില്ല. ആ റിപ്പോർട്ട് ശരിയാണെങ്കിൽ ഗവമ്മേണ്ടു അതു പുനരാലോചനചെയ്യണമെന്നും പദ്ധതിയിലുൾപ്പെടുത്തിയിട്ടുള്ള പണികൾ നടത്തുന്നതിന് ഉത്തരവു പുറപ്പെടുവിക്കണമെന്നും ഞാൻ അഭ്യർത്ഥിക്കുന്നു. ഈ പദ്ധതി കൊച്ചിയിൽനിന്നു കല്ലായിലേക്കും കല്ലായിൽനിന്നു വടകര, വളർപട്ടണം, സുൽത്താൻതോട്, കവ്വായി എന്നിവിടങ്ങളിലേയ്ക്കുടത്തു വാണിജ്യഗതാഗതങ്ങൾക്ക് സൌകര്യം ഉണ്ടാക്കുന്നതാണ്. കേരളവും തെക്കൻ കന്നാടകവും തമ്മിൽ ബന്ധപ്പെടുത്തേണ്ടതു വളരെ ആവശ്യമായതുകൊണ്ടു അതു രണ്ടാമത്തെ പദ്ധതിയിൽതന്നെ ഉൾപ്പെടുത്തേണ്ടതാണ്. മലബാറിൽനിന്നും കാസർകോഡിൽനിന്നും മത്സ്യം പിടിക്കുന്ന വില പിടിച്ച യന്ത്രങ്ങൾ തമിഴ്നാട്ടിലേക്കു ഇറക്കുമതി ചെയ്തിട്ടുണ്ടെങ്കിൽ അതു ആ സ്ഥലത്തുതന്നെ മടക്കി അയക്കുവാൻ ഗവമ്മേണ്ട് ഉത്തരവിടണം. മലബാറിലെ ഫിഷർമെൻ അസോസിയേഷൻ ഇതിനെ സംബന്ധിച്ചു പല ആക്ഷേപങ്ങളും പ്രമേയങ്ങളും ഗവമ്മേണ്ടിലേയ്ക്കയച്ചിട്ടുണ്ട്. നിന്നു തിരയാനുള്ള സ്ഥലവും ഞങ്ങൾക്കില്ല. അങ്ങിനെയിരിക്കുമ്പോൾ വിഭജനം അടുത്തിരിക്കുന്ന ഈ ഘട്ടത്തിൽ മലബാറിൽനിന്നും കേരള സ്റ്റേററിന്റെ പൊതുസ്വത്തിൽനിന്നു വിലപിടിച്ച പലതും തമിഴ്നാട്ടിലേയ്ക്കു കടത്തിക്കൊണ്ടു പോകുന്നതിന്റെ ഉദ്ദേശം മനസ്സിലാകുന്നില്ല. അതു വളരെ നിർഭാഗ്യകരമാണെന്നേ എനിക്ക് പറയാനുള്ളൂ. നാമെല്ലാം ഇന്ത്യയിലെ പൌരന്മാരാണ്. ഇന്ത്യയുടെ പൊതുസ്വത്ത് എല്ലാവർക്കും അവകാശപ്പെട്ടതാണ്. വിഭജനസമയത്തു മലബാറിനു അവകാശപ്പെട്ടതു കണക്കു പറഞ്ഞു വാങ്ങാൻ മലബാറിന്റെ ഒരു പ്രതിനിധി മന്ത്രിസഭയിൽ ഇല്ലാത്തതു പരിതാപകരമാണ്.

[Sri M. Chadayan] [10th August 1956

ഞാൻ അവസാനമായി ഈ സഭയോടും തമിഴ്നാട്ടിലെ എന്റെ സ്നേഹിതന്മാരായ മെമ്പർമാരോടും പറയുന്നത് നിങ്ങളിൽനിന്ന ഞങ്ങൾ വേർവിട്ടുപോകുമ്പോൾ മലബാറിലേയും തെക്കൻ കന്നടകത്തിലെയും മെമ്പർമാരോടു സൌഹാർദ്ദം കാണിക്കണമെന്നാണ്. ഞങ്ങളുടെ ജനസംഖ്യക്കനുസരിച്ചു ഒരു പൈപോലും നഷ്ടപ്പെടുത്താതെ സ്വത്തുക്കളും, പണവും, സാമാനങ്ങളും, കടങ്ങളും, ലൈബ്രറി പുസ്തകങ്ങളും എല്ലാം ഞങ്ങൾക്കു ഭാഗിച്ചുകിട്ടേണ്ടുന്നതാണ്. മലബാറിൽനിന്നും കാസർകോഡിൽനിന്നും തമിഴ്നാട്ടിലേക്കു കൊണ്ടുപോയ സാധനങ്ങൾ കഴിയുന്നതും വേഗം തിരിച്ചയക്കേണ്ടതാണ എന്ന അവസാനമായി ഗവമ്മേന്റിനോട് അഭ്യർത്ഥിക്കുന്നു. ഗവണ്ണരുടെ പ്രസംഗത്തെ ഞാൻ അവസാനമായി അഭിനന്ദിക്കുകയും ചെയ്യുന്നു.

11–14 a.m. *SRI V. K. PALANISWAMY GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரையிலே சர்க்கார் செய்திருக்கிற பல காரியங்களையும் இனிமேல் செய்யப்போகிற காரியங்களைப் பற்றியும் விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். நீர்ப்பாசன விஷயத்திலே, மேட்டூர் கால்வாய் திட்டம் பூர்த்தி அடைந்து விட்டதாகவும், மலம்புழா திட்டம் அநேகமாக பூர்த்தியாகிவிட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பரம்பிகுளத் திட்டத்தைப் பற்றி இரண்டு வருஷங்களாக பேச்சுக்கள் நடந்துகொண்டு வருகின்றன. இனி தமிழ் நாட்டிலே பெரிய திட்டங்கள் இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பரம்பிகுளத் திட்டத்துக்காக சென்ற வருஷ பட்ஜெட்டிலே கொஞ்சம் பணம் ஒதுக்கிவைக்கப்பட்டது. அதுவல்லாமல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அது சேர்க்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது இதுபற்றி திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்துடன் பேசவேண்டிய அவசியம் இருப்பதால் இந்தத் திட்டத்தைத் தள்ளிப்போட்டிருப்பதாகத் தெரிகிறது. திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தோடு பேசவேண்டியது அவசியம் தான். இதுபற்றி பேசி முடிவடைவதற்குள்ளாக நமது ராஜ்யத்திலேயே உள்ள இத்திட்டத்தின் ஒரு பகுதியை ஆரம்பித்துச் செய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். இந்தத் திட்டத்திலுள்ள 7 அணைக்கட்டுகளில் 6 அணைக்கட்டுகள் நமது ராஜ்யத்திலேயே இருக்கின்றன. இந்த 6 அணைக்கட்டுகளில் 4 அணைக்கட்டுகளை உடனடியாக ஆரம்பித்துச் செய்தால் பின்னால் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்துடன் பேச்சுவார்த்தை முடிந்த பின் மற்ற அணைக்கட்டுகளைக் கட்டி அதிலிருந்து வரும் தண்ணீரை இத்துடன் சேர்த்துக் கொள்ளலாம். அதற்காக பரம்பிகுளத் திட்டத்தின் இந்த ஒரு பகுதியை தள்ளிப் போடவேண்டிய அவசியமில்லை. இந்தத் திட்டம் மிகவும் சுலபமாக நிறைவேற்றக்கூடிய பெரிய திட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக குண்டா திட்டத்தை ஆரம்பித்தார்கள். அதற்கு 35 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அதே 35 கோடி ரூபாயைச் செலவு செய்தால் பரம்பிகுளத் திட்டத்தில் $1\frac{1}{2}$ லட்ச கிலோவாட் மின்சாரம் கிடைக்கும். அதோடு 3 லட்ச ஏகராவுக்குத் தண்ணீர் பாயும். தமிழ் நாட்டிலே இந்தத் திட்டத்தைப் போல வேறு சுலபமான பெரிய திட்டம் ஒன்றுமில்லை. இப்பொழுது நடைபெறும் சிறிய திட்டங்களெல்லாம் ஒரு வருஷத்திற்குள் முடிவடைந்துவிடும். அதற்கு மேலே செய்வதற்கு வேறு வேலை கிடையாது. ஆகையால் பரம்பிகுளத் திட்டத்தின் ஒரு பகுதியை உடனடியாக ஆரம்பித்து நடத்தினால் இப்பொழுது நடக்கின்ற திட்டங்களிலே உபயோகப்படுத்தப்படும் இயந்திரங்கள், ஆட்கள் அனைத்தையும் இந்தத் திட்டத்துக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். திருவாங்கூர்-கொச்சி சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி அந்த பிரதேசத்திலுள்ள அணைக்கட்டையும் நம் ராஜ்யத்திலுள்ள மற்ற இரண்டு அணைக்கட்டுகளையும் பின்னால் சேர்த்துக் கொள்ளலாம். ஆகையால் பெரிய திட்டத்துக்காக காத்திருக்காமல் நமது ராஜ்யத்திலிருக்கும் 4 அணைக்கட்டுகளை முதலில் ஆரம்பித்துக் கட்டவேண்டும் என்றும், இதைத் தள்ளிப் போடக்கூடாது என்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, பல தடவை சொல்லியிருக்கிற விஷயத்தைப் பற்றி மறுபடியும் சொல்லுகிறேன். ஆளியார்வேலியில் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு குடி தண்ணீர் திட்டம் கொண்டுவரவேண்டியது மிகமிக அவசியம். இந்த பஞ்சாயத்துகளில் காலரா உண்டாகி ஆற்றுக்குப் பக்கத்தில் இந்த பஞ்சாயத்துகளுக்கு கீழே உள்ள கிராமங்

10th August 1956] [Sri V. K. Palaniswamy Gounder]

களிலும் பரவி விடுகிறது. ஆகையால் இந்தப் பஞ்சாயத்துக்களுக்குக் குடி தண்ணீர் திட்டம் வேண்டுமென்று நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். கம்பம்வேலி பஞ்சாயத்துக் குடிதண்ணீர் திட்டம் இப்பொழுது ஆரம்பித்து வேலை நடந்துகொண்டு வருவதைக் கேட்டு நான் சந்தோஷப் படுகிறேன். ஆளியார்வேலியிலும் 4, 5 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன— கோட்டூர், காளியாபுரம், வேட்டைக்காரன்புதூர், உடையகுளம். அங்கே காலரா வந்தால் பக்கத்திலுள்ள கிராமங்களும் பாதிக்கப்படுகின்றன. ஆதலால் இங்கே குடிதண்ணீர் திட்டம் அவசியம் வேண்டும்.

எனது பகுதியிலே தூணக்கடவு என்ற ஒரு பாரஸ்ட்டு இருக்கிறது. தென் இந்தியாவிலேயே மிகப்பெரிய தேக்கு மரங்களும் மற்ற மரங்களும் அங்கே வெட்டி எடுக்கப்படுகின்றன. அந்தப் பாரஸ்ட்டு பாதி கோயம்புத்தூர் ஜில்லாவையும் பாதி மலையாளம் ஜில்லாவையும் சேர்ந்தது. அதற்குப் போகிற வழி கோயம்புத்தூர் ஜில்லாவிலேதான் இருக்கிறது. அந்த இடத்திலிருந்து காட்டிலாகா உத்தியோகஸ்தர்கள் ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டி உபயோகத்துக்காக கொண்டு வருகிறார்கள். மலையாளம் ஜில்லாவில் இருக்கும் பாதிக் காடும் கோயம்புத்தூர் பாரஸ்ட் ஆபீஸர் கீழே தான் இருக்கிறது. அந்தக் காட்டிற்கு கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்து தான் வழி இருக்கிறதே தவிர மலையாள ஜில்லாவிலிருந்து வழி இல்லை. நமது ராஜ்யம் பிரிக்கப்படும்போது அந்தக் காட்டில் பாதிப் பகுதி மலையாளம் ஜில்லாவிற்குத் தான் போகும். ஆனாலும் அந்தக் காட்டுக்குப் போவதற்கு வழி மலையாளம் ஜில்லாவில் இல்லை. கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு வந்து சுற்றித் தான் போகவேண்டும். இப்போது நாம் பத்திரிகைகளில் ஒரு விஷயத்தைப் பார்த்தோம். மலையாளம் ஜில்லாவில் மரங்களை வெட்டி தமிழ் நாட்டிற்குக் கொண்டுபோய்விட்டார்கள் என்று. உண்மையில் அப்படி ஒன்றும் இல்லை. சென்னை ராஜ்யத்திலுள்ள கோயம்புத்தூர் ஜில்லாவையும், மலையாளம் ஜில்லாவையும் சேர்ந்ததுதான் அந்தக் காடு. இரண்டு பகுதியிலும் வெட்டும் மரங்களை கோவை ஜில்லாவிலுள்ள பொள்ளாச்சி டிப்போவில்தான் போடுவது வழக்கம். அப்படித்தான் இப்பொழுது போட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும், அங்கிருந்து இங்கு யானைகளைக் கொண்டுவந்து விட்டதாகவும் பத்திரிகைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அப்படி ஒன்றும் இல்லை. யானைகள் இங்கேயும் அங்கேயும்தான் போய்வந்துகொண்டு இருக்கின்றன. இரண்டு காடுகளும் ஒரே இடத்தில் இருப்பதால் நான் போய் அந்த இடத்தைப் பார்த்திருக்கிறேன். அந்த இடம் எங்கள் ஊருக்குப் பக்கத்திலேதான் இருக்கிறது. மேலும், நான்கு யானைகளை சென்னை சர்க்கார் கொண்டுவந்துவிட்டால் சென்னை சர்க்கார் பிரமாதமாக லாபம் சம்பாதித்துவிட முடியுமா, என்ன ? அப்படி ஒன்றும் நடக்கவில்லை. அதோடு கூட, ஒரு பங்களாவைப் பிரித்துக் கொண்டுபோய் விட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது. அது ஒரு தற்காலீகமாக இருந்த பங்களா (temporary rest house). ஊளாண்டி ரோடு என்று 20 மைல் நீள ரோடு ஒன்று அங்கே புதிதாகப் போடுகிறார்கள். அங்கே ஆபீஸர்கள்போய் தங்குவதற்கு வேண்டுமென்று பங்களாவைப் பிரித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பங்களாவைப் பிரித்துக்கொண்டு போவதால் என்ன பெரிய லாபம் கிடைத்துவிடப்போகிறது ? மூவாயிரம், அல்லது நாலாயிரம் ரூபாய் கிடைக்கலாம். அவ்வளவு தான். ஆகவே வெறுமனே அனுவசியமாகக் குற்றம் கூறிக்கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதையெல்லாம் சொன்னேன்.

மேலும், எங்களுடைய பிராந்தியம் பாராஸ்டுக்கு சமீபத்தில் இருக்கிறது. பட்டா பூமியிலிருந்து விறகு, விவசாய கருவிகளுக்கு மரம் வெட்டிக்கொண்டுவர வேண்டுமானால் ஜில்லா பாரெஸ்ட் ஆபீஸருக்கு விண்ணப்பம் போட வேண்டும். விண்ணப்பம் போட்ட பிறகு, ஸ்தலத்தில் மரங்கள் இருக்கிறதா, அவை எவ்வளவு சுற்றளவு கொண்டவை, அவற்றை எப்படி வெட்டலாம் என்பதையெல்லாம் பார்த்துவிட்டு, அதற்கு மேலே அனுமதி கொடுக்கிறார்கள். அனுமதி கிடைப்பதற்கு மாதக்கணக்கில் தாமதம். இப்படிச் செய்வது பட்டாதாரர்களுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்கு வழி செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். 11-22 a.m.

[Sri V. K. Palaniswamy Gounder] [10th August 1956

அடுத்தப்படியாக, கீழ் பவானி வாய்க்கால் திட்ட விஷயமாக இங்கே காரசாரமாகப் பேசப்பட்டது. அதைப் பார்த்து நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். எங்கள் ஜில்லாவாகிய கோயம்புத்தூர் ஜில்லாவில் இந்தத் திட்டம் இருப்பதால் இது நன்றாக நடக்க வேண்டுமென்று எங்களுக்கு ஆசை. ஆகவே இந்தப் பிரச்னையை முதலில் கவனித்துத் தீர்க்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறேன். இவ்வளவு கஷ்டம் வந்திருக்கவேண்டிய அவசியமேயில்லை. இதை ஒழுங்காகத் தீர்த்திருக்கலாம். கஷ்டம் இல்லை என்று ஒரு சாரார் சொல்கிறார்கள் ; ரொம்பக் கஷ்டம் என்று இன்னொரு சாரார் சொல்கிறார்கள். இருசாரார் சொல்வதும் சரியல்ல. உண்மையில் சின்னச் சின்ன கஷ்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, உணவு கண்ட்ரோல் இருந்தது. கண்ட்ரோல் ரொம்ப நல்ல ஏற்பாடு. உணவுப் பொருள்களை நியாயமான விலைக்கு வாங்கி அவற்றை உபயோகிப்பவர்களுக்கு நியாயமான விலைக்கு கிடைக்கச்செய்வதே கண்ட்ரோல். இந்தக் கண்ட்ரோல் நமது நாட்டில் எவ்வளவு கஷ்டமாக இருந்தது ? அதேமாதிரித்தான் இந்த கீழ் பவானி வாய்க்கால் விஷயமும். தண்ணீர் வினியோகம் செய்யப்பட வேண்டியது ரொம்பவும் அவசியம். ஆனால் சரியாகத் தண்ணீர் வினியோகம் செய்யப்படாவிட்டால் கீழ்க்கட்டிலுள்ளவர்களுக்கு தண்ணீர் வராது.

இப்போது, எந்த இடத்தில் எந்த தானியம் போடப்பட்டிருக்கிறது என்று பார்த்துச் சொல்லும் அதிகாரம் சின்னச் சின்ன உத்தியோகஸ்தர்களிடம் இருக்கிறது. இந்த அதிகாரத்தை சிறிய உத்தியோகஸ்தர்கள்தான் செய்யவேண்டியிருக்கிறது. ஆகையால் தனித்தனி மகசூலுக்கு தனித் தனி வரிகள் போடக்கூடாது. பருத்தி விதைத்தால் அதற்கு அதிக வரியும், தானியம் விதைத்தால் அதற்கு குறைந்த வரியும் விதிக்கப்படுகிறது. அது சரியல்ல. நெல், கரும்பு போன்ற பயிர்களுக்கு அதிக வரியும், மற்ற புஞ்சை தானியங்களுக்குக் குறைந்த வரியும் விதித்தால் நன்றாக இருக்கும். அதை விட்டுவிட்டு ஒவ்வொரு மகசூலுக்கும் தனித் தனி வரி போடுவது நல்லது அல்ல. தவிர நெல் சாகுபடி செய்கிற பூமிக்கு அதிக வரியும், இதுவரையும் தோட்டக்காலாயிருந்த பூமிகளுக்கு மத்திபமான வரியும், இதுவரையும் புஞ்சையாயிருந்த பூமிகளுக்குக் குறைந்த வரியும் விதிப்பது ஞாயம். வரியை வசூலித்துத்தான் ஆகவேண்டும். ரூபாய் 10 கோடி செலவில் திட்டம் நிறைவேற்றியிருக்கும்போது அதற்கு 'பெட்டர்மெண்ட் டாக்ஸ்' வாங்குவது அவசியம்தான். இந்த விஷயங்களைத் தகராறுகளில்லாமல் சர்க்கார் தீர்த்துக்கொள்ளலாம். காலதாமதமின்றி சீக்கிரம் தீர்க்க வேண்டும். இது விஷயமாகக் கஷ்டம் இருப்பதும் உண்மை. அதை மிகைப்படுத்திச் சொல்வதும் சகஜம். இதைத் தீர்க்கவேண்டுமானால், பெரிய உத்தியோகஸ்தர்களை மட்டுமல்ல, சம்பந்தப்பட்ட மந்திரிகளையும் விவசாயத்தில் அனுபவமுள்ள சிலரையும் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடலாம் ; சுலபமாக முடிவுசெய்யலாம். ரூபாய் 10 கோடி செலவு செய்து அங்கே பெரிய அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அதன் மூலம் லட்சக்கணக்கான எக்கர்களுக்குத் தண்ணீர் பாயச் செய்து அதன் மூலம் மக்கள் பயனடைந்து சுகமாக இருக்கும்படி செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு மேலே மேலே குறைசொல்லும்படியான நிலையை நீடிக்கவிடுவது சரியல்ல. ஆகவே நான் குறிப்பிட்ட மாதிரி ஒரு கமிட்டியை உடனடியாக அமைத்து அதன் மூலம் இந்த விஷயத்தை முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்காரும் அவ்வாறே செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தப்படியாக, எங்கள் ஜில்லாவில் ஒரு குறை இருந்து வருகிறது. மைசூரிலிருந்து கோயம்புத்தூருக்கு வருவதற்கு ரயில் பாதை கிடையாது. அதற்காக, சாமராஜ நகரிலிருந்து சத்தியமங்கலம் ரயில் பாதை போடப் போவதாக நான் சிறு பிள்ளையாக இருந்த காலத்திலிருந்தே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் போடப்படவில்லை. மற்ற இடங்களில் சிறிய ரயில் பாதைகள் போட்டிருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் இந்த ரயில் பாதை மிகவும் அவசியம். அந்தப் பிராந்தியத்தில்

உள்ளவர்கள் இந்த ரயில் பாதை போடப்படும் நாளை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடித்தப்படியாக ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவில் மாத்திரம் 12 ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கிடையாது. டாக்டர்களை உடனே உண்டாக்க முடியாது என்பது உண்மை தான். அவர்கள் நான்கு ஐந்து வருஷங்கள் படித்து விட்டுத்தான் வருகிறார்கள். அவர்களை விலை கொடுத்து வாங்க முடியாது என்று சொல்லப்படுகிறது. ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளில் வேலை பார்க்கும் டாக்டர்களுக்கும், கவர்ன்மெண்ட் டாக்டர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பளத்தில் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. கவர்ன்மெண்ட் டாக்டருக்கு ரூபாய் 200 சம்பளம் கொடுக்கப் படுகிறது. ஆனால் அதே படிப்புப் படித்த ஜில்லா போர்டு டாக்டர்களுக்கு ரூபாய் 85 தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏதாவது கொஞ்சம் வித்தியாசம் இருந்தால் பரவாயில்லை. ஆனால் ரூபாய் 250-க்கும் ரூபாய் 85-க்கும் இருக்கும் வித்தியாசத்தைப் பார்க்கும்போது ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளுக்கு எப்படி டாக்டர்கள் வருவார்கள். இதை உடனடியாக கவனித்து எல்லா ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளிலும் டாக்டர்கள் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக நாம் வன மஹோத்ஸவம் கொண்டாடி வருகிறோம். புதிதாக மரங்களை நடுகிறோம். ஆனால் அதே சமயத்தில் சாலைகளிலிருந்து மரங்களை வெட்டிக்கொண்டு போய்க்கொண்டே இருக்கிறார்கள். அதைத் தடுக்க யோசனை சொல்ல சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். நானும் கூட அந்தக் கமிட்டியில் அங்கத்தினராக இருந்தேன். அந்தக் கமிட்டியில் சில சிபாரிசுகள் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பினோம். ஆனால் அவை இன்னும் அமலுக்கு வரவில்லை என்று தெரிகிறது. மரங்களை அந்தந்தப் பக்கத்திலிருக்கிற பூமிக்காரர்களுக்குக் கொடுத்து விட வேண்டும்.

பலன் தரக்கூடிய மரங்களாய் இருந்தால் வருஷா வருஷம் ஒருவர் வாங்கிக் கொள்ளலாம். வாங்கிக் கொண்டு பக்கத்தில் இருக்கக்கூடிய, பூமிக்காரர்களுக்கு மரத்தைக் கொடுத்து விடலாம். அப்படிச் செய்தாலொழிய மரங்கள் பாதுகாக்கப்படமாட்டாது என்று கருதுகிறேன். இந்த சிபார்சைத்தான் முக்கியமாக கமிட்டி செய்தது. ஆனால் இது வரையிலும் அது வெளி வரவில்லை. அதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவும் இல்லை. இனியாவது சர்க்கார் அதற்கு வேண்டிய முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேச இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*Sri P. RANGASWAMI REDDIAR : கனம் உப தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்தில் சர்க்கார் செய்திருக்கும் நல்ல காரியங்களைப் பற்றியும், இனி செய்யப்போகிற விஷயங்களைப்பற்றியும் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைப்பற்றி நகரபுறங்களில் வசிக்கிற (Professional class) உத்தியோகத்துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் அதிகக் கவலைப்படுகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயப் பொருள்கள் உற்பத்தி செய்கிற விவசாயிகள் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 80-க்கு மேற்பட்டவர்கள். அநேகமாக எல்லா விவசாயிகளும் கிராமங்களில் குடியிருப்பவர்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் விவசாய பொருள்களின் விலை உயரும்போது எந்த ரீதியில் உயருகிறதோ, அதே ரீதியில் அவர்களுக்குத் தேவையான பொருள்களின் விலை உயருவதில்லை. ஒன்றுக்கு இரண்டு மடங்காக விவசாயப் பொருள்களின் விலை உயர்ந்தால், விவசாயிகளுக்கு தேவைப்படுகிற பொருள்களின் விலை ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து மடங்காக உயருகிறது. இதைப்பற்றி சர்க்காரோ அல்லது மற்றவர்களோ கவலைப்படுவதாக தெரியவில்லை. இது குறித்து கவர்னர் 11–33 a.m.

[Sri P. Rangaswami Reddiar] [10th August 1956

பிரசங்கத்தில் எந்தவிதமான குறிப்பும் இல்லை. உணவுப் பொருள்களின் விலை குறையும்போது திடீரென்று குறைகிறது. மற்ற பொருள்களின் விலை குறையும்போது அதே மாதிரி குறைவது இல்லை. இதற்கு உதாரணம் சொல்லவேண்டுமானால் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலையை விட துணியின் விலை இப்போது அதிகமாக இருக்கிறதே யொழிய குறையவில்லை. 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலையை விட உணவுப் பொருள்களின் விலை இன்று குறைவாக இருக்கிறது. இந்த மாதிரியான அவல நிலை ஏன் இந்த நாட்டில் இருக்கிறது என்றால் உள்ளபடியே விவசாயிகளின் உண்மையான பிரதிநிதிகள் இங்கு அதிகம் இல்லை ; அவர்களுக்காக பாடுபடுவதாக சொல்லுபவர்கள், உண்மையாக இதில் கவனம் செலுத்துவதில்லை. அவர்களுக்கு என்று சங்கமோ, கிளர்ச்சியோ நடத்தப்படாததுதான் காரணம் என்பதை மிகவும் வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப்பற்றி சில தப்பு அபிப்பிராயங்கள் நாட்டில் நிலவி வருகின்றன. தற்சமயம் நாட்டில் இருக்கிற மொத்த கைத்தறி 28 லட்சம், என்று தெரிகிறது. ஆனால் சர்க்கார் 12-லட்சம் கைத் தறிகள்தான் இருக்கிறது என்று தப்புக்கணக்குப் போட்டுக் கொண்டு விசைத்தறியை (Power loom) நாட்டில் அமைக்க வேண்டுமென்று முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது. தற்சமயம் இருக்கும் கைத் தறிகள் 40 ஆயிரம் லட்சம் கஜம் துணி உற்பத்தி செய்யக்கூடியவை. ஆனால் சூழ்நிலையின் காரணமாக உற்பத்திச் செய்யப்படும் துணி தற் சமயம் 15 ஆயிரம் லட்சம் கஜம்தான். இதற்குமேல், நாட்டிற்குத் தேவைப் படுகிறது 17 ஆயிரம் லட்சம் கஜம் தான். ஆக 32 ஆயிரம் லட்சம் கஜம் துணி கைத்தறிகளிலிருந்து உற்பத்திச் செய்யப்படுமேயானால் அது மக்களுடைய தேவையை பூர்த்தி செய்யும். மக்கள் தேவையை பூர்த்தி செய்ய இருக்கிற கைத்தறிகள் போதவில்லையென்று சொல்லி விசைத் தறியை அமலுக்குக் கொண்டுவருவார்களானால்—ஒவ்வொரு விசைத்தறி யும் நாள் ஒன்றுக்கு 120 கஜம் துணி உற்பத்தி செய்யக் கூடியவையென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கைத்தறி நாள் ஒன்றுக்கு 6 கஜம்தான் உற் பத்திச் செய்யக்கூடியது—20 கைத்தறிகள் உற்பத்தி செய்யக்கூடிய துணி யை ஒரு விசைத்தறி உற்பத்தி செய்து, கிட்டத்தட்ட ஒவ்வொரு விசைத் தறியும் 15 அல்லது 20 கைத்தறிகளை ஒழித்து விடும். ஆகையால் கைத்தறி நெசவாளர்களுக்கு உண்மையான பாதுகாப்பு அளிக்க வேண்டும், அவர்களுடைய தொழில் பாதிக்கப்படக் கூடாது, என்ற நல்லெண்ணம் சர்க்காருக்கு இருக்குமேயானால், கைத்தறித் துணி உற்பத்தி செய்வதை அதிகப்படுத்தி அதில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கவும், நூல் சரியானபடி அவர்களுக்கு வினியோகிக்கவும் வழி வகைகளைச் செய்ய சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு மாறாக விசைத்தறிகளை நுழைத்து அவர்களைக் கெடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

கைத்தறி கூட்டுறவு இயக்கங்கள் மூலமாக கைத்தறி நெசவாளர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், உதவி செய்யவும் சர்க்கார் முயற் சித்து வருவது எல்லோரும் அறிந்த விஷயம். கூட்டுறவு இயக்கங்களைப் பற்றி சென்ற சபைக் கூட்டத்தில் நான் விளக்கமாக பேசியிருக்கிறேன். என்றாலும் ஒரே ஒரு உதாரணம் துறையூரில் நடக்கிற திருவள்ளுவர் கைத்தறி கூட்டுறவு சங்கத்தைப்பற்றி சொல்லி, மேற்கொண்டு கூட்டுறவு இயக்கங்களைப் பற்றி சொல்லாமல் முடித்துக் கொள்ளுகிறேன்.

துறையிரில் திருவள்ளுவர் கைத்தறி கூட்டுறவு சங்கத்தில் சிலர் நிர் வாகஸ்தர்களாக இருந்தார்கள். தலைவர் உள்பட 4, 5 பேர் நீக்கப்பட்டு, புது தலைவர் தேர்தலாகி, சங்கம் நடந்து வந்தது. திடீரென்று நீக்கப்பட்ட தலைவரும் அவரைச் சேர்ந்தவர்களும், கூட்டுறவு சங்கத்தை பூட்டி வைத்து விட்டு, மேற்கொண்டு சங்கம் நடக்காதபடி செய்துவிட்டார்கள். பத்து நாட்களுக்கு முன்பு டிபுடி ரிஜிஸ்டார் அவர்கள் துறையூரில் முகாம் செய்திருந்தார். அவர் மாஜி தலைவர் டைரக்டர்கள் சார்பாக பேசிக் கொண்டு, சங்கம் நடக்க முயற்சி செய்யாமல் பூட்டி இருக்க விட்டு

10th August 1956] [Sri P. Rangaswami Reddiar]

விட்டார்கள். இதனால் துறையூர் மக்களிடையே கூட்டுறவு சங்கத்தின் மேல் ஒரு அவநம்பிக்கையும், உத்தியோகஸ்தர்கள் நடவடிக்கைகளில் அதிருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. இந்த சங்கம் நல்ல முறையில் நடக்க வேண்டுமானால் நிர்வாகஸ்தர்களும், சங்கத்தை மேற்பார்வையிடும் அதிகாரிகளும் ஒத்துழைத்தால்தான் முடியும். அப்போதுதான் கைத்தறி நெசவாளர்களுக்கு நன்மை கிடைக்கும்.

upset. My appeal, of course, to the Malayalee friends is that they should not mind parting with a few elephants as a gift if they are required in Tamilnad and when we have been known to make contributions of elephants to so many foreign countries, I do hope that as we do not mind handing over a few to Tamilnad even without their being asked for. At the same time, I know the feelings behind this. It is not a few elephants that matter but it is the feeling that a partition is to take place and they are likely to lose something which they might have got otherwise or the mutual suspicion that is now encouraged at all events even from a political motive. So I appeal to the Government of Madras that while they may feel that we are entirely wrong in entertaining such feelings—I am speaking for the people of these two districts—they must be generous, a little overgenerous on their part, because after all, even in the couple of months that are ahead of us, whatever they would like to do for these districts with the best of intentions, it would be impossible for them to do. But, at the same time, there must not be a feeling that we have parted in a spirit which is not congenial to our future relationship. From that point of view, I would very much welcome the creation of a Committee consisting of Malayalee Members so far as Malabar is concerned and South Kanara Members so far as South Kanara is concerned with whom the Government could sit down and discuss the problems relating to partition that are facing both the districts and try to see that as far as possible matters are explained to them. Even if a few things are to be taken away from those districts, let it be understood why and wherefor they are taken away. I do not think we would be petty-minded and say that everything must be retained in our district. Then it will make others say that nothing should go out from other districts to ours. In that case, I can quite appreciate if the Government of Madras say that the movement of a few electrical materials from Coimbatore to South Kanara may not be palatable to those living in Coimbatore. That is a sort of feeling that has to be avoided at both ends and I do very much wish that neither the Government of Madras nor we are responsible for creating a situation where everything would come to a standstill. I should think that even now it is not too late and I would rather appeal to the Government of Madras to consider whether it would not be worth while to take steps to create a certain amount of emotional goodwill and a kind of emotional integration of these different parts, before physical integration takes place in future, because I know there are several problems that are facing us in the whole of South India and they have got to be solved by common efforts. If Neiveli is developed, all of us are happy, because apart from the feeling of the people of Tamil Nad that it is going to enrich them in several ways, it is a project in which the whole of South India, nay, the whole of India, is interested. There will be several projects in which two or three States will have to join together before they are developed. Already Tamil Nad is complaining of shortage of electricity and there is very great potential for the development of electricity in the new State of Mysore. I do not

10th August 1956] [Sri T. Ananta Pai]

understand why it should not be possible for us to develop electricity in one part of the country where it is more convenient to develop it and give it to other parts. Whatever might have been our present stand, these things must break down and the barriers that are standing in the way of our unity must be broken down.

Sir, we know the spectacle of cyclones and famines that have haunted this State for the last five or six years. Every year, the budgetary considerations have been upset on account of these unfortunate events, so much so it looks as if Planning must provide also for cyclones and famines so that the natural developmental activities may not be held up. But, let me also assure the hon. members that we have also been the partners in the cyclones and famines, though we have not been mainly responsible for contributing to them. Whatever misfortune that faces the State has also partly been our misfortune. From that point of view, difficulties at least have been responsible for cementing the bonds that have united us all along. As one coming from the South Kanara district, I may assure the hon. Members that if we happen to continue as membes in the Karnataka State Assembly, we will be going there as your ambassadors because, having been a part of this State, it will be quite possible for us to appreciate what your difficulties would be. 2-40 p.m

The performance of this Government in the last five years has been something for which it has got to be reasonably proud. I know that this Government has established a record for itself in the educational field during the First Five-Year Plan period. Its trained personnel has been an envy of all other States. Its performance has been exemplary and more than that, its self-reliance to raise as much resources as possible financially, to develop the State is something which other States ought to copy. No doubt taxation has been heavy and our borrowings have been no less. I am glad that the Finance Minister has come out with a loan of Rs. 12½ crores. It is a bold step which he has taken. The very fact that the Finance Minister has come into the market with an added premium over the last year's issue, makes us believe that he is having the confidence of the people in an aboundant measurue. If the people want development, they must be prepared for sacrifice and it is no use thinking that we can rely on deficit financing for this except at our own cost. I do hope that this loan will be over-subscribed and will redound to the credit of this great State and people will settle down seriously to building up of the State under the Second Five-Year Plan. From that point of view, I must say that we should envy Tamilnad because in the States reorganization it has the least problem of integrating the services coming from other States. I do hope that the sympathy and co-operation of the people of Tamilnad and this Government would be readily available to other State Governments. I am very happy that the Government of Madras has been just or at least trying to be just, so far as service questions are concerned. I do hope that all Malayalee and South

[Sri T. Ananta Pai] [10th August 1956

Kanara officers who have to stay in the State will be considered part and parcel of this Government and will be dealt with justly.

Another problem that is now facing the country, particularly this State, is the price of rice. Some time ago we thought that the price of rice had been going down so much that something must be done by the Government to push it up and that otherwise agriculturists would suffer. Now I have been hearing a cry that the price of rice is too high and when " 'fair price " is referred to, I do not know whether that is the price paid to the agriculturist or the price that is to be paid by the consumer or is it something a littel less than the prevailing market rate. The whole problem is to stabilise the price of foodstuffs if we are to have a planned economy and our Second Five-Year Plan is to go through smoothly. There should not be wide fluctuations and the Government should try to see that the prices are stabilised by our open market policy, by taking over large stocks when the prices go down and by dumping stocks into the market when the prices show any inclination to rise. This can be done not merely through the fair price shops but by bulk sales also. There are chronic deficit areas like Malabar for instance and if scarcity is allowed to continue there, the price level in the neighbouring districts of South Kanara and other districts will go up because foodstuffs are exported from these districts. If, therefore, the Government take sufficient care to dump enough of rice in that district, the price level in other districts will automatically come down. The Government must also take the responsibility to a large extent for the rise in prices. Whenever Government stocks are auctioned, for I know they believe in making as much money as possible, the highest price recorded has to be considered by the market as ' fair '. It is not the scheduled banks that are responsible mainly for the rise in price. After the directive from the Reserve Bank, they have re-called their advances. But the price level has not shown any indication to come down. Just as we have fixed a uniform price in different parts of the country for cement and iron, I want rice is made available by the Government at various places at the same rate. Now, for instance when Government sell rice at Rs. 16 per maund at Kozhikode, the same rice is being sold in Mangalore for Rs. 16 plus freight and so many other charges which come to Rs. 17–2–0 per maund which is not far below the prevailing market rate. Why should not the Government see that rice is sold at Mangalore at the same rate? Then only, ' fair price ' will have some meaning. I do trust that Government will take these factors into consideration and make efforts to see that agricultuural prices are stabilised throughout the period so that avoidable suffering can be minimized.

Then, I come to another point that has been referred to in the Governor's Address. It has been proposed to extend the Madras Tenants' Protection Act . But I do not know what the Government intend to do so far as South Kanara is concerned. The South Kanara Tenants Protection Act is going to expire by March 1957. I do hope that this Act will also be extended and in this connexion I

10th August 1956] [Sri T. Ananta Pai]

would seriously appeal to the Government to consider the extension of the Madras Tenants' Protection Act to the South Kanara district for a period of one or two years so that when we go into the new State we may make our own adjustments. But, in the meanwhile since the Madras Tenants Protection Act confers greater rights than South Kanara Act and since the Madras Act is a later measure, I would request the Government to see that it is applied to South Kanara also so that the tenants in that district might be benefited to some extent.

Now, I have given the credit side of the picture. But still, there is the debt side. The second Plan has been perhaps left to the new State to draw up. Of course, our Collector has been making herculean efforts in drawing up the plan. I wish the Government to tell us definitely how much money would be available for the district. If they had prepared a plan at the State level, they might give permission to the District Planning Board to utilize the allocations in the best manner they could, so that the schemes which are acceptable to the people might be given priority out of the proceeds allocated to the district. I do hope that it will be made clear to the district authorities that it is the intention of the Government to do so.

Then, so far as communications are concerned, we are very sad that our major port development has not come into the picture at all. I expected the State Government would push it up and place before the Central Government completely the question of the major port, development between Cochin and Marmagoa as recommended by the West Coast Development Committee. But, is it because that we were likely to go away and that we may be expected to look after ourselves that this question was not placed before the Planning Commission? Would it have happened if it were Tuticorin? After all . . .

(At this stage, Mr. Speaker rang the bell and pointed out that the hon. Member's time was over.)

SRI T. ANANTA PAI : Well, thank you, Sir.

SRI V. BALAKRISHNAN : கனம் தலைவர் அவர்களே, ராஜ்யத் தலைவர் அவர்களுடைய உரையில் ருசிக்கக்கூடியது ஒன்றுமில்லை. சரியான சரக்குமில்லை, சத்துமில்லை. சில விஷயங்களில் ஜனங்களுக்கு சௌகரியம் செய்யக்கூடியதாக இருந்தபோதிலும்கூட, அதிகப்படியான விஷயங்களில் ஜனங்களுக்கு அதிருப்தியளிக்கக்கூடிய உரையாகத்தான் அது இருக்கிறது. 2-48 p.m.

என்.ஜி.ஓக்களின் குறை நீண்டகாலமாகவே இருந்துவருகிறது. அவர்கள் தங்களுக்கு கவர்னர் உரையில் ஏதாவது விமோசனம் ஏற்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவருக்கும் நாமம் போட்டு அவர்கள் ஏமாறும்படி அந்த உரை செய்துவிட்டது.

SRI G. GOVINDAN : On a point of order, Sir. கனம் அங்கத்தினர் அவர்கள் "நாமம் போட்டு" என்று சொன்னார்கள். நாமம் என்ற வார்த்தை சரியானதா ? அதற்கு எனக்கு அர்த்தம் தெரியவில்லை . . .

[10th August 1956

MR. SPEAKER : It is not a point of order.

SRI V. BALAKRISHNAN :என்,ஜி.ஓக்களுக்கு இரண்டு விஷயங்களில் குறைகள் இருக்கின்றன. ஒன்று அவர்கள் சம்பளத்தை பொறுத்தது. மற்றொன்று அவர்கள் **service conditon**-ஐ பொறுத்தது. சம்பளத்தை பொறுத்த மட்டில் சர்க்கார் சொல்லுவதை ஓரளவு ஒப்புக்கொள்ளலாம் என்றாலும், சர்க்காருக்கு அதிகப்படியான செலவு ஏற்படாத வகையில் அவர்களுக்கு ஏதாவது உதவி அளிக்கவேண்டும். அவர்களின் அடிப்படை சம்பளமும் சரி, பஞ்சப்படியும் சரி மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பளம், பஞ்சப்படியைவிட மிகவும் குறைவாக இருப்பதை சர்க்காரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது உலகறிந்த விஷயம். சம்பளத்தையும் பஞ்சப்படியையும் "மெர்ஜ்" செய்வதில் சர்க்காருக்கு உடனடியாக எந்தவித மான செலவும் ஏற்படாது. இவர்கள் பென்ஷன் வாங்கும்போதுதான் சர்க்காருக்கு பணப் பொறுப்பு ஏற்படும். இதைப்பற்றி நேற்று கேள்வி கேட்கப்பட்டபோழுது, கனம் மந்திரி அவர்கள் இது "**interim relief**" இல்லை என்று சொன்னார்கள். அது "**interim relief**-ஆக" இருந்தாலும் சரி, "**long term relief**ஆக" இருந்தாலும் சரி, சர்க்கார் என். ஜி. ஓக்களின் குறைகளை ஓரளவு ஒப்புக்கொண்டு நிவாரணம் அளித்ததற்கு அது ஒரு அத்தாட்சியாக இருக்கும். அதையும் சர்க்கார் நழுவவிட்டுவிட்டார்கள்.

என்.ஜி.ஓக்கள் சில வருடங்களாக வாழ்க்கைச் செலவு அதிகமாக இருப்பதால், பல இடங்களில் கடன் வாங்கி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கடனை தீர்த்தாகவேண்டும். அதனால் தான் இந்தக் கொந்தளிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால், அவர்களுக்கு சர்க்கார் ஒரு வருஷ சம்பளத்தை வட்டியில்லாமல் நீண்ட காலக் கடனாகக் கொடுத்து உதவினால், உடனடியாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் 1,000, 2,000 ரூபாய் மொத்தப் பணமாகக் கிடைக்கும். அதைக்கொண்டு அவர்கள் கடனை அடைத்து தங்கள் தொல்லையை ஒருவாறு போக்கிக்கொள்ளுவார்கள். இம்மாதிரி கடன் கொடுப்பதற்கு சர்க்காரிடம் பணம் இல்லாவிட்டாலும்கூட, இதற்கென்று மக்களிடம் ஒரு **open** கடன் வாங்கி அந்தப் பணத்தைக்கொண்டு என்.ஜி.ஓக்களுக்கு நீண்டகால தவணையில் கடன் கொடுக்கலாம். சர்க்கார் கடனுக்கு கலெக்டர், டெப்யூடி கலெக்டர் போன்ற உயர்தர உத்தியோகஸ்தர்கள் சிபார்சினாலும் செல்வாக்கினாலும் பணம் வந்து குவிந்துவிடவில்லை. தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற நடுத்தர என்.ஜி.ஓக்களின் செல்வாக்கினால்தான் சர்க்கார் கடனுக்கு பணம் கிடைக்கிறது. என்.ஜி. ஓக்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தினால், சர்க்கார் சிப்பந்திகளே இதற்கு சர்க்காருக்குத் தேவையானபணத்தை தயார் செய்து கொடுப்பார்கள். இந்த வேலையில் அவர்களும் முழு மனதுடன் ஈடுபடுவார்கள். சர்க்கார் உடனடியாக கையைவிட்டு பணம் செலவழித்து அவர்களின் ஊதியத்தை அதிகப்படுத்தவேண்டுமென்ற கொள்கையை நான் ஆதரித்துப் பேசவில்லை. ஆனால், ஊழியர்களின் சிரமத்தை உணர்ந்து சர்க்காருக்கு பணப்பொறுப்பு இல்லாமல் மேற் சொன்னபடி நிவாரணம் அளித்தால், ஓரளவு மனச்சாந்தியும் ஆறுதலும் அவர்களுக்கு ஏற்படும்.

அடுத்தபடியாக, **service condition**-ஐப்பற்றிப் பேசுகிறேன். **Man does not live by bread alone.** சர்க்காருக்குச் செலவில்லாமல் அவர்களுடைய ஊழியர்களின் **service condition**-ஐ ஏன் உயர்த்தி அவர்களுக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கக்கூடாது என்று கேட்கிறேன். '**Personal file**' என்ற மூட்டைப்பூச்சி எவ்வளவோ வருஷங்களாக இருந்து வருகிறது. முன்காலத்தில் ஆங்கிலேயர்கள் தங்களுடைய சிப்பந்திகளின் மனப்பான்மை எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி அவர்களுக்குத் தெரியாமல் குறிப்பு எழுதிவைத்துக்கொண்டு அவர்களுக்குப் உத்தியோக உயர்வு கொடுக்கும் சமயத்தில் அதை உபயோகித்துக்கொண்டு வந்தார்கள். வரவர இந்தக் கருத்து மாறி சிப்பந்திகள் எவ்வளவு திறமையாக வேலை செய்தாலும் சொந்த விருப்பு வெறுப்பு மனப்பான்மையுடன்தான் அதிகாரிகள் ரகசியக் குறிப்பு எழுதுகிறார்கள். அதை அறிந்து அவர்களுக்கு **supply and service** சரியாக செய்து திருப்தி செய்யாவிட்டால்,

10th August 1956] [Sri V. Balakrishnan]

என்.ஜி.ஓ.க்கள் எவ்வளவு திறமையாக வேலை செய்தாலும்கூட, அதிகாரிகள் **Doomsday book**-ல் கோளாராக எழுதிவைத்துவிடுகிறார்கள். அப்படி "**adverse remarks**" எழுதப்பட்டிருந்தால் அதை நிவர்த்தி செய்து கொள்ளுவதற்கு விதியில் இடமிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. '**The adverse remarks have got to be communicated to the N.G.Os. and their replies have got to be filed.**' ஆனால் நாளது தேதி வரையில் இம்மாதிரி கிரியாம்சத்தில் நடப்பதுகிடையாது. முன்பு இதைப்பற்றி கேள்வி கேட்கப்பட்டபொழுது கனம் நிதி அமைச்சர் அவர்கள் **adverse remarks** என்.ஜி.ஓக்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய பதில்கள் **file**–ல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அம்மாதிரி கிடையவே கிடையாது. இது விஷயத்தில் அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பப்படுமென்றும், **adverse remarks** சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அனுப்பிவைக்கப்படுமென்றும் கனம் மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்திருந்தபோதிலும், அவர்களுக்கு அனுகூலமாகவிருக்கும் இந்த முறையை ஜில்லா அதிகாரிகளும் மற்ற அதிகாரிகளும் கைக்கொள்ளுவதில்லை. இதனால் அவர்களுக்கு கொந்தளிப்பு ஏற்பட்டு மனம் நொந்துகொண்டிருக்கிறார்கள். உத்தியோக உயர்வு கொடுக்கப்படுகின்ற காலத்தில் ஒருவிதமான ஜாபிதா தயாரிக்கப்படுகிறது.

2-56 p.m.

அந்த ஜாபிதாவில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படுகிறது. நாணயமாகவும், உண்மையாகவும், திறமையாகவும், தேசபக்தியோடும் சேவை செய்த என்.ஜி.ஓவுக்கு அந்த ஜாபிதாவில் உயர்வு கிடைப்பதில்லை. அதற்கு காரணம் என்ன என்று மேலதிகாரிகளைக் கேட்டால், "இவருடைய பெர்ஸனல் பைலில் இவரைப்பற்றி நன்றாக எழுதப்படவில்லை. இவர் சரியாக வேலை செய்வதில்லை என்று ஜில்லா அதிகாரிகளும் தாலூகா அதிகாரிகளும் சொல்கிறார்கள். ஆகவே நாங்கள் இவருக்கு உத்தியோக உயர்வு கொடுக்க முடியவில்லை. நாங்கள் என்ன செய்வது ?" என்று பதில் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மேலதிகாரிகள் அந்த என்.ஜி.ஓ.வினுடைய பெர்ஸனல் பைலை வரவழைத்துப் பார்ப்பதேயில்லை. அவர் உண்மையில் தவறு செய்திருக்கிறாரா, அவர் **adverse remarks** வாங்கியிருக்கிறாரா என்றுகூட பெரிய அதிகாரிகள் பார்ப்பதில்லை. கீழேயிருந்து அனுப்பப்படும் ஜாபிதாவில் கையெழுத்திட்டுவிடுகிறார்கள்.

மேலும் ஜில்லாக்களிலுள்ள பல குமாஸ்தாக்களுக்கு போதுமான பேப்பர்கூட கொடுப்பதில்லை. அனேக இடங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆபீஸ் வேலைக்காக கையிலிருந்து பணத்தைப்போட்டு விலை கொடுத்துக் காகிதம் வாங்குகிறார்கள். சென்னை சர்க்கார் காரியாலயத்தில் வேலை செய்யும் பெரிய பெரிய அதிகாரிகள் அனாவசியமாகப் படங்கள் வரைவதற்கு காகிதங்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஜில்லாக்களிலும், தாலூகாக்களிலும் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு ஜனங்களுடைய வேலையைச் செய்வதற்கும் சர்க்கார் வேலையை செய்வதற்கும் போதுமான அளவு காகிதங்கள் கொடுக்கப்படுவதில்லை. அதைப் பற்றி நான் சபையில் கேள்வி கேட்டபோது கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் காகிதங்கள் போதுமான அளவு கொடுக்கப்படுகிறதென்று பதில் சொன்னார்கள். அவர் சொன்ன பதில் முற்றிலும் உண்மைக்கு விரோதமான தகவல் என்று நான் கூறத்தயாராயிருக்கிறேன். கீழேயுள்ளவர்கள் எழுதி வைத்த பதிலை கனம் மந்திரி அவர்கள் இங்கே வந்து வாசித்துவிட்டார்கள். ஆகவே, போதுமான அளவு காகிதங்கள் கொடுக்கப்படாத இடங்களைப் பார்த்து அங்குள்ள உத்தியோகஸ்தர்களுக்குப் போதுமான அளவு காகிதங்களைக் கொடுக்கவேண்டும்.

மேலும், என்.ஜி.ஓக்களைப் புளி மூட்டைகளைப்போல் இங்கிருந்து அங்கேயும் அங்கிருந்து இங்கேயுமாக மாற்றுகிறார்கள். இதனால் அவர்களுக்கு அதிகமான செலவும் பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன. சொந்த வீடு உடைய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏன் அந்த அந்தத் தாலூகாக்களிலேயோ, அந்த அந்த ஜில்லாக்களிலேயோ இருக்கக்கூடாது ? நாணயமாகவும், உண்மையாகவும், திறமையாகவும் வேலை பார்த்து வரும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை வேறு ஊருக்கு மாற்றுவது தவறு.

[Sri V. Balakrishnan] [10th August 1956

தனக்கு பிடிக்காத ஒரு குமாஸ்தாவை ஒரு தாசில்தார் வேறு ஊருக்கு மாற்ற முயற்சிக்கிறார்; தனக்குப் பிடிக்காத ஒரு தாசில்தாரை ஒரு ஸப்-கலெக்டர் வேறு ஊருக்கு மாற்றுகிறார்; தனக்கு பிடிக்காத ஒரு ஸப்-கலெக்டரை ஒரு கலெக்டர் மாற்றி விடுகிறார். தனக்குப் பிடிக்காத ஒரு சிரஸ்தாதாரை ஒரு கலெக்டர் வேறு ஊருக்கு மாற்றிவிடுகிறார். ஒரு சிரெஸ்தாதார் அவர் வேலை பார்க்கும் ஊரில் சொந்த வீட்டில் இருந்துவருவார். அந்த சிரெஸ்தாதாரை அந்த ஜில்லா கலெக்டருக்கு பிடிக்காவிட்டால் உடனே அவரை வேரு ஊருக்கு மாற்றிவிடுகிறார். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அதுவரை வீட்டுவாடகை கொடுக்கும் செலவு இல்லாமல் சொந்த வீட்டிலேயே இருந்துவந்த உத்தியோகஸ்தர் வேறு ஊருக்குச் சென்றதும் வீட்டுவாடகை கொடுக்கவேண்டியிருக்கிறது; அவருக்குச் செலவு அதிகமாகிறது; அவர் கஷ்டப்படுகிறார். ஆகவே அனுவசியமாக என்.ஜி.ஓக்களை வேறு ஊர்களுக்கு மாற்றக்கூடாது என்று உத்தரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கனம் நிதி மந்திரி அவர்கள் "இந்தியா ஒரே நாடு. இதில் தென்னாடு வட நாடு என்று பேசக்கூடாது" என்கிறார்கள். நானும் அவர் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் தென்னாடு வட நாடு என்று பேசக்கூடாது என்று சொல்வது தவறு என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் ராணுவத்தில் சேர்ந்த தென்னாட்டு மக்களுக்கு ராணுவத்தில் என்ன பங்கு அதிகமாக கொடுத்திருக்கிறார்கள் என்று கனம் நிதி மந்திரி அவர்களை நான் கேட்கிறேன். இப்போது ராணுவம் பூராவும் வட நாட்டார் கையில் இருக்கிறது. இங்கிருந்து போகிறவர்கள் மூட்டை தூக்குவதற்கும், பூட்ஸ் தூக்குவதற்கும் அமர்த்தப்படுகிறார்களே தவிர பெரிய வேலைகளுக்கு அமர்த்தப்படுவதில்லை. நான் சென்ற ஆண்டு ஸ்ரீநகர், ஜலந்தர், ஜம்மு முதலிய இடங்களுக்கு சென்றிருந்தேன். அங்கெல்லாம் நான் யார் என்று தெரிவித்துக்கொள்ளாமல் ஒரு சாதாரண மனிதனைப்போல் சென்று தென்னாட்டிலிருந்து சென்று ராணுவத்தில் வேலை பார்ப்பவர்களைப்பார்த்து விசாரித்தேன். அவர்கள் எல்லோரும் "நாங்கள் ராணுவத்தில் சேர்ந்தபோது ஒரு அபிமானத்தின்பேரில் சேரவில்லை. தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஆசையினாலும் இல்லை. ஏதோ சாப்பாடு போட்டு ரூ. 100, ரூ. 200 சம்பளம் கொடுக்கிறார்களே என்பதனால் வந்தோம். வயிற்றுப் பிழைப்பிற்காகத்தான் ராணுவத்தில் சேர்ந்தோம், ஆசையினாலோ, அன்பினாலோ, அபிமானத்தினாலோ சேரவில்லை." என்று சொன்னார்கள். இப்படி ராணுவத்தில் அன்பும், அபிமானமும், ஆசையும் இல்லாத சிப்பந்திகளை வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் இந்த ராணுவம் நிலைத்திருக்கும்? இதற்குக் காரணம் என்னவென்றால், அங்கேயுள்ள தளபதிகள், சேனாதிபதிகள் போன்ற பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களெல்லாம் வட நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். தென்னாட்டிலிருந்து சென்றவர்கள் எவ்வளவு திறமையுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படுவதில்லை. ராணுவத்தில் வட நாட்டினர், தென்னாட்டினர் என்ற வேற்றுமை பாராட்டப்படுகிறது. இதனால் தென்னாட்டிலிருந்து சென்று ராணுவத்தில் வேலை பார்க்கிறவர்களுக்கு தங்கள் வேலையில் அன்போ, அபிமானமோ இல்லை.

இந்தியாவில் முதல் முதலாக ராணுவம் ஏற்படுத்தப்பட்டபோது சென்னையில்தான் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது சென்னை என்ன நிலைமையில் இருக்கிறது? வடக்கேயிருந்து நமது ஜனாதிபதி சென்னைக்கு வருகிறார் என்றால், ராணுவப் படையை அலங்கரித்து அவருக்கு மரியாதை செய்வதற்கு இரண்டு லட்சம் வடநாட்டினர் அங்கேயிருந்து இங்கே வர வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டு நான் வெட்கப்படுகிறேன், வருத்தப்படுகிறேன். நமது நிதி மந்திரி அவர்கள் மத்திய சர்க்காருக்கு எழுதி தென்னாட்டினருக்கு ராணுவத்தில் நியாயமான பங்கைக் கொடுக்கவேண்டும் என்று ஏன் கேட்கக்கூடாது? பஞ்சாப் ராஜ்யத்தில், ஒரு குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்தால் அவர்களில் மூன்று பேர்கள் ராணுவத்தில் வேலை செய்கிறார்கள். அந்த மூன்று பேர்களும் ரூ. 500, ரூ. 600 சம்பளம் வாங்குகிறார்கள். நமது ராஜ்யத்தில்

எப்படி இருக்கிறது ? நமது ராஜ்ஜியத்தில் லட்சக்கணக்கான பேர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிருர்கள். நமது ராஜ்யத்தினருக்கும் ராணுவத்தில் நியாயமான பங்கு கொடுக்கப்பட்டால், நிச்சயமாக வேலையில்லாத் திண்டாட்டம் தீருவதற்கும் அது ஒரு வழியாக இருக்கும். நமது நாடு ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்ருல் நமது ராஜ்ஜியத்தினருக்கும் ராணுவத்தில் உரிய பங்கு கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** Sri P. S. KRISHNASWAMY AYYANGAR :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையைப் பாராட்டும் முறையில் நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன. பல துறைகளிலும் நம்முடைய சர்க்கார் நிறைவேற்றியிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றியும், வேறு முற்போக்கான துறைகளில் நிறைவேற்றியிருக்கும் திட்டங்களைப்பற்றியும் கவர்னர் அவர்களுடைய உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் பாராட்டுதலுக்கு உரியவையே. ஒரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் சொல்லிவிட்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

கவர்னர் அவர்களுடைய உரையில், ஆதாரக் கல்வி விஷயமாக சில மாறுதல்கள் செய்வதற்கு சர்க்கார் உத்தேசித்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது முக்கியமாக ஆதாரக் கல்வியை தேசமெங்கும் பரப்புவதற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளது என்று சொல்லிக்கொண்டு வருகிருர்கள். ஆனல், ஆதாரக் கல்வியின் ஸ்வரூபம் என்ன, இப்போது அனுஷ்டித்துவரும் கல்வி முறைக்கும் ஆதாரக் கல்வி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதே கிராமங்களிலுள்ளவர்களுக்குத் தெரியாது. ஆதாரக் கல்வியைப்பற்றி தேசமெங்கும், குறிப்பாக நம்முடைய ராஜ்யத்தில், விரிவான பிரசாரம் நடக்கவேண்டியது அவசியம். அப்படிப்பட்ட பிரசாரம் அதிகச் செலவில்லாமல் நடக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இப்போது விநோபாஜி அவர்கள் பாத யாத்திரையாக நமது ராஜ்ஜியத்தில் சஞ்சாரம் செய்துகொண்டுவருகிருர். அவர்கள் பூதானத்திற்காகப் பிரசாரம் செய்துகொண்டு வரும்போது, ஆதாரக் கல்வியை ஆதரித்தும் பல சொற்பொழிவுகள் ஆற்றி வருகிருர்கள், உபதேச சொற்களும் சொல்லி வருகிருர்கள். இந்த சந்தர்ப்பத்தை நமது சர்க்கார் பயன்படுத்திக்கொண்டு, ஆதாரக் கல்வியின் ஸ்வரூபம் என்ன, இப்போதுள்ள கல்வி முறைக்கும் ஆதாரக் கல்வி முறைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை ஜனங்கள் சுலபமாக புரிந்துக்கொள்ளும்படி செய்யலாம் அதாவது, விநோபாஜீ அவர்களிடம் "நீங்கள் எங்கெங்கு ஆதாரக் கல்வியைப்பற்றி விரிவாகப் பிரசாரம் செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டுக்கொண்டு, அவர்கள் அந்த இடங்களில் பிரசாரம் செய்வதற்கு முன்பு நமது ஆதாரக் கல்வியில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் அந்த இடங்களில் ஆதாரக் கல்வி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு ஆதாரக் பல்வியில் பயிற்சிபெற்ற தகுந்த ஆசிரியர்களை ஒரு கோஷ்டியாகப் பொறுக்கியெடுத்து அனுப்பவேண்டும். ஆதாரக் கல்வியில் பயிற்சிபெற்ற இந்தஆசிரியர்கள், விநோபாஜீ அவர்கள் பாத யாத்திரையாக வரப்போகும் மார்க்கத்திலுள்ள கிராமங்களுக்கு விநோபாஜீ அவர்கள் வருவதற்கு முன்பாகவே சென்று, அங்கே தங்கி, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஆசிரியர் 15 அல்லது 20 நாட்களுக்காவது ஆதாரக் கல்வி வகுப்புகள் நடத்தவேண்டும். அங்கு இந்த ஆசிரியர்கள் ஆதாரக் கல்வியை போதித்து, ஆதாரக் கல்வியின் விசேஷம் என்ன, அதன் ஸ்வரூபம் என்ன என்பதை சுற்றுவட்டார கிராமவாசிகளுக்குத் தெரியும்படிச் செய்யவேண்டும்.

3-06 p.m.

ஏழு பேர்கள், ஏழு கிராமங்களில் இந்த மாதிரியாக ஆதாரக் கல்வி கற்றுக்கொடுக்கும்படியாக செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஆசிரியர் 15 நாள் அல்லது 20 நாள் கற்றுக்கொடுத்த பிற்பாடு அவர்கள் சஞ்சாரமாக வேறு கிராமத்திற்கு போவது என்ற முறையை அனுஷ்டித்து வரவேண்டும். இந்த முறையில் நடத்திய பிற்பாடு, விநோபாஜீ வந்து ஆதாரக் கல்வியின் பெருமையை பற்றிச் சொல்லும்போது ஜனங்களின் மனதில் பதியும். ஜனங்களுக்கும் ஆதாரக் கல்வி

மேல் பிடித்தம் ஏற்படும். இதுதான் அதிகச் செலவில்லாமல் ஆதாரக் கல்வி பற்றி நாம் பிரசாரம் செய்வதற்கு சுலபமான வழி. இதை உடனடியாக அனுஷ்டிக்க வேண்டும். காலதாமதம் செய்வதற்கில்லை. வினோபாஜீ அவர்கள் மூன்று, நான்கு மாதங்கள்தான் நமது ராஜ்யத்தில் பாத யாத்திரை செய்வார்கள். அந்த காலத்திற்குள் இந்த ஏற்பாட்டை துரிதமாகச் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் சர்க்கார் சுறுசுறுப்பாக கவனம் செலுத்தி, நான் கூறிய முறையை அனுஷ்டிக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசையும், கோரிக்கையுமாகும்.

இந்த மாதிரியாக ஆசிரியர்கள் நியமித்து ஆங்காங்கு ஆதாரக்கல்வி வகுப்புகளை சில நாட்கள் நடத்தி, அதன் பிறகு வினோபாஜீ அவர்களும் அந்தந்த கிராமங்களுக்கு வந்து ஆதாரக் கல்வியைப்பற்றி விரிவாக உரை நிகழ்த்தும் போது, எங்கெங்கு ஆதாரக் கல்விக்கு அனுகூலமான சூழ்நிலை ஏற்படுகிறதோ, அங்கங்கே ஆதாரப்பள்ளிகள் நிறுவ சர்க்கார் பின்னால் ஏற்பாடு செய்யலாம். எங்கெங்கு அனுகூலமான சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவாவது இந்த மஹாத்மாவின் யாத்திரையை உபயோகப்படுத்திக்கொள்ளுவது நல்லதாகும். வினோபாஜீ அவர்கள் யாத்திரையில் ஜனங்களிடம் கேட்டு பூதானம் பெறும் சமயம், ஆதாரக் கல்வி பள்ளிகளுக்காக, அதாவது விவசாயத்தை சாதனமாக வைத்து ஆதாரக் கல்வி போதிக்க, விவசாய நிலங்களை ஆதாரக்கல்விக்கு என்று குறிப்பிட்டு, சில நபர்களிடமிருந்து பூமி தானம் பெறவேண்டுமென்பதாக அவரிடம் கேட்டுக்கொண்டு, வினோபாஜீயும் அதற்கு இணங்கும் பட்சத்தில், ஆதாரக்கல்விக்கு என்று குறிப்பிட்டு, பூமிதானம் ஆங்காங்கே ஆதாரப் பள்ளிக்கு சகாயமாக பெறலாம். அப்படி பூமிதானம் வாங்கும்போது, எவரெவர் மனமுவந்து ஐந்து எக்கராவாவது அல்லது அதற்கு அதிகமாகவாவது கொடுக்கிறார்களோ, அவர்கள் பெயரால் ஆங்காங்கே நிறுவப்படும் ஆதாரப் பள்ளிகள் நடத்தப்படும் என்று சொன்னால், ஜனங்களுக்கு உற்சாகம் ஏற்படும். இதன் பலனாக, ஆதாரப்பள்ளிகளுக்கென்று குறிப்பிட்டு பூமி தானம் செய்ய முன்வருவார்கள். உடனடியாக பலன் தெரியக்கூடிய வகையில், ஆதாரக் கல்விக்காக பூமிதானம் செய்யுங்கள் என்று ஜனங்களிடம் வினோபாஜீ கேட்டுக்கொண்டால், பல விடங்களில் பூமி தானம் கிடைக்கும். இவற்றை வைத்துக்கொண்டு நாம் சுலபமாக ஆதாரப் பள்ளிகளை திறந்து விடலாம். இதை மனதில் கொண்டு, சர்க்கார் சுறுசுறுப்பாக காரியத்தில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

3-10 p.m. * Sri S. DAIVASIGAMONEY: Mr. Speaker, Sir, I am constrained to mention that the Governor's Address under discussion is rather different from the Governor's Addresses in the previous years. I find that it is insipid, it is something like a swan song. It is not very enlivening and it does not inspire us with hope for the future. Anyhow I would like to make a few observations with a view to make the Ministers listen to the grievances of the public and redress them.

In the first place I wish to congratulate the Government on their decision to introduce Tamil as the State language. The people of Madras State would have been more pleased if the Governor had said that it was the intention of the Government to name the State of Madras as Tamilnad in the near future. I hope our Government will bear this in mind and, when the proper time comes, change the name of our State into Tamilnad.

With the limited time at my disposal, I would like to mention a few things which, I think, are important. Firstly I would like to speak about the housing schemes on which our Government have launched. It is mentioned in the Governor's Address that

10th August 1956] [Sri S. Daivasigamoney]

about 5,000 houses have been ordered to be constructed for housing the poor people who have been affected by floods. No doubt it is a very good thing. But when we consider it from the point of view of the benefit conferred on the public of the State in general, we will find that it is something like a drop in the ocean. This scheme is not going to benefit the general public as a whole. The aim and policy of the Government should be not merely to provide housing accommodation and better living standard to people in certain localities but to raise the living standard of the people in general gradually. In other words, their policies must be such that the public in general will get benefit out of them. In every taluk there are more than 200 to 300 villages and the condition in the villages is awful. We find that the people there are ill-clad, are living in insanitary conditions, are not having enough to eat and have not got proper roads. What is it that we are trying to do for improving the condition of the villagers? Taking one village here and providing it with some facility and taking up another village there and bringing it under one or the other of the Development schemes will not do. As I said, the policy must be to raise the living standard of all the villagers at the same time. We find that the condition of the poor persons in the villages is the same as it was several years ago, as it was during the regime of the Britishers. After Independence, we have not done anything to raise their living standard. They have not got even the opportunity for earning sufficient money for maintaining their families. It may be said that, under the Local Development Works and National Extension Schemes, we have provided certain villages with wells and other amenities. What I would submit is that it is not sufficient at all. In urban areas no doubt some industries have been started and scope for some more employment has been afforded. But has it solved the problem of unemployment and the beggar problem? What conspicuously strikes the eye of a foreigner who visits the City of Madras is the number of urchins that go to him begging for a few pies. He sees also a number of persons squatting on the pavements and roads in the City. What is it that our Government have done to remedy these defects in the very heart of the City? Nearly five years have elapsed since we took our seats in this House. The Government may say that there are homes for housing the beggars in Avadi, Krishnampet and other places, and that there are poor homes. But has it eradicated the beggar problem and the unseemly sight of homeless persons squatting on the pavements and roads? Proper steps have not been taken in, and proper attention has not been devoted to this matter. I submit that this matter must be viewed in a different manner and proper steps must be taken for remedying the defects.

With regard to betterment of the condition of Harijans and Backward Classes, only step-motherly treatment has been meted out by this Government. No doubt some provision has been made for giving more amenities to them. But when we look at the condition of the Harijans and Backward Classes most of whom

[Sri S. Daivasigamoney] [10th August 1956

dwell in rural areas, we find that they have not been appreciably benefited at all during the last five years and more. They are living in the same condition as before. I would submit that more effective steps should be taken for raising their standard of living almost to the level of the standard of living obtaining in urban areas.

People in rural areas have very many grievances. They believe they could get their grievances redressed by inviting the Ministers and narrating to them their grievances. You may be aware that almost every week or every month, some Minister or other visits even the remotest village. The Ministers are garlanded and addresses are presented to them. Invariably in all the addresses, their grievances are mentioned. The Ministers promise to look into those grievances and redress them. But soon after they return to Fort St. George, they get appeals from other persons for redressing their grievances, fresh files grow up, so much so that the grievances that they heard from the villagers are forgotten and they are not at all redressed. The grievances of the villagers must be looked into and proper steps should be taken to redress them immediately.

(Sri V. K. Ramaswamy Mudaliar in the Chair.)

3-12 p.m. *SRI N. MAHALINGAM: கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற இரண்டு ஆண்டுகளாக, நமது மாகாணத்தில், கிராமப் புறங்களையும், பஞ்சாயத்து பிரதேசங்களையும் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்காக சர்க்கார் கொண்டுவந்த ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேலைகள் வெற்றிகரமாக நடந்திருக்கின்றன. குறிப்பாக, கோவை ஜில்லாவில் சென்ற இரண்டு ஆண்டுகளாக நிறைவேறியுள்ள வேலைகள் எவ்வளவென்று சொல்லி முடியாது. கிராமங்களில் உள்ள மக்கள், சுதந்திரம் வந்ததன் அடையாளம் என்னவென்பதை இப்போதுதான் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய தாலூக்காவில் மட்டும் சென்ற வருடம் சுமார் எழு லட்சம் ரூபாய் வரையிலும் சர்க்காரிடமிருந்து மான்யம் பெற்றிருக்கிறோம். அதற்கு சமமான அளவு, கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் தாங்களும் செலவு செய்து, பல ரஸ்தாக்கள், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள் போன்றவற்றை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். கோவை ஜில்லாவிற்கு மட்டும் சென்ற வருடம் 45 லட்ச ரூபாய் சர்க்காருடைய மான்யமாக கிடைத்திருக்கிறது. இதுவரையில் பொதுஜனங்கள் எந்தெந்த இடங்களில் இந்த வேலைகளை செய்வதற்கு இறங்கி முன் வந்திருக்கிறார்களோ அந்த இடங்களில்தான் அபிவிருத்தி திட்டங்களின் கீழ் வேலைகள் நடந்திருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில், 8 லட்ச ரூபாய் மான்யம் கொடுக்கப்பட்டிருந்ததில், மூன்று லட்ச ரூபாய் திருப்பிக் கொடுக்கப்பட்டது என்று பிப்ரவரி மாதத்தில் நான் பத்திரிகையில் பார்த்தேன். இதே போன்று, பல ஜில்லாக்களில் மான்யமாகக் கொடுக்கப்பட்ட பணம் செலவு செய்யப்படாமல் திருப்பிக் கொடுக்கப்பட்டதன் பயனாக கோவை ஜில்லாவிற்கு அதிகமாக மான்யம் கிடைத்து, செலவு செய்ய முடிந்தது. ஊட்டியில் கமிட்டி மீட்டிங் நடந்தபோது கோவை ஜில்லாவிற்கு அதிகமாக மான்யம் கொடுக்கப்பட்டது என்று சிலர் குறை கூறினார்கள். ஆனால் உண்மையில் என்ன நடந்தது என்றால், மற்ற ஜில்லாக்களில் உள்ள அங்கத்தினர்கள், தங்கள் ஜில்லாக்களுக்கு ஒதுக்கப்பட்ட மான்யத் தொகையை பயன்படுத்திக் கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளாமல், திருப்பிக் கொடுத்தமையால், எங்கள் ஜில்லாவிற்கு அதிகத் தொகை கிடைத்து நாங்கள் பயன் படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

10th August 1956] [Sri N. Mahalingam]

இந்த வருடம் நமது மாகாணத்திற்கு ஸ்தல அபிவிருத்தி திட்ட வேலைகளுக்கு சுமார் 150 லட்ச ரூபாய் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சென்ற வருடம் ஆரம்பித்த வேலைகளை முடிக்கவே சுமார் 120 லட்ச ரூபாய் செலவாகிவிடும். ஆகவே புதிதாக வேலைகள் ஆரம்பிக்க 30 லட்ச ரூபாய் தான் பாக்கி நிற்கும். இந்த வருடம் புதிதாக நிறைய வேலைகளை செய்ய வேண்டுமென்று மக்கள் உற்சாகத்துடனிருக்கிறார்கள். எங்கள் தாலூக்காவில் மட்டும், இதுவரை 300 விண்ணப்பங்கள் தாலூக்கா ஆபீஸில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கோவை ஜில்லாவில் உள்ள பல்வேறு தாலூக்காக்களில் இது போன்று ஏராளமான விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, சர்க்கார் இந்த திட்ட வேலைகளுக்கு மேலும் அதிக பணம் ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியம். சென்ற இரண்டு ஆண்டுகளாக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய உற்சாகம், இந்த வருடம் சர்க்கார் மேலும் புதிதாக பணம் ஒதுக்காத காரணத்தால் சிர்குலைந்து விடும்படியாக சர்க்கார் விட்டுவிடக்கூடாது. ஆகவே, அவசியம் அதிகமான பணம் ஒதுக்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன்.

ஸ்தல அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக, மத்திய சர்க்கார் **Assessment Committee** என்ற ஒன்றை அனுப்பித்தார்கள். இந்தக் கமிட்டி, தன்னுடைய வேலையை சரியானபடி செய்யவில்லை என்பதை இந்த சந்தர்பத்தில் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் மத்திய சர்க்காருக்கு சமர்ப்பித்த ரிப்போர்ட்டில், இந்த மாகாணத்தில் ஸ்தல அபிவிருத்தி திட்டவேலைகள் அதிகமாக சர்க்கார் கொடுத்த பணத்தைக் கொண்டே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பொது மக்கள் அதிக பணம் போடவில்லை, ஒத்துழைப்பு செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சரியானபடி சென்னை மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து நடந்துள்ள வேலைகளை கவனிக்கவில்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். இல்லை யென்று நான் சொல்லவில்லை. ஆனால் மக்கள் பிரதிநிதிகள் யாருக்கும் அவர்கள் வருகிறார்கள்என்ற தகவலேயில்லை. இந்தமாதிரியாக ஒரு அறிக்கையை அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பது பின்னால் தான் தெரிய வந்தது. ஆகவே, அவர்கள் எங்கு வந்தார்கள், எந்தெந்த இடங்களை பார்த்தார்கள், என்ன ஆதாரங்களைக் கொண்டு மக்களுடைய ஒத்தாசை திட்டத்திற்கு இல்லை என்று சொன்னார்கள் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. எனவேதான், இந்தக் கமிட்டி தன்னுடைய வேலையை சரியானபடி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். இந்தக் கமிட்டி செய்துள்ள ரிப்போர்ட்டின் காரணமாக நமக்கு மத்திய சர்க்காரிடம் இருந்து வரவேண்டிய பணம், வராமல் போக விட்டுவிடக்கூடாது. விஷயங்களை எடுத்துக்காட்டி, மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய பணத்தை வாங்க வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கோவை ஜில்லாவில் இவ்வளவு சிறப்பாக ஸ்தல அபிவிருத்தி வேலைகளை நடத்துவதற்கு கோவை ஜில்லாவில் இருக்கக்கூடிய கலெக்டர் மற்றும் ரெவின்யூ அதிகாரிகள், **Highways Department Engineer** ஆகியவர்கள் உற்சாகம் எடுத்துக்கொண்டு வேலை செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கு சொல்லி அவர்கள் செய்த சேவையை பாராட்ட விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையில் புதிய நீர்ப்பாசன திட்டங்கள் அமைப்பு 3-26 p.m.
விஷயம் குறித்து ஒருவித தகவலும் இல்லை. ஏதோ ஒன்றிரண்டு சிறிய வேலைகளைக் குறித்து சொல்லி யிருக்கிறார்களே தவிர, பெரும் வேலைகளைப் பற்றி ஒன்றையும் காணோம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் குறித்து வெள்ளை யறிக்கை சமர்பிக்கப்பட்டபோது பரம்பிகுளம் திட்டத்திற்கு, அதாவது மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, வீணாக அரபிக்கடலில் வடியக்கூடிய தண்ணீரை, இந்தப் பக்கம் திருப்பும் திட்டத்திற்கு, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி யிருந்தார்கள். சென்ற ஒரு வருஷகாலமாக பொள்ளாச்சி தாலூக்காவில், **Special Engineer** போட்டு, இந்த பரம்பிகுளம் அணைத்திட்டம் வழியாக இருக்கின்ற பொள்ளாச்சியில், திருவாங்கூர் கொச்சி அண்டை ராஜ்ய என்ஜினீயர் இரண்டு பேரும் சேர்ந்து பேசி

[Sri N. Mahalingam] [10th August 1956

சர்க்காருக்கு அவர்கள் ஒரு ரிப்போர்ட்டை அனுப்பி யிருக்கிறார்கள். இப்போது கோயமுத்தூர் ஜில்லாவில் உற்பத்தியாகி வரக்கூடிய கல்லாறு, சோலையாறு, பரம்பிகுளம், திருவாங்கூர் கொச்சி வழியாக அரபி கடலுக்குப் போகக்கூடிய, தண்ணீரை மட்டும் கணக்கிட்டால் சுமார் 30,000 million cubic feet-க்கு அதிகமாய் இருக்கிறது. இந்த 30,000 million cubic feet நீர் மூன்று லட்சம் ஏக்கராவிற்கு, பொள்ளாச்சி, உடுமல்பேட்டை பல்லடம், தாராபுரம் தாலூக்காக்களில் தண்ணீர் பாயும். அது சம்பந்தமாக கணக்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, திருவாங்கூர்-கொச்சிச் சர்க்காருடைய பிரதேசத்தில் இருந்து நாம் தண்ணீர் எடுப்பது என்ற பிரச்சினை இப்போது இல்லை. சில அணைக்கட்டுகள் அவர்களுடைய பிரதேசத்தில் கட்டி, நம்முடைய இந்த ராஜ்ஜியத்தில், கோயமுத்தூர் ஜில்லாவில் உற்பத்தியாகக்கூடிய தண்ணீரை எல்லாம், நம்முடைய தேசத்துக்கே திருப்பவேண்டும் என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை. நம்முடைய அரசியல் சட்டபடி, 162-வது section 3-வது பிரிவுப்படி, இரண்டு ராஜ்யங்கள் மத்தியில் போகக்கூடிய நதிகள் சம்பந்தமான, பிரச்னைகளில், மத்திய சர்க்கார் தலையிட்டு, தனிப்பட்ட முடிவு செய்யலாம் என்று சொல்ல, அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது. இப்போது அது சம்பந்தமான சட்டம் பார்லிமெண்டில் கூடிய சீக்கிரம் நிறைவேற யிருக்கிறது. ஆகவே, உடனடியாக, சர்க்கார் இந்தத் திட்டத்தை, இந்த 2-வது ஐந்தாண்டுத் திட்ட திட்ட காலத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளுவோமேயானால், அப்போது தான் இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நம்முடைய ராஜ்ய என்ஜீனியர்களுக்கு வேலை இருக்கும், இல்லாவிட்டால், P.W.D. என்ஜீனியர்களுக்கெல்லாம், கட்டிடங்களுக்கு வெள்ளை அடிப்பது போன்ற வேறு வேலை இருக்கும் என்று நான் எச்சரிக்கிறேன். ஆகவே, சர்க்காரை, இந்தத் திட்டத்தை அமுல் நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் இருக்கிற, ஆனைமலை எஸ்டேட்ஸில், வேலை செய்யும் தொழிலாளர்களால் சர்க்காருக்கு வருஷம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. சுமார் 80 லட்சம் ரூபாய் சர்க்காருக்கு, ஆனைமலை பிரதேசத்தில் விவசாய வருமான வரி மூலமாக வருமானம் வருகிறது. இது தவிர, மத்திய சர்க்காருக்கு, இந்த Excise வரி மூலம் ஒரு கோடி ரூபாய்க்கு மேலே, வருஷா வருஷம் போகிறது. அந்த மக்களுக்கு விவசாயத்தில், வாழ்வதற்கான சௌகரியங்களில், அநேக கஷ்டங்கள் இருக்கின்றன, முக்கியமாகக் கல்வித் துறையில். அந்த பிரதேசத்தில் சுமார் 70 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். 40 ஆயிரம் வோட்டர்கள் இருக்கிறார்கள். அங்கே ஒரே ஒரு உயர்தரப் பள்ளிதான் இருக்கிறது. இன்னும் அதிகமான உயர்தரப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். இதற்குச் சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தவிர, அங்கு ஆனைமலைப் பிரதேசத்தில் விவசாயம் செய்வோரில் அதிகம்பேர் ஹரிஜனங்கள். அவர்கள் கல்வித்துறையில் பிற்போக்காய் இருக்கிறதால், அதிகமான உயர்தரப் பள்ளிகள் அந்தப் பிரதேசத்தில் அவசியம் ஆரம்பிக்க வேண்டியது முக்யம் என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இதைத் தவிர, அந்த பிரதேசத்தில், எஸ்டேட்டில், குடி இருக்கும் இடங்களில், கட்டிடம் மிகவும் வசதிக் குறைவானது, அசௌகர்யமாய் இருக்கிறது என்பதை நம் அமைச்சர்களில், ரெவின்யூ மந்திரி கனம் ஸ்ரீ மாணிக்கவேலு அவர்களும், முன்னர் தொழில் மந்திரியாய் இருந்த டாக்டர் கிருஷ்ணராவ் அவர்களும் நேரடியாகப் பார்த்துவிட்டு, அங்கு வசதி மோசமாக இருக்கிறது, கூடிய சீக்கிரத்தில் இது சீர்படுத்தப்படவேண்டும் என்று அங்கே சொல்லி யிருக்கிறார்கள். அது சம்பந்தமாக, ஸ்ரீ கிருஷ்ணராவ் அவர்கள் Ooty-ல் நடந்த plantation கூட்டத்தில் கூட பேசியிருக்கிறார், "நான் நேரடியாகப் பார்த்து இருக்கின்றேன். 12' × 10' இருக்கக்கூடிய கட்டிடத்தில், மூன்று குடும்பங்கள் ஒன்றாக வசிக்கிறார்கள்" என்று சொன்னார். ஆகவே, இந்த நிலைமையைக் கவனித்து, கட்டிடங்களுக்குச் செலவுபண்ணி, பரவலாக, சர்க்கார் உடனடியாக அங்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குடி தண்ணீர் வசதி செய்யவேண்டும். இது போன்ற பல வசதிகள் செய்வதற்கு, உடனடியாக பணவசதி யில்லாவிட்டால் சர்க்கார் கடன் கொடுத்து, நீண்டகாலத் தவணையில், அவர்களிடமிருந்து வசூல்

10th August 1956] [Sri N. Mahalingam]

செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதை ஆலோசனை செய்து, பிரதேசங்களில், வீடு கட்டும் திட்டத்தை அமுல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI R. KRISHNAN : മിസ്റ്റർ, ചെയർമാൻ, സർ, മലബാറിലേയും തെക്കൻ -30 p.m
കർണ്ണാടകത്തിലേയും മെമ്പർമാർ യാത്രപറഞ്ഞുകൊണ്ട് ആരംഭിക്കുന്ന ഗവർണ്ണരുടെ പ്രസംഗം ഭാഷാസംസ്ഥാനങ്ങളുടെ ആഗമനത്തെ സംബന്ധിച്ചു ഉറപ്പു നൽകുന്നുണ്ടെങ്കിലും, പതിവുപോലെ മലബാറിനെ അവഗണിച്ചിട്ടുണ്ടെന്നാണ് എനിക്കു പറയാനുള്ളത്. ഭാഷാ സംസ്ഥാനങ്ങൾ രൂപമെടുക്കാൻ പോവുകയാണെന്ന അർത്ഥത്തിൽ ഗവർണ്ണർ പ്രസംഗിച്ചിട്ടുണ്ടെങ്കിലും ഇന്നും ദക്ഷിണപ്രദേശത്തിനുവേണ്ടിയുള്ള ഒരു ആഹ്വാനം ഈ സഭയിൽ മുഴക്കികേൾക്കുകയുണ്ടായി. എന്റെ ബഹുമാന്യ സ്നേഹിതൻ ശ്രീ കുട്ടികൃഷ്ണൻ നായർ മററു പ്രശ്നങ്ങളെയെല്ലാം മാററിവച്ചുകൊണ്ട് ദക്ഷിണപ്രദേശരൂപീകരണത്തിന്റെ ആവശ്യകതയെക്കുറിച്ചു വാദിക്കാനാണ് അദ്ദേഹത്തിന്റെ സമയം വിനിയോഗിച്ചത്. നാട്ടുകാർ ആവശ്യപ്പെട്ടതും ഗവർമ്മേണ്ടുകൾ തമ്മിൽ കൂടിയാലോചിച്ചു തീരുമാനിച്ചതുമായ ഭാഷാസംസ്ഥാനങ്ങൾ കൈവിട്ടിട്ടു നേതാക്കന്മാർ തമ്മിൽ കൂടിയാലോചിച്ചാൽ ഇനിയും ദക്ഷിണപ്രദേശത്തിനുള്ള സാദ്ധ്യതയുണ്ടെന്നു അദ്ദേഹം വാദിക്കുന്നു. ജനങ്ങളുടെ അഭിലാഷങ്ങൾക്കെതിരായി നേതാക്കന്മാർ കൂടിയാലോചിച്ചു അംഗീകരിക്കുന്ന തീരുമാനങ്ങളെ നാട്ടുകാർ എങ്ങനെയാണ് സ്വീകരിക്കുന്നതെന്നു ഗുജറാത്തിലും മഹാരാഷ്ട്രത്തിലും മററും നാം കണ്ടുകൊണ്ടിരിക്കയാണ്. അങ്ങനെയിരിക്കുന്ന ഒരു ഘട്ടത്തിലാണ് എന്റെ സ്നേഹിതൻ ഇത്തരം വാദങ്ങളെല്ലാം ഉന്നയിക്കുന്നത്.

മലബാറിലെ ജനങ്ങളുടെ അടിയന്തിരാവശ്യങ്ങളെ സംബന്ധിച്ചേടത്തോളം ഗവർണ്ണരുടെ ഇപ്പോഴത്തെ പ്രസംഗവും പഴയ പ്രസംഗങ്ങളിൽനിന്നും വ്യത്യസ്തമല്ല. രണ്ടാം പഞ്ചവത്സരപദ്ധതിയിൽ മലബാറിനു അർഹതയുള്ള വിഹിതം കൊടുക്കുമെന്നുള്ളതിനു ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ യാതൊരുറപ്പും നൽകീട്ടില്ല. ഏതെല്ലാം പദ്ധതികൾ ഉൾപ്പെടുത്തീട്ടുണ്ട്, എന്തെല്ലാം വ്യവസായങ്ങൾക്കു തുക കണ്ടിട്ടുണ്ട്, എത്ര പണം നീക്കിവച്ചിട്ടുണ്ട് എന്നൊന്നു പരിശോധിച്ചാൽ വളരെ വളരെ വിരളമായേയുള്ളുവെന്നു കാണാം. ഒരു ചെറിയ ഇൻഡസ്ട്രിയൽ എസ്റ്റേററു ഉള്ളതൊഴിച്ചാൽ മററു വളരെയൊന്നും കാണാനില്ല. മീങ്കര പദ്ധതിയുടെ പണി ആരംഭിക്കാൻ പോവുകയാണ്. എന്നാൽ ഇന്നു നിശ്ചയിച്ചിരിക്കുന്നതിനേക്കാൾ കൂടുതൽ വിപുലമായ ഒരു പദ്ധതി സ്വീകരിക്കുകയാണെങ്കിൽ ഇപ്പോൾ കണക്കാക്കപ്പെട്ടിരിക്കുന്നതിലും എത്രയോ അധികം ഏക്കർ കൃഷിസ്ഥലങ്ങളിൽ ജലസേചനം നടത്താൻ ഈ പദ്ധതികൊണ്ടു സാധിക്കുമെന്നാണ് എഞ്ചിനീയർമാരും മററു കാര്യവിവരമുള്ളവരും പറയുന്നത്. ഇക്കാര്യം ഗവർമ്മേണ്ട് പുനരാലോചിക്കണമെന്നാണ് ഞാൻ ആവശ്യപ്പെടുന്നത്.

സർ, മലബാർ ഒഴിച്ചുള്ള പ്രദേശങ്ങൾക്കുവേണ്ടി ഒരു പ്രത്യേക മര്യാദപ്പാട്ടനിയമം കൊണ്ടുവരാൻപോകുന്നുണ്ട്. മലബാറിൽ ഇന്നു ഒരു നിയമം നിലവിലുണ്ട്, അതായതു, മലബാർ കുടിയായ്മ (ഭേദഗതി) നിയമം. ഈ നിയമമനുസരിച്ചു മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിക്കുന്നതിനു പാട്ടക്കോടതികൾ ഏർപ്പെടുത്തിയിട്ടുണ്ട്. എന്നാൽ മിക്ക പാട്ടക്കോടതികളിൽനിന്നും കുടിയാന്മാർ ആഗ്രഹിക്കുന്ന ആനുകൂല്യങ്ങൾ അവർക്ക് ലഭിക്കുന്നില്ല. കരാർപാട്ടത്തിലും കവിഞ്ഞ പാട്ടം കോടതിയിൽനിന്നു നിശ്ചയിച്ചിട്ടുള്ള കേസുകളുണ്ട്. ആദ്യത്തെ വിളയുടെ തോതനുസരിച്ച് രണ്ടാമത്തെ വിള കണക്കാക്കിവരുന്നുണ്ട്. കൃഷിച്ചെലവിനു 25 പറ വകയിരുത്തണമെന്നു നിയമത്തിൽ പറയുന്നുണ്ടെങ്കിലും 20 പറയും മററുമാണ് പാലക്കാട്ട മുതലായ പാട്ടക്കോടതികൾ കണക്കാക്കിവരുന്നത്. നിലത്തിന്റെ ഇന്നത്തെ തരം നോക്കാതെ സെററിൽമെൻറ് കാലത്തു തരംതിരിച്ചതനുസരിച്ചു വിള കണക്കാക്കുന്ന ഒരു സമ്പ്രദായവും സ്വീകരിച്ചുകാണുന്നുണ്ട്. ഇതിന്റെയെല്ലാം ഫലമായി കോടതിയിൽനിന്നും മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിച്ചുകിട്ടുമ്പോൾ കുടിയാൻ കരാറുപാട്ടത്തിലും കവിഞ്ഞ പാട്ടമാണ് കൊടുക്കേണ്ടിവരുന്നത്. സമഗ്രമായ ഒരു ഭൂപരിഷ്കരണം നടപ്പിൽവരുത്തേണ്ട കാലം അതിക്രമിച്ചിരിക്കുന്നു. മലബാർ കുടിയായ്മനിയമത്തിനുപകരം പുരോഗമനപരമായ ഒരു പുതിയ നിയമംതന്നെ കൊണ്ടുവരേണ്ടതു് ഇന്നത്തെ ഒരടിയന്തിരാവശ്യമാണ്. ഇന്നത്തെ നിയമത്തിന്റെ പ്രവർത്തനം പരിശോധിച്ചാൽ നിയമംകൊണ്ടുദ്ദേശിച്ച ഗുണം കൃഷിക്കാർക്കും കുടിയാന്മാർക്കും

[Sri R. Krishnan] [10th August 1956

കിട്ടുന്നുണ്ടെന്നു പറയാൻ വയ്യ. അതുകൊണ്ടു മലബാറിനെ ഒഴിച്ചുനിറുത്തിക്കൊണ്ടുള്ള ഒരു മര്യാദപ്പാട്ടനിയമമല്ല, മലബാറിനെക്കൂടി ഉൾപ്പെടുത്തിക്കൊണ്ടുള്ള ഒരു മര്യാദപ്പാട്ട നിയമമാണു് മലബാറിലെ കൃഷിക്കാർ ആവശ്യപ്പെടുന്നതു്.

കർഷകത്തൊഴിലാളികളുടെകാര്യം ഇക്കഴിഞ്ഞ നാലഞ്ചുകൊല്ലങ്ങളായി ഞാൻ ഈ സഭയിൽ ഉന്നയിച്ചുകൊണ്ടിരിക്കയാണു്. കർഷകത്തൊഴിലാളികൾക്കു് മിനിമം വേജസ് നിശ്ചയിച്ചുകൊണ്ടുള്ള ഒരു നിയമം അത്യാവശ്യമാണെന്നു പല പ്രാവശ്യം ഗവർമ്മേണ്ടിൻെറ ശ്രദ്ധയിൽപ്പെടുത്തിയിട്ടും അങ്ങനെയൊരു നിയമം വരുന്നുണ്ടെന്നുള്ളതിന്നു് യാതൊരു സൂചനയും ഇതുവരെ ലഭിച്ചിട്ടില്ല. ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ അതിനെപ്പററി യാതൊന്നും പറഞ്ഞുകാണുന്നില്ല.

സർ, കേരളസംസ്ഥാനം രൂപമെടുക്കാൻപോകുന്ന ഈ ഘട്ടത്തിൽ മലബാറിൽനിന്നു മരങ്ങളും ആനകളും യന്ത്രസാമഗ്രികളും മററും തമിഴ്നാട്ടിലേക്കു കടത്തിക്കൊണ്ടുപോകുന്നതായി പല ആക്ഷേപങ്ങളും ഈ സഭയിലും സഭയ്ക്കു പുറത്തും പൊന്തിവന്നിട്ടുണ്ടു്. പത്രങ്ങളിൽ ഇതിനകം നിരവധി ആക്ഷേപങ്ങൾ കാണാനിടയായി. ഗവർണ്ണരുടെ പ്രസംഗത്തിൽ അതിനെപ്പററി യാതൊന്നും പറഞ്ഞുകാണുന്നില്ല. മന്ത്രിമാർ പറയാറുണ്ടു് ഇതെല്ലാം വെറുതെയാണു്, അങ്ങനെയൊന്നും ഉണ്ടായിട്ടില്ല എന്നു്. എങ്കിലും ഇതിൽ കുറെയൊക്കെ വാസ്തവം ഉണ്ടെന്നാണു് സ്ഥലത്തുപോയി അന്വേഷണം നടത്തിയ ചില ജനപ്രതിനിധികൾ പറഞ്ഞിട്ടുള്ളതു്. എതിർകക്ഷികളിൽപെട്ട ആളുകൾ മാത്രമല്ല, കോൺഗ്രസ്സിൽ ഉത്തരവാദപ്പെട്ട സ്ഥാനങ്ങൾ വഹിക്കുന്ന ആളുകൾ തന്നെയും, എം. പി. സി. സി. പ്രസിഡണ്ടു് കെ. വാസുമേനോൻതന്നെയും, ഈ ആക്ഷേപങ്ങളിൽ കുറേ വാസ്തവമുണ്ടെന്നു പ്രസ്താവന പുറപ്പെടുവിച്ചിട്ടുണ്ടു്. കോടിക്കണക്കിന്നുറുപ്പിക വിലപിടിപ്പുള്ള മുപ്പെത്താത്ത മരങ്ങൾ മുറിച്ചു കടത്തിയതായി കോൺഗ്രസ്സ് നേതാക്കന്മാരും കോൺഗ്രസ്സ് പത്രങ്ങളുംതന്നെ ആക്ഷേപം പുറപ്പെടുവിച്ചിട്ടുണ്ടു്. എന്നിട്ടും ഗവർമ്മേണ്ടും ഗവർമ്മേണ്ടിൻെറ വക്താക്കളും പറയുന്നതു് ഈ ആക്ഷേപങ്ങൾക്കൊന്നും അടിസ്ഥാനമില്ലെന്നും ഇതെല്ലാം വെറുതെ പറഞ്ഞുണ്ടാക്കിയതാണെന്നുമാണു്. ഈ പരിതഃസ്ഥിതിയിൽ ഇതിനെപ്പററി ഒരന്വേഷണം നടത്തേണ്ടതു് അത്യാവശ്യമാണെന്നു ഞാനും അഭിപ്രായപ്പെടുന്നു. ജനങ്ങളുടെ മനസ്സിൽ ഇന്നു വലിയ ഒരു അവിശ്വാസവും ഉൽക്കണ്ഠയും ആശയക്കുഴപ്പവും നിലനിന്നുവരുന്നുണ്ടു്. അതു നീക്കുന്നതിന്നും വാസ്തവസ്ഥിതി വെളിച്ചത്തു കൊണ്ടുവരുന്നതിനും ഈ ആക്ഷേപങ്ങളെപ്പററി അന്വേഷിക്കുന്നതിന്നു മലബാറിലേയും തമിഴ്നാട്ടിലേയും തെക്കൻ കർണ്ണാടകത്തിലേയും എം. എൽ. എ. മാരടങ്ങിയ ഒരനൌദ്യോഗികക്കമ്മിററിയെ നിശ്ചയിക്കേണമെന്നുള്ള ഒരു നിർദ്ദേശം എൻെറ ഒരു സ്നേഹിതൻ നേരത്തേതന്നെ സഭയിലുന്നയിച്ചിട്ടുണ്ടു്. ആ നിർദ്ദേശത്തെ ഞാൻ അനുകൂലിക്കുന്നു. അങ്ങനെ ഒരു കമ്മിററിയെ നിയമിച്ചു അന്വേഷണം നടത്തിയതിന്നുശേഷം മലബാറിന്നു അവകാശപ്പെട്ടതായ എന്തെങ്കിലും മററു സ്ഥലങ്ങളിലേക്കു് കടത്തിക്കൊണ്ടുപോയിട്ടുണ്ടെന്നു കാണുകയാണെങ്കിൽ അതു മലബാറിന്നു തിരിയെ കൊടുക്കണമെന്നുംകൂടി ഞാൻ ഗവർമ്മേണ്ടിനോടു ആവശ്യപ്പെടുന്നു.

എൻ.ജി.ഒ. മാരെപ്പററി ചോദ്യങ്ങളുന്നയിച്ചപ്പോൾ ബഹുമാനപ്പെട്ട ധനകാര്യമന്ത്രി പറയുകയുണ്ടായി ഒരുറുപ്പികവീതം കൂട്ടിക്കൊടുക്കണമെങ്കിൽതന്നെ 20 ലക്ഷത്തിലധികം ഉറുപ്പികവേണമെന്നും താങ്ങാനാവാത്ത നികുതിഭാരം നിലവിലുണ്ടെന്നു ആവലാതിയുള്ളപ്പോൾ ഒരു പുതിയ ആദായമാർഗ്ഗം മെമ്പർമാർ ചൂണ്ടിക്കാണിച്ചുകൊടുത്താൽ അതിനെപ്പററി ആലോചിക്കാമെന്നും. എനിക്കു ഒരു നിർദ്ദേശമുണ്ടു്. ജെമിന്മാരി നിറുത്തലാക്കിയതിന്നുശേഷം ജെമിന്മാരന്മാർക്കു് പ്രതിഫലമായി ലക്ഷക്കണക്കിനു ഉറുപ്പിക കൊടുത്തുവരുന്നുണ്ടു്. ജെമിന്മാരന്മാരുടെ ജീവിതം എൻ. ജി. ഒ. മാരുടേതുപോലെ അത്ര വളരെ കഷ്ടസ്ഥിതിയിലൊന്നുമല്ല. അതുകൊണ്ടു ജെമിന്മാരന്മാർക്കു് കൊടുക്കാനുള്ളതിനെ ലോണായിട്ടു കണക്കാക്കുക, പതിനഞ്ചോ ഇരുപതോ കൊല്ലത്തിന്നുശേഷം സൌകര്യംപോലെ കൊടുത്തുതീർക്കാമെന്നുള്ള വ്യവസ്ഥയിൽ. തിരിച്ചു കൊടുത്തില്ലെങ്കിലും തരക്കേടില്ലെന്നാണു് എൻെറ അഭിപ്രായം. അന്നു കൊടുക്കാൻ തരപ്പെട്ടാൽ കൊടുക്കുന്നതിനും വിരോധമില്ല. ഈ നിർദ്ദേശം സ്വീകരിക്കാൻ ഗവർമ്മേണ്ടു ഒരുക്കമാണെങ്കിൽ എൻ. ജി. ഒ. മാർ ആവശ്യപ്പെടുന്നപോലുള്ള ശമ്പളവർദ്ധനയും ക്ഷാമപ്പടി വർദ്ധനയും അനുവദിച്ചുകൊടുക്കാൻ ഗവർമ്മേണ്ടിന്നു സാധിക്കുമെന്നാണു് എനിക്കു തോന്നുന്നതു്.

10th August 1956] [Sri R. Krishnan]

